www.padippakam.com

இறால் பண்ணை அழிப்பு போராட்ட செய்திகள்

15 மே '95 ரூ. 3.00

# புதிய ஜனநாயகம்

## கையாலாகா எதிராளிகள் ஊழல்ராணி ஆணவ ஆட்சி




படிப்பகம்

www.padippakam.com

27-ம் பக்கத் தொடர்ச்சி

கூடாது என்ற அவர்கள் இயக்கத் தலைமையின் ஆணையை கட்டுப்பாடோடு ஏற்றுக் கொண்டு செயல்படுத்தினார்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான், கிராம மக்கள் அங்கு வேலை செய்த தோழர்கள் அனைவருக்கும் தங்குமிடமும், உணவும் தந்து, இறுதியில் இருந்த 7 தோழர்கள் கைது செய்யப்படும் வரை ஆதரித்தனர். போலீசுக் கெடுபிடி அதிகமாக அதிகமாக, தோழர்களை பல்வேறு தெருக்களில், இடங்களில், வீடுகளில் மாற்றி மாற்றி தங்கவைத்து பாதுகாத்தனர். ஆட்காட்டிகள் மூலமாக மோப்பம் பிடித்து தோழர்கள் தங்கியிருந்த வீட்டை நெருங்கும் போலீசு போதெல்லாம், வீட்டின் முன்பு பெண்கள் கூடி போலீசை திசை திருப்பி விடுவார்கள். பல தடவை போலீசு அடித்து, மிரட்டி, ஆசை காண்பித்து, நயவஞ்சகமாக இப்படி அனைத்து ஆயுதங்களைப் பிரயோகித்து கேட்ட போதெல்லாம், கிராம மக்கள் யாரும் தோழர்களைக் காட்டிக் கொடுக்க சம்மதிக்கவில்லை.



வடமாவட்டங்களைச் சேர்ந்த தோழர்களின் ஊர்வலம்.

இறுதியில் அந்த நாளும் வந்தது. கிராமமே காக்கி மயமாக மாறி வந்த நேரம். ஆள்காட்டிகளின் அயரா உழைப்பினால் இறுதியில் தோழர்கள் (3 ஆண்கள், 3 பெண்கள், ஒரு குழந்தை) தங்கியிருந்த வீட்டை போலீசு முற்றுகையிட்டது. அந்த வீட்டுத் தாய் உடனே தோழர்களை ஒரு அறையில் அடைத்து கதவை மூடினார். வந்த போலீசிடம் இங்கு யாருமே இல்லை என்று உறுதியாகத் தெரிவித்தார். தயங்கிய போலீசு, வெளியேறுவது போல் மறைந்து நின்று பார்த்தது. உடனே ஒரு பூட்டை எடுத்து அந்த அறையை மூடுவதற்கு அந்தத் தாய் சென்றதை கவனித்த போலீசு இடியென வீட்டினுள் இறங்கியது. தடுக்கப்போன தாயை எட்டி உதைத்தது. தோழர்களை வெளியே இழுத்து வந்தது.

பின்னர் நடந்தது பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை. கிராமத்து மக்களும், கழனியும் மௌன சாட்சியமாய் நிற்க, தோழர்களை அடித்து துவைத்துக் கொண்டே கழினிகள் வழியாக போலீசு இழுத்துச் சென்றது. தோழர்களின் சட்டை, பேண்ட் கிழிந்து கந்தலாகும் வரை அடியும் தொடர்ந்தது. பெண் தோழர்களுக்கும் சரிசமமான பங்கு கிடைத்தது. தோழர்கள் முழக்கமெழுப்ப, அவை காடு - கழனியெங்கும் இடியென எதிரொலிக்க, மக்களையும் இழுத்து வந்தது. மறைவிடங்களில் நின்று பார்த்த சிலரும் செய்வதறியாமல் திகைத்து நின்றனர். முழக்கம் கண்ட போலீசு கடுப்பாக, அதில் ஒரு மிருகம் தோழர். வெண்ணிலாவின் இரண்டு வயது நிரம்பாத குழந்தையை அடித்து சுழற்றி கழனியில் வீசியது. பின்னர் அந்த மிருகம் கேட்டது, ''குழந்தைக்கு உயிர் இருக்கா இல்லையான்னு பாரு.''

கைதாகி சிறைக்குச் செல்லும் பெண் போராளிகள்.



குழந்தைக்கு உயிர் இருந்தது. இருக்கிறது. எளிதில் போக முடியாது. விழுந்த இடம் கழனி. பல நூறு ஆண்டுகள் அம்மக்களுக்கு வாழ்வளித்த மண். இன்று அந்த மண் விலை பேசப்படலாம். ஆனால் அந்த மண்ணின் மைந்தர்கள் நாளையேனும் தடுத்து நிறுத்துவார்கள். கழனி காக்க அடி வாங்கிய அந்தக் குழந்தையின் உயிரைப் பறிப்பதற்கு அந்த மண்ணும், மக்களும் சம்மதிக்க மாட்டார்கள். போராடுவார்கள். வெற்றி பெறுவார்கள்.

**செய்தியும் படங்களும்:**
**இறால் பண்ணை அழிப்புப் போராட்டக் கமிட்டி.**



படிப்பகம்

www.padippakam.com

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

பத்தாம் ஆண்டு

**11 - 12**

16 ஏப். - 15 மே '95

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.00
ஆண்டு சந்தா: ரூ. 72.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 16

அட்டை ஓவியம்: கரோ

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்
இரா. சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
25, அருணாசலம் தெரு,
ஜோதிராமலிங்க நகர்,
ஜாபர்கான் பேட்டை,
சென்னை - 600 083.

# ஈழம்: சமாதான முயற்சி தோற்றது

ஈழப் பிரச்சினைக்கு சமாதானபூர்வமான அரசியல் தீர்வு காண்பதற்காக இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே கடந்த ஆண்டு அக்டோபர் முதல் நடந்து வந்த அமைதிப் பேச்சுவார்த்தைகள் ஆறு மாதங்களுக்குப் பிறகு முறிந்துபோனது. இலங்கை அரசுத் தலைவர் சந்திரிகா குமாரணதுங்காவும் புலிப்படைத் தளபதி பிரபாகரனும் கைச்சாத்திட்ட ''பகை நிறுத்த ஒப்பந்தம்'' நூறாவது நாளன்று துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்டது. சந்திரிகா பிரதமரான உடனே துவங்கிய முதல் சுற்றுப் பேச்சு வார்த்தையின் படி வடக்கில் வாழும் ஈழத் தமிழர்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதே முதற்பணி என ஏற்றுக் கொள்ளப்பட்டு, 40 வகைப் பொருட்களுக்கான தடை நீக்கப்பட்டது. சந்திரிகா அரசுத் தலைவரான பிறகு பகை நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானது. அதை மேற்பார்வையிடுவதற்காக கனடா, நார்வே, நெதர்லாந்து ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளடங்கிய நான்கு கமிட்டிகள் நிறுவப்பட்டன. யாழ்ப்பாணத்துக்கு நிவாரணப் பொருட்களும் அனுப்பப்பட்டன; புலிகளும் தாம் பிடித்து வைத்திருந்த போர்க் கைதிகளை விடுவித்தனர். 4000 கோடி ரூபாய்க்கு ஈழ மக்களின் புனரமைப்புத் திட்டமொன்றை சந்திரிகா அரசு அறிவித்தது. ஆனால் அத்திட்டத்தை அமுலாக்கு முன்பாக பின்வரும் நான்கு நிபந்தனைகளை நிறைவேற்றும்படி புலிகள் கோரினர்; தடைகள் அனைத்தும் முற்றாக நீக்கப்பட வேண்டும்; யாழ்ப்பாணத்துக்கான வழித்தடங்கள் அனைத்தும் திறந்துவிட வேண்டும்; பகை நீக்க ஒப்பந்தம், போர் நிறுத்த ஒப்பந்தமாக உயர்த்தப்பட வேண்டும். புனரமைப்புத் திட்டங்களை அமலாக்கும் அதிகார அமைப்பு ஒன்று நிறுவப்பட வேண்டும்.

புலிகளின் இந்த நான்கு நிபந்தனைகளையும் சந்திரிகா அரசு ஏற்கவில்லை. பகை நீக்க ஒப்பந்தக் கமிட்டிகளின் செயல்பாட்டுக்குப் பிறகே மற்றவை எடுத்துக் கொள்ளப்படும் என்று வாதாடியது. ஆனால் அக்கமிட்டிகளின் செயல்பாட்டுக்கே இரண்டு நிபந்தனைகளைப் புலிகள் விதித்தனர். அவை: வடகிழக்குக் கடற்கரையில் மீன் பிடிக்கவும், படகுகள் போக வரவும் உள்ள தடைகளை நீக்க வேண்டும்; கிழக்கிழுள்ள புலிகள் தமது பாசறைக்கு வெளியே ஆயதங்களுடன் நடமாட அனுமதிக்க வேண்டும் என்பதாகும். பேச்சு வார்த்தைகள் வெறுமனே நீடிப்பதில் பொருளில்லை; உடனடித் தீர்வு காண வேண்டும் என்று கூறி விடுதலைப் புலிகள் கெடு வைத்தனர். இரண்டு முறை அதை நீட்டிக்கவும் செய்தனர். அதன் பிறகு மீன்பிடி, படகுப் போக்குவரத்துக்கான தடைகள் நீக்கப்பட்டன. ஆனாலும் படகுப் போக்குவரத்துக்கு தடைவிதித்துத் தாக்குதல் நடத்த முனைந்த இலங்கை கடற்படை களங்களைப் புலிகளின் கடற்படையினர் தகர்த்தனர். இதையே காரணங்காட்டி மீண்டும் மீன்பிடி, படகுப் போக்குவரத்துக்கு சந்திரிகா அரசு தடை விதித்தது. யானையிறவு பாதையைத் திறந்துவிட்ட அதேசமயம் வடக்கிற்குச் செல்லும் சங்குப்பிட்டி பாதையைத் திறந்துவிடவும், அவ்வழியே உள்ள பூநகரி இராணுவ முகாமை அகற்றவும் மறுத்துவிட்டது. எனவே பேச்சுவார்த்தையை ஒரு தலைப்பட்சமாக முறித்துக் கொண்ட புலிகள் இலங்கை இராணுவத்தின் மீது அடுத்தடுத்து வெற்றிகரமான தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். அந்த மோதல்களின் உச்ச கட்டமாக கடந்த மாத இறுதியில் சிங்கள விமானப்படையின் இரு விமானங்கள் மீது முதன்முறையாக ஏவுகணை ஏவி, சுட்டுவீழ்த்தி, நூற்றுக்கும் மேலானோரைப் புலிகள் கொன்றனர். இது இலங்கை மட்டுமல்ல இந்திய அரசையும் கதிகலங்கச் செய்துள்ளது. ஈழச் சிவிலியன்கள் மீது மீண்டும் குண்டு வீசித் தாக்குவதைத் துவங்கிய சிங்கள விமானப் படையை இத்தாக்குதல் முடக்கிவிட்டது.

12 ஆண்டுகளாக நீடிக்கும் உள்நாட்டுப் போரினால் களைத்துப் போன - வெறுத்துப் போன, மீளா துயரத்தில் மூழ்கிப் போன சிங்கள, தமிழ் ஆகிய இரு இனமக்களுமே சமாதானத் தீர்வையே நாடிப் பெரும்பான்மையாக வாக்களித்தனர். இதைப் புலிகளும் அங்கீகரித்தனர். ஆனால் அம்மக்களது பெருவிருப்பு தோல்வி கண்டுவிட்டது. இதற்குக் காரணமாக சந்திரிகா அரசும், விடுதலைப் புலிகளும் ஒருவர் மீது ஒருவர் மாறி மாறிக் குற்றஞ்சாட்டுகின்றனர். இருவரது வாதங்களிலும் பாதிபாதிதான் உண்மையிருக்கிறது. சூழ்நிலை நிர்பந்தங்கள், தமது வெற்றிகள், சமாதானத்தின் மீதான அக்கறை காரணமாக பேச்சு வார்த்தைக்கு சந்திரிகா வந்திருப்பதாகக் கூறிய புலிகள், பின்னர் அவர் தடுமாறி, ஊசலாடி, இறுதியில் சிங்கள இனவெறிக்குப் பலியாகிவிட்டதாக கூறுகின்றனர். பேச்சு வார்த்தைகள் என்ற பெயரால் இழுத்தடிப்பு, ஏற்றுக் கொண்டவற்றை அமலாக்க மறுப்பது, அரசியல் மட்டத்தில் சமாதானக் குழு வராமல் அதிகாரிகள், ஆலோசகர்களைக் கொண்டு நடத்துவது, ஈழப் பிரச்சினைக்கான தீர்வு எதையும் முன்வைக்க மறுப்பது ஆகியவை சந்திரிகா அரசு மீது புலிகள் கூறும் புகார்கள். கொலை வெறிபிடித்த புலிகளுக்கு சமாதான வாழ்க்கை குறித்த பீதி, தமிழர்களின் ஏகபிரதிநிதிகளாகத் தம்மை மட்டுமே அங்கீகரிக்க வேண்டும் என்கிற அதிகார வெறி, சிங்கள இன மக்களது தயார்நிலை - மனப்போக்கை புரிந்து கொள்ளத் தவறுவது ஆகியவை சந்திரிகா அரசு கூறும் புகார்கள். முக்கியமாக சமாதானத் தீர்வில் நம்பிக்கை இல்லாத புலிகள், பகை நிறுத்தத்தைத் தமது படைபலப் பெருக்கத்துக்குத்தான் பயன்படுத்துவதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றனர். இது இரு தரப்புக்குமே பொருந்தக்கூடியதுதான். மொத்தத்தில் ஈழப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாமல் நீடிப்பதற்கான காரணங்கள் இரண்டுதான். முதலாவதாக ஈழத் தமிழரைத் தனிதேசிய இனமாகவும் அதன் சுயநிர்ணய உரிமையையும் வடக்கு - கிழக்கு மாகாண ஒருமைப்பாட்டையும் சிங்கள அரசுகள் அங்கீகரிக்க மறுக்கின்றன. இரண்டாவதாக, புலிகள் தாம் மட்டுமே ஈழ மக்கள் அனைவரின் பிரதிநிதிகள் என்று பாவித்து, தனது படையின் இராணுவ அதிகாரத்துக்கான நோக்கத்தை மட்டுமே குறி வைத்துப் போரிடுவது. இந்த இரண்டு காரணங்களால் சிங்கள இராணுவ முற்றுகையின் கீழும், புலிகளின் பாசிச ஒடுக்குமுறையின் கீழும் ஈழத் தமிழர்கள் சிக்கித் தவிக்கின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com

# ஊழல் நாயகி அட்டூழியம் கையாலாகாத எதிர்க்கட்சிகள்

● ஜெயலலிதா மீது சென்னாரெட்டி - சுப்பிரமணிய சுவாமி தொடுத்திருக்கும் இலஞ்ச - ஊழல் கிரிமினல் குற்ற விசாரணை.

● ஜெயலலிதா-வை ஆட்சியிலிருந்து விரட்டுவதற்கு எதிர்க்கட்சிகள் அனைத்தும் கொடுத்துவரும் கூட்டுத் தாக்குதல்,

— இவற்றைவிட, இவற்றை முறியடிப்பதற்கு ஜெயலலிதாவும் அவரது கூட்டாளிகளும் மேற்கொள்ளும் முயற்சிகளை நாம் வரவேற்கிறோம்!

திடுக்கிட வேண்டாம்! இதற்குக் காரணம் ஜெயலலிதா ஒரு பெண் என்பதால் அல்ல. அவர் பக்கம் நியாயமும் தர்மமும் இருப்பதால் அல்ல. இந்த ''வாழ்வா - சாவா'' போராட்டத்தில் அவர் வென்று விடவேண்டும் என்கிற அக்கறையுமல்ல.

நாடாளுமன்ற, சட்டமன்ற ஜனநாயக அமைப்பு முறையின் வரம்புகள் இவைதாம் என்று ஜெயலலிதா கும்பல் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. இதற்காகத்தான் அம்முயற்சிகளை நாம் வரவேற்கிறோம்.

மக்கள் நலனுக்கோ, உரிமைக்கோ போராடி வெல்வதற்கு இங்கே சாத்தியமே இல்லை. ஆனால், இலஞ்ச - ஊழல் கிரிமினல் குற்றங்கள், அராஜக வன்முறை வெறியாட்டங்கள், ஜனநாயக இயக்கங்கள் மீதான தாக்குதல்கள் என்று சட்ட விரோத, சமூக விரோதச் செயல்கள் எதுவானாலும் செய்துவிட்டு நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு பவனிவரலாம். இது தான் நாடாளுமன்ற, சட்டமன்ற ஜனநாயகத்தின் மாண்பு என்று ஜெயலலிதா கும்பல் நிரூபித்துவிட்டது.

பாசிஸ்டுகள் இப்படிச் செய்வது நமது நாட்டு அனுபவத்திலும் கூட புதிதல்ல. பதவி பறிபோய்விடும் ஆபத்து வந்தபோது, 1975-76-இல், அவசர நிலை ஆட்சிப் பிரகடனம் செய்யப்படவில்லையா? அந்தப் பிரகடனத்திற்குச் சில நாட்களுக்கு முன்பு பாசிச இந்திரா கும்பல் அரங்கேற்றிய எல்லா வக்கிரமான வன்முறை - அராஜகச் செயல்களையும் தான் ஜெயலலிதா கும்பல் இப்போது நடத்திக் கொண்டிருக்கிறது.

ஆனால் இந்திராவுக்கும் ஜெயலலிதாவுக்கும் பரம்பரை வேறுபாடும், தலைமுறை இடைவெளியும் இருக்கத்தானே செய்கிறது. அவர் நேரு பரம்பரை; கொள்கை - சித்தாந்தம் பேசிப் பித்தலாட்டம் செய்து ஆட்சிக்கு வந்தவர். இவர், சினிமா நடிகை என்ற பாரம்பரியம், எம்.ஜி.ஆரின் உடன்கட்டை என்ற வாரிசுரிமை, இலவச - கவர்ச்சி, பொறுக்கி அரசியல் மட்டுமே ஆதாரமாகக் கொண்டவர். ''பொறுக்கி அரசியலின் நாயகி'' என்கிற நமது மதிப்பீட்டிற்குப் பொருத்தமாக அருவெறுக்கத்தக்க ஆபாசம் கலந்து செயல்படுகிறார்.

பணபலம், போலீசு - ரௌடிப்படை அடங்கிய பாசிச கிரிமினல் பலம் ஆகிய இரண்டை மட்டுமே வைத்து, கையாலாகாத எதிர்க்கட்சிகளை அடுத்த பொதுத் தேர்தல்களில் முறியடித்துவிடலாம் என்கிற முழு நம்பிக்கையோடு ஆட்சியின் நான்காம் ஆண்டில் அடியெடுத்து வைத்தது ஜெயலலிதா கும்பல். அதன் கோயா பல்சு பாணிப் பிரச்சாரமும், எதிர்க்கட்சிகள் மீது போலீசு - ரௌடிப்படைத் தாக்குதலும் உச்சக் கட்டத்தை எட்டியது. குறிப்பாக ஜெயலலிதாவின் 47-வது பிறந்த நாள் கொண்டாட்டம்; பா.ம.க. தலைவர் ராமதாசு தலைமையிலான ''தடா'' எதிர்ப்பு ஊர்வலத்தின் மீது கண்மூடித்தனமான தடியடி வெறியாட்டம்; நாஞ்சில் மனோகரன் - மு.க. ஸ்டாலின் பொதுக் கூட்டங்கள் மீது ரௌடிகள் தாக்கிக் கலைத்தல்; காங்கிரசு கட்சி எம்.எல்.ஏக்களையும் எதிர்க்கட்சித் தலைவரையும் அடித்துத் தூக்கி வெளியே வீசுதல் என்று ஆளுங்கட்சி அராஜகம் தலைவிரித்தாடியது.

இந்தச் சமயத்தில் தமிழக ஆளுநர் சென்னா ரெட்டி ஜெயலலிதா கும்பல் மீதான இலஞ்ச ஊழல் கிரிமினல் குற்றச்சாட்டுக்களுக்காக வழக்குத் தொடுப்பதற்கு சுப்பிரமணிய சுவாமிக்கு அனுமதி வழங்கியது அதற்குப் பேரிடியாய் அமைந்துவிட்டது. பீதியில் கதிகலங்கிப் போய், இந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக ஜெயலலிதா கும்பல் அடுத்தடுத்து எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் புதை மணலுக்குள் சிக்குண்டவன் செய்வதறியாது காலை அழுந்தி எம்பிக் குதித்து வெளியேற முயன்று மேலும் ஆழத்துக்குப் போவதைப்போல இருக்கிறது.

சு.சுவாமி, ஆளுநரின் அனுமதி பெற்றுவிட்டதாக அறிவித்த அன்றே, ''எனது மனச்சாட்சி தெளிவாக, சுத்தமாக இருக்கிறது; இதுபோல பல சவால்களையும் நான் சந்தித்திருக்கிறேன்; மக்கள் ஆதரவுடன் இந்தச் சவாலையும் நான் சந்திப்பேன்'' என்று அறிக்கை விட்டார் ஜெயலலிதா. ஆனால் அடுத்தடுத்த நடவடிக்கைகள் இதற்கு நேரெதிராய் அடிபட்ட வெறிநாயின் பாய்ச்சலாய் இருந்தது. மந்திரிகள், எம்.எல்.ஏக்கள், வாரியத் தலைவர்கள் தலைமையில் ஆளுங்கட்சி ரௌடிகளின் முழு பலமும் சென்னா ரெட்டி, சு.சுவாமி மீது ஏவிவிடப்பட்டது.

சென்னா ரெட்டி கொடும்பாவிகள் பல இடங்களில் கொளுத்தப்பட்டன. திருச்சி, திண்டிவனம், சென்னை, எழும்பூர் ஆகிய இடங்களில் கறுப்புக் கொடி, ஆர்ப்பாட்டம் என்கிற பெயரில் தாக்க முயன்ற அதே சமயம், சாராயம், கறி, கூலி கொடுத்துக் கொண்டு வரப்பட்ட பெண்களை வைத்து எழுத முடியாத ஆபாச வசவுகள் அடங்கிய கூச்சல்கள் போட்டனர். சென்னாரெட்டி, சு.சுவாமி மீது வசை பாடுவதற்கென்றே பொதுகூட்டங்கள் நடத்தப்பட்டன. ஆளுநர் மாளிகை தினந்தோறும் ரௌடி கும்பலால் முற்றுகைக்குள்ளானது.

சென்னை, தேனாம்பேட்டையில் பொதுக்கூட்டம் நடத்திய சு.சுவாமி மீது திராவக பல்புகள், பாட்டில்கள், அழுகிய முட்டைகள், கிழிந்த செருப்புகள் வீசியது. சாராய போதை தலைக்கேறிய ஆளுங்கட்சி ரௌடிகள் படை. பல இடங்களில் அவரைத் தாக்க முயன்றனர். ஆளுநர் உத்திரவை ரத்து செய்யக் கோரும் ஜெயலலிதாவின் வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றத்துக்குள்

உயர் நீதிமன்றத்தில் ஆபாச நடனம், ஆபாச வசவுகள் மூலம் சுப்ரமணிய சாமிக்கு பதிலடி கொடுக்கும் அ.தி.மு.க. மகளிரணி





படிப்பகம்

www.padippakam.com

புகுந்து இதேபோல தாக்குதல்கள் நடத்தினர். எல்லா இடங்களிலும் ஆளுங்கட்சி ரௌடிப் பெண்கள் முக்கால் நிர்வாண ஆட்டம் போட்டு ஆபாசமாக வசவு பாடினர்.

ஜெயலலிதாவுக்கு கொலை மிரட்டல் விட்டதாக ஒரு வழக்கு; புலிகள் தலைவர் பிரபாகரன் ஒரு 'சர்வதேசப் பறையா'' என்று ஆங்கிலச் சொல்லைப் பயன்படுத்தி சு.சுவாமி குறிப்பிட்டது, தாழ்த்தப்பட்ட மக்களை இழிவுபடுத்துவதாகும் என்று தீண்டாமைச் சட்டத்தின் கீழ் ஒரு வழக்கும் போட்டது ஜெயலலிதா கும்பல். இரண்டாவது வழக்கில் ''பிடி வாரண்டு'' போட்டு சென்னையிலிருந்து டெல்லி வரை துரத்தியது. அவரோ உயர்நீதிமன்ற, உச்ச நீதிமன்றப் பாதுகாப்பு உத்திரவுகள் பெற்றுத் தப்பித்து விட்டார். தன்னைக் கைது செய்து கொன்று விட ஜெயா கும்பல் முயன்றது என்ற சு.சுவாமியின் குற்றச்சாட்டையும் எளிதில் நிராகரித்துவிட முடியாது. இந்தச் சதியை வெற்றிகரமாக நிறைவேற்றத் தவறியதற்காக மாநில உயர் போலீசு அதிகாரிகளது அதிகாரப் பல்லைப் பிடுங்கி ஆத்திரத்தை வெளிப்படுத்திக் கொண்டது ஜெயா கும்பல்.

ஆனால், இது முழுக்கவும் சு.சுவாமியைப் பழி வாங்குவதற்கான முயற்சிதான் என்பது அம்பலப்பட்டு விட்ட நிலையில், அதிலும் தோல்வி கண்டு வழக்கை விலக்கிக் கொள்ள வேண்டியதானது. அதைவிடப் பெரிய தாக்குதல் ஒன்றை சென்னா ரெட்டி மீது ஜெயா கும்பல் தொடுத்தது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஆளுநர் மாளிகையில் வைத்துத் ''தன்னிடம் தகாத முறையில் நடந்து கொண்டார்; தன்னைத் தகாத சொற்களால் ஏசி அவமானப்படுத்திவிட்டார்'' என்று சட்டப்பேரவையில் கண்ணீர் விட்டு அழுதபடியே புகார் கூறினார். இது பெரும் கொந்தளிப்பையும், அனுதாபத்தையும் ஏற்படுத்தும் என்று எதிர்பார்த்து ஏமாந்தார். ஆளுங்கட்சி ரௌடிகள் ஆங்காங்கே சிறு சலசலப்புகளை ஏற்படுத்தியதோடு இதுவும் அடங்கிவிட்டது.

இவற்றைவிட மிகமோசமான தோல்வியை அடுத்தடுத்து நீதிமன்றங்களில் ஜெயா கும்பல் சந்தித்து வருகிறது. இலஞ்ச ஊழல் கிரிமினல் குற்ற விசாரணை அனுமதியை ரத்து செய்யும்படி கோரி உயர் நீதிமன்ற வழக்கில் எடுத்தவுடன் தனக்குச் சாதகமான தடை உத்திரவு கிடைக்கும் என்று ஜெயா கும்பல் எதிர்பார்த்தது. அதிலும் ஏமாற்றம் ஏற்பட்டது; வழக்கு குழு விசாரணைக்குப் போனபோதே கொடைக்கானல் நட்சத்திர விடுதி வழக்கில் ஜெயா கும்பலின் அதிகார முறைகேடுகள் கடும் கண்டனத்துக்குள்ளானது. ஜெயா அரசின் முன்னாள் மந்திரிகள் இருவரது எம்.எல்.ஏ பதவி பறிப்புக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது.



கவர்னர் காரை வழிமறிக்கும் அ.தி.மு.க. கூலி பட்டாளம்

இறுதியாக, தனக்கு எதிரான இலஞ்ச - ஊழல் கிரிமினல் குற்ற விசாரணை அனுமதியை ரத்து செய்யும்படி ஜெயா கோரிய வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. இதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்திடம் மேல் முறையீடு செய்வதற்கு ஜெயா கும்பல் தயாரித்து வருகிறது. ஆனால் அங்கு ஏற்கனவே நடந்து வரும் வழக்கில் ''ஆளுநர் முடிவு இறுதியானது. அதில் தலையிட நீதிமன்றத்துக்கு அதிகாரம் கிடையாது'' என்று ஜெயா கும்பல் வாதிட்டு வருகிறது. இந்த வாதத்தைப் புரட்டிப் போட்டுத் தொடுக்கும் வழக்கில் அது வெற்றி பெறுவது சாத்தியமில்லை. ஆளுநருக்கும், தனக்கும் சமூக உறவுநிலை இல்லை; அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையாகத்தான் கிரிமினல் குற்ற விசாரணை அனுமதி தந்துள்ளார் என்பதுதான் ஜெயலலிதா தொடுக்கும் வழக்கின் முக்கிய வாதம். ஆனால் இந்த வாதத்துக்கு மாறான, எதிரான வாதங்களை வைத்து, முக்கியமாக ஆளுநரின் முடிவில் வழக்கு மன்றம் தலையிட முடியாது என்றுதான் ஏற்கனவே அங்கு நிலுவையில் உள்ள வழக்கில் ஜெயலலிதா வாதிட்டு வருகிறார்.

எவ்வாறாயினும், தான் இலஞ்ச - ஊழல் புரியவில்லை; அதிகார முறைகேடுகள் செய்யவில்லை என்பதல்ல ஜெயலலிதாவின் நிலை. தனக்கு எதிராக வழக்குத் தொடுப்பதற்கான அதிகாரம் உரிமை எதிரிகளுக்கு இல்லை; அப்படிச் செய்வதில் உள் நோக்கம் உள்ளது என்பதுதான் அவரது வாதம். ஏற்கனவே அவரது எம்.எல்.ஏ. பதவி பறிப்பு வழக்கில் தலைமைத் தேர்தல் கமிஷனருக்கு எதிராக இப்படித்தான் வாதாடி வருகிறார். இந்த வாதங்கள் எல்லாம் வழக்கு மன்றங்களில் மட்டுமல்ல, மக்கள் மன்றத்திலும் எடுபடப்போவதில்லை.

**ஜெயா உருவாக்கி இருக்கும் கிரிமினல் – ரவுடிக் கும்பல் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அதில் ஒட்டிக் கொண்டு கிரிமினல் அரசியல் நடத்தும்**

பிழைப்புவாதப் பொறுக்கி அரசியலின் வாரிசாகவும் நாயகியாகவும்தான் பார்ப்பன - பாசிச ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தார் என்றாலும் அவர் தன் தனிச் சிறப்பான தன்மைகளால் தமிழ் நாட்டு அரசியலில் ஒரு புதிய சுவட்டினைப் பதித்துள்ளார். அநாகரிக, ஆபாச, வக்கிர, கிரிமினல்மயமான அரசியலை நிலை நாட்டியுள்ளார். எம்.ஜி.ஆரின் ''வைப்பாட்டி - உடன்கட்டை'' என்பது மட்டுமே ஜெயலலிதாவின் தகுதி என்பதாகக் காட்டி அடுக்கடுக்கான பல பிரச்சாரங்களின் மூலம் அரசியலுக்கே தொடர்பில்லாத ஒரு கிரிமினல் - சுயநலக் கும்பலால் ஆட்சியால் அமர்த்தப்பட்டார். சட்டபூர்வ அரசியல் அமைப்புக்கு வெளியே இருந்து கொண்டு ஒரு கும்பல் அதிகார ஆதிக்கம் புரிவது என்பது மத்தியிலும் மற்ற மாநிலங்களிலும் நாம் கண்டதுதான். ஆனால் அப்படி ஒரு கும்பல் சசிகலா - நடராஜன் தலைமையில் ஏற்பட்டு தமிழ்நாட்டை ஆட்டிப் படைப்பது இதுதான் முதல் முறையாகும். அதிகார போதையிலும் ஆடம்பர உல்லாச சொகுசு வாழ்விலும், லஞ்ச ஊழல் சொத்து சுகத்திலும் ஜெயலலிதாவைக் குளிப்பாட்டி வைத்துவிட்டு தமிழ்நாட்டையே கொள்ளையிட்டு வந்தது அக்கும்பல்.

ஜெயலலிதா ஒரு பெண் என்பதை வைத்தே அநாகரிக, ஆபாச, அறுவெறுக்கத்தக்க பிரச்சாரங்களைச் செய்து அரசி



படிப்பகம்

www.padippakam.com

யல் ஆதாயம் தேடியதும். எம்.ஜி.ஆரின் அதிகாரபூர்வ மனைவி ஜானகியுடனான ''சக்களத்தி''ச் சண்டையில் இருந்து சட்டசபையில் மானபங்கப்படுத்தவும், கோவில் பிரசாதத்தில் விஷம் கலந்து கொடுத்தும், கார் மீது லாரியை மோத விட்டு கொலை செய்யவும் முயன்றதாகவும், கடைசியாக சென்னா ரெட்டி தன்னிடம் தகாத முறையில் நடந்து கொண்டதாகவும் கூறுவது எல்லாமே அரசியல் ஆதாய - அனுதாப நோக்கமுடையவை தாம். வாச்சாத்தி, சின்னாம்பதி ஆதிவாசிப் பெண்களைக் கும்பல் கும்பலாய்க் கற்பழித்ததையும் காவல் நிலையங்கள் காமவெறிக் கூடங்களாக மாறியதையும் நியாயப்படுத்திய, மாஃபியா கூலிப் படைகளை வைத்து சந்திரலேகா மீது திரவாகம் வீசிய பாசிச-வக்கிர ஜெயலலிதா என்னதான் திறமையாக நடித்தாலும் அனுதாபத்திற்கு இடமில்லை.

பிரதமரின் மகன், அரசுத் தலைவரின் பேரன் ஆகியோருக்கு பெட்டி பெட்டியாக லஞ்சம் கொடுத்ததோடு வேறு பிற அநாகரிக முறைகேடான ஏற்பாடுகள் செய்து மத்திய அரசின் முழு ஆதரவை ஜெயலலிதா பெற்றுள்ளார் என்று கிசுகிசு ஏடுகள் மட்டுமல்ல, கருணாநிதி, வாழப்பாடியும் கூறும் புகார்கள் மறுக்கப்படவில்லை. அந்த மேலிட ஆதரவோடு தேசிய முன்னணி, இடதுசாரி கூட்டணியிலும் பல புதிய ஆதரவாளர்களை ஜெயலலிதா கும்பல் பிடித்துள்ளது. கர்நாடக முதல்வர் தேவ கௌடா, ஆந்திர முதல்வர் என்.டி. ராமராவ், பீகார் முதல்வர் லல்லுபிரசாத் யாதவ், ஜனதா தளத் தலைவர் பொம்மை என்று பலரும் ஜெயலலிதாவுக்கு ஆதரவாகவும் சென்னா ரெட்டியைக் கண்டித்தும் உள்ளனர். இவர்கள் தவிர ஜெயலலிதாவின் பங்காளிகளான ஆர்.எஸ்.எஸ். - பாரதீய ஜனதா - சிவசேனா கும்பலும் பக்க துணையாக உள்ளன. ஜெயாவிற்கு இங்கு ஆதரவு தேடும் இழி செயலில் தி.க. வீரமணி, நெடுமாறன், அப்துல் சமது ஆகிய பிழைப்புவாத கும்பல் தீவிரமாகக் களத்தில் இறங்கியுள்ளது. மத்திய அரசின் ஏஜெண்டான ஆளுநர் இதுபோல ஒரு மாநில முதல்வர் மீது நடவடிக்கை எடுக்க அனுமதிப்பது மாநிலங்களின் உரிமைகளைப் பறிப்பதாகிவிடும் என்று வாதிடுகிறது அக்கும்பல். ஆனால், ஒரு மாநில முதல்வர் மீது வழக்குப்போட எந்தவொரு குடிமகனுக்கும் உரிமை வேண்டும் என்பதுதான் உண்மையான இன உரிமையும் ஜனநாயக உரிமையும் ஆகும்.

ஜெயலலிதா கும்பல் முற்றிலுமாக அம்பலப்பட்டுப் போயுள்ள இந்த நிலையில், அவரது ஆட்சியைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று சில எதிர்க் கட்சிகளும் இல்லை. அவர் தானே பதவி விலக வேண்டும் என்று காங்கிரசு, சி.பி.எம். போன்ற வேறு சில ''எதிர்க் கட்சிகளும்'' கோரிப் போராடி வருகின்றன. அசாதாரணமான நிர்ப்பந்தம் ஏதும் இல்லாவிட்டால் இரண்டுமே சாத்தியமில்லை. ஏனென்றால் இலஞ்ச - ஊழல் கிரிமினல் குற்றங்களிலே ஊறித் திளைத்து வரும் நரசிம்மராவ் கும்பலுக்கு ஜெயலலிதா கட்சியின் ஆதரவு தேவையாக இருக்கிறது. அதிகார வெறி பிடித்த, ஆடம்பர, உல்லாச சுகத்தில் மிதக்கும் ஜெயா கும்பலும் தானே பதவியைத் துறக்குமா?

இருந்தபோதும் எதிர்க்கட்சிகள் எல்லாமே கொக்கு தலையில் வெண்ணெய் வைத்து, அது உருகிக் கொக்கின் கண்களை மறைக்கும், தந்திரமாகப் பிடித்து விடலாம் என்று காத்திருக்கின்றன. காரணம், ஜெயலலிதாவின் கேடு கெட்ட ஆட்சிக்கு எதிராக பெருமளவில் மக்களை திரட்டி எந்த எதிர்க் கட்சியும் போராடி ஒரு பெரும் சக்தியாக வளர்ந்து விடவில்லை; முக்கியமாக அவை தமக்குள்ளே பிளவு பட்டு உட் சண்டையிலும் நெருக்கடியிலும் சிக்கியிருந்தன. இப்போதும் சுப்பிரமணிய சுவாமியின் நடவடிக்கைகளால் அம்பலமாகி, வழக்கில் சிக்கி, பதவி பறிபோகும் நிலை ஜெயாவுக்கு ஏற்பட்டு விட்டதென்று உணர்ந்ததும், அவரை நம்பியே அரசியல் நடத்துகின்றன.

அது மட்டுமல்ல, ஜெயலலிதாவைப் பதவியில் இருந்து விரட்டுவது தான் எதிர்க் கட்சிகளின் நோக்கம். இது நிறைவேறி விட்டால் போதும்; மற்றபடி இலஞ்ச ஊழல் கிரிமினல் குற்றங்களுக்காக அக்கும்பலைத் தண்டித்து, இதுவே மற்றவர்களுக்கு ஒரு பாடமாக அமைய வேண்டும் என்பதில் அக்கறை கிடையாது. அப்படிச் செய்வது தங்களுக்கே எதிரானதாகிவிடும் என்று அவை அஞ்சுகின்றன. இதே காரணத்தைக் கூறி மற்ற மாநில முதல்வர்கள் குற்ற விசாரணை அனுமதியை எதிர்ப்பதை காணலாம்.

இதை விட முக்கியமாக கவனிக்க வேண்டியது ஜெயலலிதா கும்பல் எல்லா ஊர்களிலும் உருவாக்கி இருக்கும் கிரிமினல் மாஃபியா ரௌடிப் படை. இது எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அதில் ஒட்டிக் கொண்டு கிரிமினல் அரசியல் நடத்தும். ஓட்டுக் கட்சிகள் எதுவானாலும் இப்படி ஒரு ரௌடிப் படை இல்லாமல் இயங்க முடியாத நிலையை ஜெயலலிதா கும்பல் உருவாக்கி வளர்த்து விட்டது. பேரணி - பொதுக்கூட்டங்கள் என்றால் அன்னதானம், பிரியாணி, சாராயம், கூலி கொடுத்தும் ஆபாச சினிமா நடனங்கள் காட்டியும் கும்பல் சேர்க்கும் கழிசடை அரசியல் மூலம் உதிரிப் பாட்டாளிகளிடையே ஒரு பெரிய சமூக ஆதரவையும் திரட்டி வைத்துள்ளது. இந்த பாசிசக் கட்சி அமைப்புகளைக் கலைக்காமல் ''ஜனநாயகத்தை மீட்ப''தாகக் கூறுவதெல்லாம் வெறும் சவடால்தான். ஆகவே, ஜெயலலிதா கும்பலையும் அதன் கட்சி அமைப்பாளர்களையும் கிரிமினல் குற்றவாளிகளாக வைத்தது சமூகத் தண்டனை. விசாரணை செய்வதைத் திட்டமாகக் கொள்ளாத அந்த இயக்கமும், எதிர்க் கட்சியும் மக்கள் நம்பி ஏற்கத் தக்கதல்ல. ● ஆர்.கே.



ஜெ கும்பல் சட்டசபையில் நாட்டாமை செய்வதைக் கண்டித்து காங்கிரசு கட்சியினரின் நூதனப் போராட்டம்



படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

### தாழ்த்தப்பட்டோர் கோயிலுனுள் நுழையத் தடை

ஆந்திர மாநிலம் - மேடக் மாவட்டத்திலுள்ள கோர் போல் கிராமத்தில் ஏப்ரல் 16-ந் தேதியன்று அக்கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோர் வழிபாட்டிற்காகக் கோயிலுனுள் செல்ல முயன்றனர்; அப்பொழுது அவர்களைத் தடுத்து நிறுத்திய மேல்சாதி வெறியர்கள், இதற்குத் தண்டனையாகத் தாழ்த்தப்பட்டோரை சமூக புறக்கணிப்பு செய்வதாகப் பஞ்சாயத்தில் முடிவு எடுத்துள்ளனர். குடிக்க தண்ணீர்கூட எடுக்க முடியாதபடி தாழ்த்தப்பட்டோர் தடுக்கப்பட்டுள்ளனர். மேல்சாதி வெறியர்களுக்குத் தலைமை தாங்கியவன் மாணிக்லால் என் தெலுங்கு தேச கட்சி ஆதரவாளன். தாங்கள் கொடுத்திருந்த புகாரை வாபஸ் பெற்றுக் கொள்ளும்படி கூறி தாழ்த்தப்பட்டோரை போலீசும் மாவட்ட அதிகாரிகளும் மிரட்டியுமுள்ளனர்.

### கொலைக்களங்களாக 'காவல்' நிலையங்கள்

இந்தியாவெங்கும் இரண்டு நாளைக்கு ஒருவர் என்ற வீதத்தில் போலீசு குண்டர்களால் கைதிகள் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்படுவதாக செய்திகள் வெளிவந்துள்ளன. அரசின் புள்ளி விவரப்படி 1993-94-ல் 34 ஆக இருந்த கொட்டடிக் கொலைகள், அடுத்த ஒரு வருடத்தில் 153 என அதிகரித்துள்ளது. நாட்டில் இதில் முதலிடம் வகிப்பது ஜனநாயகத்தின் ஒரு தூணான பாராளுமன்றம் அமைந்திருக்கும் டெல்லி யூனியன் பிரதேசம் (34 கொலைகள்); அடுத்து 'மார்க்சிஸ்டு' கள் ஆளும் மே.வங்கம். (20 கொலைகள்)

### சுற்றுச் சூழல் குறித்து இரட்டை வேடம்

இமாச்சல பிரதேசத்திலுள்ள தர்லாகாட் சரணாலயத்தில் சி மீண்ட் ஆலை அமைக்கவும், கட்ச் வளைகுடாப் பகுதியிலுள்ள தேசிய கடற் பூங்கா அருகே பெட்ரோலிய இரசாயன ஆலையை நிறுவிக் கொள்ளவும் மத்திய - மாநில அரசுகள் அனுமதித்துள்ளன. மேலும் புகழ் பெற்ற கிர் காட்டுப் பகுதியில் சுற்றுலா மாளிகை கட்டிக் கொள்ள தனியார் ஆலய டிரஸ்டக்கு 52 பெரியாறு புலிகள் சரணாலயத்தின் வழியாக, வெட்டப்பட்ட மரங்களை எடுத்து வர சாலை அமைத்துக் கொள்ளவும், அவ்வனப் பகுதியில் இந்துஸ்தான் பேப்பர் நிறுவனம் 100 ஹெக்டேர் நிலப்பரப்பில் காடுகளை அழித்து யூகலிப்டஸ் வளர்க்கவும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

### "என்.பி.டி. "யை எதிர்த்து....

அணு ஆயுதப் பரவல் தடுப்பு (NPT)மாநாடு அமெரிக்காவில் தொடங்கிய நாளன்று பிரிட்டனில் பசுமைக் கட்சியினர் செல்லாபீல்டு அணுத் தொழிற்சாலையின் முன் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்; பாதுகாப்பு கெடுபிடிகள் நிறைந்த அத் தொழிற்சாலையின் உள்ளே பாரசூட் மூலம் இறங்க முயன்றதோடு, அத் தொழிற்சாலையில் இருந்து தேம்ஸ் நதிக்கு கழிவுகளை எடுத்துச் செல்லும் குழாயை மூடியும் விட்டனர்; மேலும் அன்று ஒருநாள் முழுவதும் அத்தொழிற்சாலையினை இயங்க முடியாதபடியும் தடுத்து நிறுத்திவிட்டனர்.

### அம்பலமாகும் பஞ்சாப் போலீசின் குரூரங்கள்

கடந்த 1993-ஆம் ஆண்டு மே மாதத்தில் மே.வங்க மாநிலத்தில் அத்து மீறி நுழைந்த பஞ்சாப் போலீசார், முகம்மது பஷீர் அகமது மற்றும் சலீமா பேகம் என்ற தம்பதியினரை, வீட்டினுள் இருந்து நடுத்தெருவுக்கு இழுத்து வந்து பட்டப்பகலில் சுட்டுக் கொன்றனர். அத் தம்பதியினர் தீவிரவாதிகள் என்றும் முத்திரை குத்தினார்கள். ஆனால், பஷீர் அகமது பஞ்சாப் போலீசு பணியில் இருந்து வெளியேறியவர் என்றும், தான் கொல்லப்படலாம் என்பதால் மே.வங்கத்தில் குடியேறினார் என்றும் சி.பி.ஐ விசாரணையில் தெரியவந்துள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு உச்ச நீதிமன்றம் பஞ்சாபிலுள்ள பதிந்தா மாவட்டத்தின் முன்னாள் எஸ்.பி.யையும் உள்ளிட்டு இக் கொலையினைச் செய்த ஐந்து போலீஸ்காரர்களையும் தற்காலிக வேலை நீக்கம் செய்யவும், வழக்குத் தொடரவும் அனுமதியளித்து உத்தரவிட்டுள்ளது.



ஆர்ப்பாட்டத்தில் மாசிக்கின் தங்கை (இடது)

### இளஞ்சிறுவனின் வீரமரணம்

பாகிஸ்தானில் குழந்தை உழைப்புக்கு எதிராகப் போராடி வந்த பன்னிரெண்டே வயதாக இக்பால் மாஸிஹ் என்ற சிறுவன் ஈஸ்டர் தினத்தன்று தனது கிராமத்தில் சுட்டுக் கொல்லப்பட்டான். தனது நான்கு வயது முதல் பத்து வயது முடிய கம்பளத் தொழிற்சாலையில் கொத்தடிமையாக வேலை பார்த்து வந்த இச்சிறுவன், அதன் பின் குழந்தை உழைப்பு எதிர்ப்பு இயக்கத்தில் இணைந்து மிகத் தீவிரமாகச் செயலாற்றி வந்தான். இச்சிறுவனின் விடாப்பிடியான போராட்டம் காரணமாக குழந்தை உழைப்பைப் பயன்படுத்தி வந்த பல கம்பளித் தொழிலகங்கள் இழுத்து மூடப்பட்டன; ஆயிரக்கணக்கான குழந்தைகள் கொத்தடிமைதனத்தில் இருந்து மீட்கப்பட்டனர். இதன் காரணமாக, "கம்பளத் தொழில் அதிபர்கள் மாஃபியாக்கள் துணையோடு இச் சிறுவனைக் கொன்றுள்ளனர் என பாக்ஸ் இயங்கும் சமூக நல அமைப்பகள் கூறியுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com

## 'மார்க்சிஸ்டு' கட்சியின் 15-வது மாநாடு:

# காகிதப் புரட்சியும் காணாமல் போனது

பகிரங்கமான கோஷ்டிச் சண்டை, கட்சித் தலைமையை விமர்சிப்பவர்களுக்கு கல்தா, யார் எதிரி என்பதில் தடுமாற்றம், சந்தர்ப்பவாத அரசியல் முடிவுகள் என வழக்கமான முதலாளித்துவக் கட்சிகளின் பாணியில் 'மார்க்சிஸ்ட்' கட்சியின் 15-வது அகில இந்திய மாநாடு அண்மையில் சண்டிகாரில் நடந்து முடிந்துள்ளது.

இந்தியாவிலுள்ள போலிக் கம்யூனிஸ்ட் கட்சிகளில் ஒப்பீட்டளவில் பெரிய கட்சியாக இருப்பது 'மார்க்சிஸ்ட்' கட்சி. காங்கிரசு, பாரதீய ஜனதா ஆகிய பாசிசக் கட்சிகளுக்கு மாற்றான மூன்றாவது அணிக்குத் தலைமை தாங்கும் இக்கட்சியின் மாநாடு, புதிய அரசியல் பாதையை வகுத்துப் புரட்சியை முன்னெடுத்துச் செல்லும் என்று அக்கட்சியின் அணிகள் பெரிதும் எதிர்பார்த்தார்கள். ஆனால் வெங்காயத்தை உரித்துப் பார்த்த கதையாக வழக்கமான சந்தர்ப்பவாத முடிவுகளுடன் இம்மாநாடு கூடிக் கலைந்துள்ளது. ஐரோப்பிய பாணி ராஜாங்க கம்யூனிஸ்டுகளாகச் சீரழிவதை நோக்கிய பயணத்தை இம்மாநாடு பகிரங்கமாகவே பிரகடனப்படுத்தியுள்ளது.

### கள்ளக் கூட்டுக்கு சந்தர்ப்பவாத அரசியல்

சென்னையில் நடந்த இக்கட்சியின் 14-வது மாநாட்டில், காங்கிரசும் பாரதீய ஜனதாவும் உழைக்கும் மக்களின் எதிரிகள் என்று அரசியல் தீர்மானம் நிறைவேற்றியிருந்தனர். தேசிய முன்னணி - 'இடது' முன்னணி கூட்டணியுடன் மதச் சார்பற்ற - ஜனநாயக சக்திகளின் மூன்றாவது அணியைக் கட்டியமைப்போம் என்று சூளுரைத்தனர். ஆனால் தற்போதைய 15-வது மாநாட்டில் காங்கிரசு, பாரதீய ஜனதா ஆகிய இருபெரும் பாசிச சக்திகளில் பாரதீய ஜனதாவையே முதன்மை எதிரியாகத் தீர்மானித்துள்ளனர். இதன் மூலம் காங்கிரசுடன் கள்ளக் கூட்டு சேர்வதற்கான அடித்தளத்தை அமைத்துக் கொண்டுள்ளனர். ''காங்கிரசின் தோல்வியைச் சாதகமாக்கிக் கொண்டு பாரதீய ஜனதா அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிப்பதை நாங்கள் அனுமதிக்கமாட்டோம்'' என்கிறார் 'மார்க்சிஸ்ட்' கட்சி பொதுச் செயலாளர் சுர்ஜித். ''அடுத்து வரும் பொதுத்தேர்தலில் எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறாமல் தொங்குநிலை நாடாளுமன்றம் ஏற்படுமானால், மத்தியில் சிறுபான்மை பாரதீய ஜனதா அரசு அமைய நாங்கள் எந்த வகையிலும் உதவ மாட்டோம்'' என்கிறார் அவர். அதேசமயம் மத்தியில் காங்கிரசு சிறுபான்மை அரசை அமைத்தால் அதை நாங்கள் ஆதரிக்க மாட்டோம் என்று கறாராக அவர் கூறவில்லை.

### ''காட்'' எதிர்ப்பு புஸ்வாணமாகியது

இதே போல், நாட்டை அடகு வைக்கும் ''காட்'' ஒப்பந்தத்தை எதிர்த்து நாக்கைச் சுழற்றிச் சுழற்றி வீரதீர சவடால் அடித்த இப் போலிகள், இப்போது ''காட்'' எதிர்ப்பையே கிடப்பில் போட்டு விட்டனர். கடந்த ஆண்டு ஆகஸ்ட் 16-விருந்து செப். 9-ந் தேதி வரை ''காட் ஒப்பந்தத்தை எதிர்த்து சட்ட மறுப்பு இயக்கம் மேற்கொள்வதாக'' ஆரவாரம் செய்தனர். கடந்த ஆண்டு ஏப்ரல் 5-ந் தேதியன்று டெல்லியில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அதற்கு முன்பு புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்த்து ''பாரத் பந்த்'' நடத்தினர். ஆனால் இப்போது எவ்விதப் போராட்டத் திட்டமும் மாநாட்டில் அறிவிக்கப்படவில்லை. காட் ஒப்பந்தத்தையும் புதிய பொருளாதாரக் கொள்கையையும் எதிர்ப்பதாக மாய்மாலம் செய்து விட்டு, அதே கொள்கையை மே. வங்கத்தில் சந்தர்ப்பவாதமாகப் பின்பற்றும் இத்துரோகிகளிடம் வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

இதில் வேடிக்கை என்னவென்றால், இங்கே தமிழகத்தில் வை.கோ. கட்சியுடன் சேர்ந்து காங்கிரசின் புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்த்து மேடைகளில் சவடால் அடிக்கும் இவர்கள், அங்கே மே. வங்கத்தில் காங்கிரசின் கொள்கையையே புதிய தொழிற் கொள்கை என்ற பெயரில் நடைமுறைப் படுத்துகின்றனர். இந்த லட்சணத்தில், தங்கள் கொள்கையானது காங்கிரசின் கொள்கையிலிருந்து வேறுபட்டது என்று நாடகமாடுகின்றனர். ஆனால் இப்போலிகளின் கொள்கைக்கும், நாட்டை அடகு வைக்கும் காங்கிரசின் கொள்கைக்கும் அடிப்படையில் எந்த வேறுபாடும் கிடையாது. காங்கிரசிடமிருந்து எந்த அடிப்படையில் வேறுபடுகிறார்கள் என்பது போலிகளின் துரோகத் தலைமைக்கே வெளிச்சம்!

''மந்தையில் ஒரு கருப்பாடு'': நிருபன் சக்கரவர்த்தி



### துரோகத் தலைமைக்கு எதிராக கலகம்

எல்லாவற்றுக்கும் மேலாக, அந்நிய மூலதனத்தைச் சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்கும் மே.வங்க இடது முன்னணி அரசின் துரோகத்தை, குறிப்பாக அதன் புதிய தொழிற் கொள்கையை அக்கட்சியின் முன்னாள் மத்தியக் கமிட்டி உறுப்பினரும் முன்னாள் திரிபுரா முதல்வருமான நிருபன் சக்ரவர்த்தி பகிரங்கமாக எதிர்த்துக் கலகம் செய்து வருகிறார். கட்சித் தலைமையின் துரோகத்தனத்தை எதிர்த்து அணிகள் யாராவது வாய் திறந்தாலே, ''நீ ஒரு நக்சலைட்'' என்று முத்திரை குத்திக் கட்சியிலிருந்து வெளியேற்றுவதென்பது மார்க்சிஸ்டுகளின் வாடிக்கையான கொள்கை. ஆனால் இப்போது கட்சியின் முதுபெரும் மத்தியக் கமிட்டி உறுப்பினரே கலகம் செய்வதைப் பார்த்துக் கட்சித் தலைமையே பீதியில் உறைந்து போயுள்ளது.

''வர்க்கப் போராட்டத்தை அல்ல; வர்க்க சமரசத்தைத்தான் கட்சியின் தலைமை நடைமுறைப் படுத்துகிறது. கட்சியில் கிராமப்புற பாட்டாளிகளே இல்லை. பணபலத்தையும் குண்டர் பலத்தையும் சார்ந்துதான் மே. வங்கத்தில் தேர்தல் வெற்றி சாதிக்கப்பட்டுள்ளது. சில கட்சித் தலைவர்களும் அவர்களது வாரிசுகளும் இன்று புதுப் பணக்காரர்களாகி விட்டார்கள். மே. வங்கத்திலும் திரிபுராவிலும் கட்சிக் குண்டர்களின் அட்டூழியங்களால் ஒடுக்கப்பட்ட மக்கள் இன்று வாழும் உரிமையையே இழந்து தவிக்கிறார்கள்'' என்று அடுக்கடுக்கான குற்றச் சாட்டுகளை அள்ளி வீசுகிறார், 92 வயதான 'மார்க்சிஸ்டு' தலைவர் நிருபன் சக்ரவர்த்தி.

''ஜோதிபாசுவும் அவரது அரசும் ஊழல் கிரிமினல் குற்றங்களில் மூழ்கிக் கிடக்கின்றனர். ஜோதிபாசு, கம்யூனிச அங்கி அணிந்த ஒரு முதலாளித்துவ வாதி. தனது வாரிசான சந்தன் பாசுவை ஒரு கோடீஸ்வரனாக்கி 'சாதனை புரிந்



படிப்பகம்

www.padippakam.com

துள்ளார். இதைப் பற்றி விமர்சிப்பவர்களைக் கட்சியிலிருந்து வெளியேற்றுவதே அவரது நடவடிக்கையாக உள்ளது. காங்கிரசுக் கட்சியைப் போல, பன்னாட்டு மூலதன ஆதிக்கத்துக்கான தரகராகவே அவர் செயல்படுகிறார்'' என்று மே.வங்க முதல்வர் ஜோதிபாசு மீது 6 அம்சக் குற்றச்சாட்டுகளை அவர் சுமத்தியுள்ளார்.

இவற்றுக்குப் பொறுப்பாக விளக்கம் அளிக்காமல், ஆத்திரமடைந்த கட்சித் தலைமை நிருபன் சக்ரவர்த்தியைக் கட்சியிலிருந்தே தூக்கியெறிந்துள்ளது. கட்சி அரங்கில் வைத்து விவாதிக்காமல், கட்சிக்கு வெளியே இவற்றைப் பகிரங்கப் படுத்திக் கட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்தியதாலேயே அவரை வெளியேற்றியதாகத் தனது செயலுக்கு நியாயம் கற்பிக்கிறது. ஆனால் நிருபன் இக்குற்றச்சாட்டுகளை இப்போது திடீரென பகிரங்கப் படுத்தவில்லை. 1978-ல் ஜலந்தரில் நடந்த கட்சியின் 10-வது மாநாட்டிலேயே இக்குற்றச்சாட்டுகளை முன் வைத்து விளக்கம் கோரியுள்ளார். ஆனால் கட்சித் தலைமையோ இன்று வரை எவ்வித விளக்கமும் தரவில்லை. ஆறு மாதங்களுக்கு முன்பு கூட, நோய் வாய்ப்பட்டு படுக்கையில் கிடந்த போது நிருபன் இதே குற்றச்சாட்டுக்களை கட்சியின் முன் வைத்து விளக்கம் கோரினார். அப்போதும் கட்சித் தலைமை இவற்றைப் புறக்கணித்தது. எனவே விரக்தியடைந்த நிலையில், வேறுவழியின்றி இவற்றைப் பகிரங்கப் படுத்தத் துணிந்துள்ளார், நிருபன் சக்ரவர்த்தி.




சண்டிகரில் நடந்த 'மார்க்சிஸ்டு' கட்சியின் மாநாடு

''ஜோதிபாசுவுக்கு எதிராக யாராவது விமர்சித்தால் அவர்களுக்கு இந்த கதிதான் ஏற்படும் என்பதை நிருபன் விவகாரம் மீண்டும் நிரூபித்துக் காட்டிவிட்டது. அன்று நான் வெளியேற்றப்பட்டேன்; இன்று கட்சியின் முன்னுதாரண மிக்க தலைவரே தூக்கியெறியப்பட்டுள்ளார்'' என்கிறார் முன்னாள் 'மார்க்சிஸ்டு' எம்.எல்.ஏ வான சமந்தாஹிரா. இவரைப் போலவே கட்சியின் பல்வேறு இரண்டாம் மட்டத் தலைவர்களும் ஊழல் பெருகிவிட்டதைப் பற்றி வெளிப்படையாகவே பொருமுகின்றனர்.

''கட்சியில் கிரிமினல்களின் செல்வாக்கு பெருகி விட்டது. கிரிமினல்கள் எங்கள் கட்சியைப் பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறார்கள். சிலர் அதில் வெற்றியும் பெற்றுள்ளார்கள். ஆனால் மற்ற மாநிலங்களைப் போல கிரிமினல்களே அமைச்சர்களாகும் அளவுக்கு நிலைமை மோசமடையவில்லை'' என்கிறார் 'மார்க்சிஸ்டு' கட்சி எம்.பி.யான ஹன்னன் மொல்லா. இதேபோல மற்றொரு எம்.பி.யும், நாடாளுமன்ற 'மார்க்சிஸ்டு' கட்சித் தலைவருமான சைபுதீன் சௌத்திரி, ''கட்சியிலும் ஆட்சியிலும் வசூல் மலிந்துவிட்டது என்பதை மறுக்க முடியாது'' என்கிறார்.

### சந்தர்ப்பவாதச் சகதியிலிருந்து புதைகுழியை நோக்கி

போலிக் கம்யூனிஸ்டுகள் என்றைக்குச் சந்தர்ப்பவாத சகதியில் விழுந்து ராஜாங்க கம்யூனிஸ்டுகளாக மாறினார்களோ, அன்றிலிருந்தே கட்சியிலும் ஆட்சியிலும் ஊழலும் சீரழிவும் ஓடுகாலித்தனமும் புழுத்து நாறத் தொடங்கிவிட்டது. எந்தக் கட்சியுடனும் எந்த அடிப்படையிலும் கூட்டுச் சேர்ந்து ஓட்டுப் பொறுக்குவது என்று முடிவான பிறகு, ஒவ்வொரு தலைவரும் தம் பங்குக்கு வலதுசாரி சந்தர்ப்பவாத சகதியை நோக்கி இழுத்துச் செல்கின்றனர். ஆந்திராவின் ஓம்கார், கேரளத்தின் ராகவன், தமிழகத்தின் மணியரசன் முதலானோர் சாதிய - இனவாத அடிப்படையில் கூட ஆளும் வர்க்கக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து ஓட்டுப் பொறுக்கும் பாதையை முன் வைத்து, பின்னர் தனிக்கட்சியாகப் பிரிந்து சென்றனர். கட்சியின் பழம்பெருச்சாளியும் கடைந்தெடுத்த சந்தர்ப்பவாதியுமான நம் பூதிரிபாட், இப்போது கூட சுலைமான் சேட் தலைமையிலான முஸ்லீம் லீகுடன் கூட்டுச் சேர்ந்து ஓட்டுப் பொறுக்கும் பாதையை முன் வைத்துப் போராடி வருகிறார். இது தவிர காங்கிரசிலிருந்து நீக்கப்பட்ட அர்ஜுன் சிங் முதலான அதிருப்தி கோஷ்டியுடன் சேர்ந்து மூன்றாவது அணி அமைக்கும் திட்டத்தை மாநாட்டில் முன் வைத்தார். மே. வங்க மார்க்சிஸ்டு முதல்வர் ஜோதி பாசுவோ, பன்னாட்டு மூலதன ஆதிக்கத்தை வெளிப்படையாக வரவேற்கும் சிவப்புத் தரகராகவே மாறி விட்டார். இப்படி புரட்சிகர முகமூடி அணிந்துள்ள மார்க்சிஸ்டு கட்சியை அதன் பல்வேறு துரோகத் தலைவர்களும் மேலும் வலதுசாரிப் பாதையில் இழுத்துச் செல்கின்றனர்.

'மார்க்சிஸ்டுகள்' தமது கட்சித் திட்டத்தில், கட்சியானது 'இடதுசாரி' சக்திகளுடன் கூட்டுச் சேர்ந்து தேர்தலில் வெற்றி பெற்று மாநில அரசுகளை நிறுவும் பட்சத்தில், இந்த அரசின் மூலம் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இடைக்கால நிவாரணங்களைச் செய்வோம், சீர்திருத்தங்களை மேற்கொள்வோம் என்று கூறியுள்ளனர். பின்னர் வங்கத்தில் ஆட்சியைப் பிடித்ததும், ''வங்கத்தைப் பார்!'' என்று அரசாங்கத்தில் பங்கேற்பதையே புரட்சியாக்கி நியாயப்படுத்தினர். இப்போது தேனெடுத்தவன் புறங்கையை நக்கிய கதையாக அரசாங்க சலுகைகள் - சன்மானங்களை அனுபவித்துக் கொண்டு, ஊழலில் மூழ்கிக் கட்சியும் ஆட்சியும் சீரழிந்து கிடக்கிறது. ஊழல் புழுத்து நாறுவதால் கட்சித் தலைவர்களே வேறுவழியின்றி இந்த உண்மையை இப்போது ஒப்புக் கொள்கின்றனர். மாநில அரசு மட்டுமல்ல; நாளை மத்தியில் ஒரு சிறுபான்மை அரசு அமைந்தால் அதனுடன் கூட்டுச் சேர்ந்து ஆதரிப்பது என்கிற கடைகோடி வலது சந்தர்ப்பவாதப் பாதையை நோக்கி முன்னேறி வருகின்றனர். ஆளும் வர்க்கக் கட்சிகளிலேயே முற்போக்கு சக்திகளுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியைப் பிடிப்பது; புரட்சியே இல்லாமல் சமாதான மாற்றங்கள் மூலம் சோசலிசத்தை நிறுவுவது என்பது தான் வலது கம்யூனிஸ்டுகளின் கொள்கை. ஆனால் அதிலிருந்து முற்றிலும் வேறுபட்ட புரட்சிகரக் கட்சியாக காட்டிக் கொள்ளும் 'இடதுகள்', வலதுகளின் பாதையில்தான் அடியொற்றிச் செல்கின்றனர்.

மார்க்சிஸ்ட் கட்சியின் கீழ்மட்டத்திலுள்ள சில அணிகளைத் தவிர வேறு புரட்சிகர சக்திகள் அக்கட்சியில் கிடையாது. பகிரங்கமாகக் கட்சியை வலதுசாரி



படிப்பகம்

www.padippakam.com

திசையில் இழுத்துச் செல்லும் கடைந்தெடுத்த துரோகிகளும், சதிகாரர்களும் பிழைப்புவாதிகளும்தான் கட்சித் தலைமையில் உள்ளனர். இத்தகைய சித்தாந்த சீரழிவுச் சக்திகளால் ஒருக்காலும் புரட்சியை வழிநடத்த முடியாது.

## வெற்றுப் புலம்பல் மாற்றுத் தீர்வாகாது

கட்சித் தலைமையிலுள்ள பெரும்பான்மையினர் வலது சந்தர்ப்பவாதத்தில் சீரழிந்து கிடக்கும் அதே சமயம், எஞ்சியுள்ள சிறுபிரிவினர் கட்சியிலும் ஆட்சியிலும் பெருத்துவிட்ட ஊழல் - ஒடுக்குமுறைகளைப் பற்றி முணுமுணுக்கின்றனர். இதிலே நிருபன் சக்ரவர்த்தி ஒருபடி முன்னேறி பகிரங்கமாகவே அம்பலப்படுத்துகிறார். அதே சமயம் கட்சியின் துரோகத் தலைமையை எதிர்த்துப் புதிய - புரட்சிகர மாற்றுப் பாதையை முன்வைக்க இவர்கள் தயாராக இல்லை. பெற்ற மகன் தறுதலையாகத் திரிவதைக் கண்டு புலம்பும் வயோதிகத் தந்தையைப் போலத்தான் இவர்களும் கட்சியின் சீரழிவைக் கண்டு பொருமுகின்றனர். புரட்சிகர மாற்றுவழியை முன் வைத்து இவர்கள் உறுதியான போராட்டத்தை மேற்கொள்ளாத நிலையில், இவர்களது புலம்பல்கள் நாளடைவில் ஒடுங்கிப் போகவே செய்யும்.

இவையாவும் காட்டுவதென்ன? 'மார்க்சிஸ்டு' கட்சிக்குள் விமர்சன - சுயவிமர்சன நடைமுறையோ, ஜனநாயக மத்தியத்துவமோ மருந்துக்கும் கிடையாது. இதர முதலாளித்துவக் கட்சிகளைப் போலவே தலைமை மற்றும் தனிநபர் சர்வாதிகாரமே அக்கட்சியிலும் கொடிகட்டிப் பறக்கிறது.

## பெருகி வரும் கோஷ்டிச் சண்டை புழுத்து நாறும் ஊழல்

கட்சித் தலைமையை விமர்சிப்போருக்கு கல்தா கொடுத்தும் கூட கட்சிக்குள் புழுத்து நாறும் கோஷ்டிச் சண்டையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. கேரளாவில் அச்சுதானந்தன் கோஷ்டி - நாயனார் கோஷ்டிக்கிடையிலும், மே. வங்கத்தில் பாசு - பட்டாச்சார்யா கோஷ்டிகளுக்கிடையிலும், தலைமையில் சுர்ஜித் - நம்பூதிரி கோஷ்டிகளுக்கிடையிலும் தொடரும் நாய்ச்சண்டையை இம்மாநாடு தீர்த்து வைக்கவோ, கட்டுப்படுத்தவோ முடியவில்லை. மே. வங்கத்தில் மாநில மாநாடு முடிந்த இரு மாதங்களாகியும் கோஷ்டிப் பூசல் காரணமாக மாநிலக் கமிட்டியிலிருந்து செயற்குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படவில்லை. தற்போதைய அகில இந்திய மாநாட்டின் அரசியலமைப்பு அறிக்கையிலேயே, கோஷ்டிவாதத்தைக் கைவிடுமாறும், ஜனநாயக மத்தியத்துவத்தைப் பின்பற்றுமாறும் வேண்டுகோள் விடுக்குமளவுக்கு நிலைமை முற்றிவிட்டது. இருப்பினும் தற்போதைய மாநாட்டில், ஜோதிபாசு - சுர்ஜித் கோஷ்டியே மேலாதிக்கம் செய்யும் கோஷ்டியாகப் பலம் பெற்றுள்ளது.

இவை ஒருபுறமிருக்க, கட்சியிலும் ஆட்சியிலும் ஊழல் பெருத்துவிட்டதாக அரசியல் - அமைப்பு அறிக்கை ஒப்புக்கொண்ட போதிலும் அதற்கெதிராக எந்த நடவடிக்கையும் மாநாட்டில் அறிவிக்கப்படவில்லை. கட்சி உறுப்பினர்கள் பலர் ரியல் எஸ்டேட், பங்குச் சந்தை சூதாட்டங்களில் ஈடுபட்டுள்ள போதிலும் அவற்றுக்கெதிராக இம்மாநாடு வாயே திறக்கவில்லை. மே. வங்க அரசில் அந்நிய மூலதன ஆதிக்கத்தை ஆதரிக்கும் புதிய தொழிற்கொள்கையை நியாயப்படுத்திய இம்மாநாடு, இக்கேடுகெட்ட கொள்கையினால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்து தவிப்பதைப் பற்றி எதுவுமே கூறவில்லை. மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைதான் இவற்றுக்குக் காரணம் என்று பழிபோட்டுத் தப்பித்துக் கொள்கிறது.

சித்தாந்த ஓட்டாண்டித்தனமும், எந்த முடிவுகளுமில்லாத அரசியல் கையாலாகாத்தனமும் பெருகி வரும் கோஷ்டி மோதலும் இன்னுமொரு முதலாளித்துவக் கட்சியாக - ஐரோப்பிய பாணி சமூக ஜனநாயகக் கட்சியாகச் சீரழிவதற்கான வலுவான அடிப்படைகள். இன்னும் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படவில்லையே தவிர, ஐரோப்பிய பாணி ஆளும் போலி சோசலிசக் கட்சியாகச் சீரழிவதை நோக்கித்தான் மார்க்சிஸ்ட் கட்சி நாலுகால் பாய்ச்சலில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் கட்டிக் காப்பது, புரட்சியை பூசையறையில் வைப்பது, அன்னிய ஏகபோக மூலதனத்தையும் உலக வங்கி - ஐ.எம்.எப்.ன் கடன் கொள்ளையையும் சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்பது என்பதையே இம்மாநாட்டின் மூலம் போலிகள் பிரகடனப்படுத்தியுள்ளனர். ஆனால் புரட்சிகரமான வாய்ச் சவடால்கள் மூலம் தமது சந்தர்ப்பவாதத்தைத் திறமையாக மூடி மறைத்து வருகின்றனர்.

போலிக் கம்யூனிஸ்டுகளின் இந்த மோசடிகளை அக்கட்சியிலுள்ள வர்க்க உணர்வுள்ள அணிகள் இனிமேலும் சகித்துக் கொண்டிருக்க முடியாது. புரட்சியைத் தலைமையேற்று வழிநடத்தும் என்று இனிமேலும் ஏமாற முடியாது. கட்சித் தலைமையின் துரோகத்தனத்தை அவர்கள் மக்கள் முன்னே அம்பலப்படுத்த வேண்டும். கம்யூனிசப் புரட்சியாளர்களுடன் ஐக்கியப்பட்டு மார்க்சிய-லெனினியத்தைப் பற்றிப் பாதுகாத்து, புரட்சியை முன்னெடுத்துச் செல்லும் இன்றைய மகத்தான பணிக்குத் தோள் கொடுக்க வேண்டும்.

● பாலன்

## 'மார்க்சிஸ்டு' கட்சி: குட்டி முதலாளிகளின் கூடாரம்

கடந்த மார்ச் மாதத்தில் மே. வங்க மாநில மார்க்சிஸ்ட் கட்சி மாநாடு நடந்தது. இம்மாநாட்டில் பங்கேற்ற பிரதிநிதிகளை சற்று பார்த்தாலே போதும்; மார்க்சிஸ்ட் கட்சியின் வர்க்கத்தன்மை எப்படிப்பட்டது என்று புரிந்து விடும்.

மே. வங்க மாநாட்டில் கட்சி உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 584 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இவர்களில் 367 பேர் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுள் 70 பேரின் மாத வருமானம் 5000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாகும். பங்கேற்ற 138 விவசாயப் பிரதிநிதிகளில் 79 பேர் நடுத்தர மற்றும் பணக்கார விவசாயிகள்; 33 பேர் நிலச்சுவான்தார்கள். மாநாட்டில் பங்கேற்ற பிரதிநிதிகளில் கூலி ஏழை விவசாயிகள் மற்றும் தொழிலாளி வர்க்கப் பிரதிநிதிகள் வெறும் 64 பேர்தான்!

இப்படி நடுத்தர வர்க்கத்தின் - குட்டி முதலாளிகளின் கட்சியாக மாறியதால்தான் அக்கட்சியின் "உறுப்பினர் எண்ணிக்கை கடந்த நான்காண்டுகளில் ஏறத்தாழ 50,000 பேராக அதிகரித்து, மொத்த உறுப்பினர் எண்ணிக்கை ஆறேகால் லட்சம் பேராக உயர்ந்துள்ளது" என்று பெருமைப்படுகின்றனர். இதே போல தமது கட்சித் தலைமையிலான விவசாய சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒரு கோடியைத் தாண்டிவிட்டதாகக் கணக்கு காட்டுகின்றனர். ஆனாலும் இந்த வளர்ச்சி மே. வங்கம், திரிபுரா, கேரளா ஆகிய மாநிலங்களில் மட்டும்தான். மற்ற மாநிலங்களில் பெயரளவுக்குத்தான் கட்சி உறுப்பினர் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. குறிப்பாக, இந்தி பேசும் மாநிலங்களில் கட்சி வளர்ச்சியடையாமல் கட்டெறும்பாகிவிட்டது.

எனவே, இந்தி பேசும் மாநிலங்களில் கட்சியைத் தீவிரமாக கட்டியெழுப்பும் நோக்கத்தோடு, கட்சி அமைப்பு விதிகளின் 4வது தொகுதியைத் திருத்தியமைத்துள்ளனர். இதன்படி, கட்சி ஆதரவாளராக உள்ள ஒருவர், ஓராண்டு காலத்துக்கு தேர்வு நிலை உறுப்பினர் தகுதியில் வைத்து சோதித்து அறியப்படுவதற்குப் பதிலாக நேரடியாக முழு உறுப்பினர் தகுதியைப் பெறுவார். தனிச் சிறப்பான நிலைமைகளை ஒட்டி மாநிலக் கமிட்டிகள் இவ்வாறு யாரையும் முழு உறுப்பினர் தகுதியுடன் கட்சியில் சேர்த்துக் கொள்ளலாம். கட்சி மாறிகள், பிழைப்புவாதிகள், கிரிமினல்கள் என யாரையும் கட்சியில் சேர்த்துக் கொண்டு அடுத்து வரும் தேர்தலுக்கு ஓட்டுப் பொறுக்குவதற்கான புதிய ஏற்பாடுதான் இது.



படிப்பகம்

www.padippakam.com



## எண்ணெய் அதிபர்கள் ஏலத்தில் எடுத்த ஆட்சி

குஜராத்தில் இந்துவெறி பாரதீய ஜனதா ஆட்சிக்கு வந்த அடுத்த சில நாட்களிலேயே, அது எண்ணெய் வியாபார சூதாடிகளின் நலனுக்கான அரசு என்பதை நிரூபித்துவிட்டது. மகாராஷ்டிராவின் அரசியலை சர்க்கரை ஆலை அதிபர்கள் ஆட்டிப் படைப்பதைப் போல, குஜராத்தின் அரசியலைக் கட்டுப்படுத்துபவர்களாக சமையல் எண்ணெய் ஆலை அதிபர்களும் நிலப்பிரபுக்களும் உள்ளனர். அதிலும் செளராஷ்டிரா பிராந்தியத்தைச் சேர்ந்த ஆலை அதிபர்களே செல்வாக்கு செலுத்துகின்றனர். நாட்டின் ஒட்டுமொத்த எண்ணெய் உற்பத்தியில் 60% அளவுக்கு கட்டுப்படுத்துபவர்களாகவும் விலையைத் தீர்மானிப்பவர்களாகவும் இருப்பது செளராஷ்டிரா எண்ணெய் முதலாளிகள்தான்!

குஜராத் எண்ணெய் அதிபர்களின் பதுக்கல், செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்கி விலையேற்றம் செய்து கொள்ளையடிப்பது முதலானவற்றின் காரணமாக, குஜராத்தின் "அமுல்" கூட்டுறவு பால் நிறுவனம் "தாரா" எனப்படும் சமையல் எண்ணெயை சற்றே குறைந்த விலையில் ரேஷன் கடைகளின் மூலம் விற்பனை செய்தது. இதனால் தாங்களும் சமையல் எண்ணெயை விலைக் குறைப்பு செய்ய வேண்டிய நிர்பந்தத்தால் எண்ணெய் அதிபர்கள் "அமுல்" நிறுவனத்தின் மீது எரிச்சலடைந்தனர். தமது பணபலம், அதிகார பலத்தைக் கொண்டு தேர்தலில் பாரதீய ஜனதா கட்சியை வெற்றிபெறச் செய்தனர். முதல்வர் பதவிக்கு சங்கர்சின் வாகெலா, காஷிராம் ரானா ஆகியோர் போட்டியிட்ட போதிலும், எண்ணெய் அதிபர்களிடம் செல்வாக்குமிக்க கேசுபாய் பட்டேலையே பாரதீய ஜனதா கட்சி முதல்வராக நியமித்தது. இதோடு பட்டேல், ஆர்.எஸ்.எஸ். ஊழியர் என்பதாலேயே இந்துவெறியர்கள் அவரை முதல்வராக்கியுள்ளனர். மேலும், 28 பேர் கொண்ட அமைச்சரவையில் 11 பேர் செளராஷ்டிரா பிராந்தியத்தைச் சேர்ந்தவர்கள்தான். இவையனைத்தும் செளராஷ்டிரா எண்ணெய் அதிபர்கள் ஏலத்தில் எடுத்த ஆட்சிதான் இது என்று தெளிவாக்கிவிட்டது.

எதிர் பார்த்தபடியே, ஆட்சிக்கு வந்த ஒரு மாதத்திற்குள்ளாகவே, "அமுல்" நிறுவனத்தை இயக்கும் தேசிய பால் வள வளர்ச்சி நிறுவனத்தின் (NDDB) சேமிப்பு எண்ணெயை கிடங்குகளிலிருந்து பறிமுதல் செய்தது, பாரதீய ஜனதா அரசு. இக்கூட்டுறவு நிறுவனத்தில் நடந்து வரும் ஊழல் மற்றும் நட்டத்தை தடுத்து நிறுத்த இந்நடவடிக்கையை மேற்கொண்டதாகக் கூறிய புதிய ஆட்சியாளர்கள், அதன் நிர்வாக இயக்குனர்களின் அதிகாரங்களைப் பறித்து, தமது விசுவாச சிறப்பு அதிகாரிகளை நியமித்து, இந்நிறுவனத்தையே தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்து விட்டனர். அதைத் தொடர்ந்து ரேஷன் கடைகளில் "தாரா" எண்ணெய் விநியோகமும் நிறுத்தப்பட்டு விட்டது. இதுதவிர, பெரு முதலாளிகளின் நலனுக்காக, கூட்டுறவு சங்கங்களை முடமாக்கும் நோக்கத்துடன் அனைத்து வட்டார கூட்டுறவு சங்கங்களிலும் தமது விசுவாச தனி அதிகாரிகளை நியமித்துள்ளது. ஜூன் மாதத்தில் நடைபெறவுள்ள பஞ்சாயத்து மற்றும் கூட்டுறவு சங்கத் தேர்தல்களில் தமது கட்சியினர் வெற்றி பெறுவதற்காக செய்துள்ள ஏற்பாடுதான் இது.

எப்படியிருக்கிறது பாருங்கள், இந்து வெறியர்களின் புதிய ஆட்சி!

## போலிகளின் ஆட்சியில் அரசியல் பழிவாங்குதல்

மேற்கு வங்க மாநில அரசு சமீபத்தில், "தனது மாநிலத்தில் அரசியல் கைதிகள் ஒருவரும் கிடையாது" என அறிக்கை வெளியிட்டது. ஆனால் கெட்டிக்காரனின் புளுகு எட்டு நாளைக்கு மட்டும் என்ற கதையாகிப் போனது 'மார்க்சிஸ்டு'களின் இந்த அறிக்கை. "எதிர்க்கட்சியினர், மாற்று அரசியல் கருத்து கொண்டோர், நக்சல்பாரி புரட்சியாளர்கள் என கிட்டத்தட்ட 150-க்கும் அதிகமானோர் அரசியல் கைதிகளாக அம்மாநிலத்தில் சிறை வைக்கப்பட்டுள்ளனர்; மேலும் 18 அரசியல் கைதிகள் சிறையில் பத்தாண்டுகளுக்கு மேலாகக் கழித்த பின்புதான், விசாரணை முடிந்து அவர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது" என்ற உண்மைகளை அம்பலப்படுத்தியுள்ளார், நக்சல்பாரி இயக்கத் தோழர் விஸ்வநாத் சக்கரவர்த்தி.



அரசியல் கைதிகளை விடுவிக்கப் போராடும் விசுவநாத் சக்கரவர்த்தி

"ஆனந்த தேப் பார்மா, ஷீதல் தேப் பார்மா, சகாதேவ் மால் - இம்மூவரும் 81-82-ம் ஆண்டுகளில் மேற்கு வங்க போலீசால் கைது செய்யப்பட்டனர். அரசைக் கவிழ்க்க சதி செய்ததாக இம் மூவரின் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டது. அப்பொழுது இம்மூவரின் வயதே 11 தான். ஆனாலும் இம்மூவரும் வழக்கு விசாரணைக்காக சிறுவர் நீதிமன்றத்துக்கு அனுப்பப்படவேயில்லை" — இப்படி அரசியல் கைதிகள் பற்றிய பல அதிர்ச்சியூட்டக் கூடிய உண்மைகளைத் தொகுத்து அறிக்கையாக வெளியிட்டும் உள்ளார், அவர். மேலும், "தன்னையும் உள்ளிட்டு நக்சல்பாரிகள் அனைவரையும் 1991-லேயே விடுதலை செய்து விட்டதாகக் கூறுகிறது ஜோதிபாசு அரசு; ஆனாலும் நக்சல்பாரி இயக்கத்தைச் சேர்ந்த பலர் வழக்கு தொடரப்படாமலும் விசாரணை முடிவடையாமலும் தனிக் கொட்டடிகளில் அடைக்கப்பட்டுள்ளனர்" என்கிறார் விஸ்வநாத்.

தனது உடல் நலக் குறைவையும் பொருட்படுத்தாது, இந்த அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி இயக்கமொன்றையும் தொடங்கியிருக்கிறார், அவர். கடந்த மார்ச் 9-ந் தேதியன்று சிவில் உரிமைக் கழகங்களும் இணைந்து இதற்காக கல்கத்தாவில் கருத்தரங்கம் ஒன்றும் நடைபெற்று முடிந்தது. இக்கருத்தரங்கில் "அரசியல் கைதிகளை விடுதலை செய்; ஆயுள் தண்டனை கொடுக்கப்பட்டவர்களுக்குப்



படிப்பகம்


www.padippakam.com



பொது மன்னிப்பு வழங்கு'' எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஜோதிபாசு மேற்கு வங்கத்தில் கட்டியிருப்பது ''தொழிலாளி வர்க்க அரசா?'' அல்லது ''போலீசு ராஜ்ஜியமா?'' என்பதை அக்கட்சி அணியினர்தான் இனி முடிவு செய்ய வேண்டும்.

## இந்து மத வெறியாட்டத்துக்கு குண்டுவெடிப்பு ஒரு சாக்கு

தமிழகத்தில் இந்து மதவெறிக் கும்பல் தலைவிரித்துக் கொலை வெறியாட்டம் போட ஆர்.எஸ்.எஸ். அலுவலக குண்டு வெடிப்பு, ராஜகோபாலன் கொலை வழக்கு இவற்றிற்கு அடுத்ததாக இந்து முன்னணியின் சிந்தாதிரிப் பேட்டை அலுவலக குண்டு வெடிப்பு ஒரு வாய்ப்பைத் தந்துள்ளது. குண்டு வெடித்ததற்கு பதிலடி என்கிற முறையில் சென்னை, கோவை, நாகர் கோவில், மதுரை, கம்பம், சேலம் ஆகிய இடங்களில் கூலிப் படையை வைத்துக் கடையடைப்பு நடத்தும்படி தாக்குதலில் ஈடுபட்டது, இந்து முன்னணி கும்பல். சிந்தாதிரிப்பேட்டை பகுதியில் ஒரு மசூதிக்கு தீ வைத்தும், ராயபுரம் - காசிமேடு பகுதியில் ''பைபிள்'' சண்முகத்தின் சவ ஊர்வலம் சென்றபோது அன்னை மேரி சிலையை உடைத்தும் வெறியாட்டம் போட்டனர். கம்பத்தில் ஒரு பேருந்துக்கு தீ வைத்தனர். இவையெல்லாம் போலீசு முன்னிலையிலேயே நடத்தப்பட்டன.



இந்து முன்னணி அலுவலக குண்டு வெடிப்புக்குப் பின் தீ வைக்கப்பட்ட மசூதி

இந்தக் கலவரங்களில் கத்திக்குத்து சம்பவங்களும் நடந்தன. அப்பாவி மக்கள் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டனர். சென்னை, கோவை, கன்னியாகுமரி மாவட்டங்களிலேயே அதிகத் தாக்குதல் சம்பவங்கள் நடந்து, சில உயிர்களும் பறி போயின. சென்னையில் ஒருவர், கோவையில் 3 பேர் கொல்லப்பட்டனர். பிரபு, ராஜேந்திரன், அன்வர், சுலைமான் என இந்து, முஸ்லீம் இரு தரப்பினரும் இறந்தவர்களில் அடக்கம். இச்சம்பவத்தைச் சாக்கு வைத்து சமூக விரோதிகளும் கடைகளைத் தாக்கி சூறையாடிச் சென்றனர்; கத்திகுத்துக்களில் ஈடுபட்டனர்.

ஒரு அரசியல் கட்சித் தலைவனோ, ஒரு திரைப்பட நடிகனோ கொலை செய்யப்பட்டு விட்டால் விசுவாசம் - பக்தி மிக்க தொண்டர்கள் ஆத்திரத்திற்குள்ளாகி இப்படி எதிர்த்தாக்குதல் தொடுப்பதைப் போல் இந்து வெறியர்களின் செயலையும் சாதாரணமாக்கிப் பேசுகிறார்கள், சிலர். தொண்டர்கள் என்கிற பெயரில் கட்சியின் குண்டர்களும் கட்சி சாராத சமூக விரோதிகளும்தான் இது போன்ற சம்பவங்களைப் பயன்படுத்திக் கொண்டு அப்பாவி மக்களைப் பாதிப்புக்குள்ளாக்குகிறார்கள். இப்படி இக்குண்டர்கள் தொடர்ந்து ஒவ்வொரு கொலைக்குப் பின் வெறியாட்டம் போடுவது ஒரு கலாச்சாரமாகி விட்டது. இதற்கு மக்கள் பயந்து நடுங்குவதும், குண்டர்களின் அராஜகத்தை சகித்து ஒதுங்கிக் கொள்வதும் வழமையாகி வருகிறது. ஆனால் இக்கேடுகெட்ட கலாச்சாரத்தை இந்து வெறியர்கள் கையிலெடுப்பதற்கும் மற்றவர்கள் கையிலெடுப்பதற்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது. மதப் பகைமையே இல்லாத இடங்களில் கூட மதப் பகைமையை விதைத்து மதக் கலவரத்திற்கான அபாயத்தை இந்து மதவெறியர்கள் தோற்றுவிக்கிறார்கள். இது திட்டமிடப்பட்டதாகவும் பயிற்சி கொடுத்த குண்டர்களைக் கொண்டும் நிகழ்த்தப்படுகிறது.

வெடிகுண்டு வைத்ததற்கு காரணம், இந்து முன்னணியைச் சேர்ந்த கஜா என்பவரது விரோதியான அ.தி.மு.க. வாரியத் தலைவர் பாலகங்காவின் பழி வாங்கும் நடவடிக்கையாக இருக்கலாம் என்ற ஒரு கருத்து நிலவுகிறது. இந்து முன்னணி கும்பல் குறிப்பிடுகிறபடி கொலைகாரன் முஸ்லீமா, துப்பாக்கி வைத்திருந்தானா, ஆர்.டி.எக்ஸ் போன்ற சக்தி வாய்ந்த குண்டா என்ற கேள்விகளுக்கு இல்லை என்ற பதில்களும் சந்தேகங்களுமே போலீசு தரப்பிலிருந்தும் வெளி வருகின்றன. ஆனால் இந்து வெறியர்கள் பழியை முஸ்லீம்கள் மீது உடனடியாகப் போட்டு பம்பாய் குண்டு வெடிப்பு, பாகிஸ்தான் உளவுப் பிரிவு ஐ.எஸ்.ஐ. உடனெல்லாம் தொடர்புபடுத்திப் பீதியைக் கிளப்பினார்கள். இதற்கு அரசாங்கமும், பத்திரிகைகளும் ஒத்தூதின.

இந்து முன்னணிக்காரர்களின் அறிக்கைகளையெல்லாம் அரசு தரப்பு செய்தி போல் தலைமைச் செயலகத்திலிருந்து வெளியிடுவதற்கு ஜெயா கும்பல் உதவி செய்தது. தாழ்த்தப்பட்டவர்கள் போலீசு கொட்டடியில் கொல்லப்பட்டாலோ இறந்தாலோ சில பத்தாயிரங்களை நிவாரணமாகத் தருகிற ஜெயலலிதா, இக்குண்டு வெடிப்பில் இறந்த இந்து வெறியன் பைபிள் சண்முகத்திற்கு மட்டும் 1 லட்சம் ரூபாய் தந்துள்ளார். குண்டு வெடிப்புக்குப்பின் நடந்த கலவரத்தில் இறந்த அப்பாவி முஸ்லீம்களுக்கும் எந்த நிவாரணமும் இல்லை. இவற்றையெல்லாம் விட உண்மைகளை - முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல் ''கடைகளை மூடச் சொல்லி எந்த வன்முறையும் நடக்கவில்லை; மாதா சிலை உடைக்கப்படவில்லை'' என்றெல்லாம் சட்டசபையில் கூறி இந்து மதவெறியர்களின் கூட்டாளி என்பதைத் தெளிவாக்கினர் ஜெயலலிதா.

## இந்து வெறியர்களின் சுதேசி ஒப்பனை கலைந்தது

பன்னாட்டு மூலதன ஆதிக்கத்தை எதிர்த்து சுதேசி இயக்கம் நடத்தி மாய்மாலம் செய்த இந்து வெறியர்கள், இப்போது வெளிப்படையாகவே அன்னிய மூலதனத்தை ஆதரிக்கக் கிளம்பிவிட்டனர். கடந்த ஏப்ரல் முதல் வாரத்தில் கோவா தலைநகர் பனாஜியில் பாரதீய ஜனதா கட்சியின் தேசிய நிர்வாகக் குழு கூட்டம் நடந்தது. அடுத்த ஆண்டு நடைபெற



படிப்பகம்

www.padippakam.com



வுள்ள பொதுத் தேர்தலைக் கணக்கில் கொண்டு கட்சியின் வேலைகள் பற்றி இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. குறிப்பாக, மகாராஷ்டிரா, குஜராத் மாநிலங்களில் புதிய ஆட்சியில் எத்தகைய பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றுவது, பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களுடன் எவ்வகையான அணுகுமுறையை மேற்கொள்வது என்று விவாதிக்கப்பட்டது. ஆயினும் இப்பிரச்சினையில் கட்சியில் ஒத்த கருத்து இல்லை.

ஆர்.எஸ்.எஸ். மற்றும் பிற இந்து வெறி அமைப்பைச் சார்ந்தவர்கள் அனைத்து வகை அந்நிய முதலீடுகளையும் எதிர்த்து, சுதேசியை வலியுறுத்துகின்றனர். ஆனால் பாரதீய ஜனதாவின் புதிய தலைமுறையோ, தாராளமயக் கொள்கையை ஆதரிக்கிறது. இல்லையேல் தொழிலதிபர்களிடம் கட்சி செல்வாக்கு பெற முடியாது என்று எச்சரிக்கிறது.

எனவே இருதரப்பையும் சாந்தப்படுத்தும் வகையில், ''கம்ப்யூட்டர் சிப்ஸ் வேண்டும்; உருளைக்கிழங்கு சிப்ஸ் (வறுவல்) வேண்டாம்'' என்ற புதிய முழக்கத்தை கட்சித் தலைமை வடித்துள்ளது. ''நுகர் பொருள் துறையில் அன்னிய முதலீட்டை எதிர்ப்போம்; இதர தொழில்நுட்பம் சார்ந்த துறைகளில் அந்நிய முதலீட்டை வரவேற்போம்! பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களை நாட்டை விட்டு வெளியேற்ற மாட்டோம்; அதேசமயம் தேசிய நலன்களை விட்டுக் கொடுக்கவும் மாட்டோம்; ஒவ்வொரு விவகாரத்திலும் அந்நிய மூலதன நுழைவைப் பற்றி ஆய்வு செய்து ஆதரிப்பதா, எதிர்ப்பதா என்று தீர்மானிப்போம்'' என்று விளக்கெண்ணெய் தனமான விளக்கம் அளிக்கின்றனர், கட்சித் தலைவர்கள்.

மகாராஷ்டிரா சட்டமன்றத் தேர்தலின் போது, ''தாபோலில் அமையவுள்ள அமெரிக்காவின் ''என்ரான்'' மின் திட்ட ஒப்பந்தத்தை ரத்து செய்வோம்'' என்று இந்து வெறியர்கள் சவடால் அடித்தனர். ஆட்சிக்கு வந்த பிறகு, ''என்ரான் மின் திட்ட ஒப்பந்தத்தில் நடந்துள்ள ஊழலைப் பற்றித்தான் விசாரணை செய்கிறோம்; ஒப்பந்தத்தை ரத்து செய்வது எங்கள் நோக்கமல்ல!'' சந்தர்ப்பவாத பல்டியடிக்கின்றனர். பன்னாட்டு ஏகபோக முதலாளிகளின் கூட்டாளிகளாகி முழுக்க நனைந்துவிட்ட இக்கயவாளிகளுக்கு இன்னமும் ''சுதேசி'' முக்காடு எதற்கு?

## தொழிலாளர்கள் வீதியில் துரோகத்தில் தொழிற்சங்கங்கள்

**கா**ங்கிரசு துரோகிகளால் நடைமுறைப்படுத்தப்படும் புதிய பொருளாதாரக் கொள்கையால், கடந்த நான்காண்டுகளில் பல்லாயிரக்கணக்கான அரசுத் துறை ஊழியர்கள் வேலையிழந்து பரிதவிக்கின்றனர். 1991-ஆம் ஆண்டின் இறுதியில் 224 அரசுத்துறை நிறுவனங்களில் 83 நிறுவனங்கள் பெருத்த நட்டத்தில் இயங்குவதாகக் கணக்கு காட்டப்பட்டது. இந்நிறுவனங்களில் பணியாற்றும் மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 3.75 லட்சம் பேராகும். இவ்வளவு பேரையும் படிப்படியாக வேலையிலிருந்து விரட்டியடிப்பதே அரசின் அறிவிக்கப்படாத கொள்கையாக இருந்தது.

இந்நிறுவனங்களில் பெரும்பாலானவை தேசிய பஞ்சாலைக் கழகத்தைச் சேர்ந்தவையாகும். முன்பு தனியார் முதலாளிகளின் கீழிருந்த இந்த ஆலைகள் நலிவடைந்து கதவடைப்பு செய்யப்பட்டதால், தொழிலாளர் நலன் கருதி அரசே இவற்றை ஏற்று நடத்தியது. இப்போது நட்டத்தைக் காரணங்காட்டி தொழிலாளர் நலனைப் பலியிடுவதே கொள்கையாகி விட்டது.

குறிப்பாக, ராஜீவின் புதிய ஜவுளிக் கொள்கையால், தேசிய பஞ்சாலைக் கழக ஆலைகள் நலிவடைந்த பிறகு நான்காண்டுகளுக்கு முன்பு அரசின் ஜவுளி ஆராய்ச்சி நிறுவனம் 80,000 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்ய சிபாரிசு செய்தது. இதர அரசுத் துறை நிறுவனங்களிலிருந்து 3 லட்சம் தொழிலாளர்களை வெளியேற்ற பொதுத்துறை நிறுவனங்களின் குழுமம் முடிவு செய்தது.



இவற்றுக்கு எதிராக ''பொதுத்துறையைப் பாதுகாப்போம்'' என்ற முழக்கத்துடன் 1991-ம் ஆண்டில் தொழிலாளர்களைத் திரட்டிப் போராட்டங்களை நடத்திய தொழிற்சங்கங்கள் அதன் பிறகு செயலிழந்து முடங்கிவிட்டன. அரசுடன் சமரசமாகிப் போகும் தரகர்களாக அவை சீரழிந்து விட்டன. துரோகத் தொழிற்சங்கங்களின் ஒப்புதலுடன் கடந்த நான்காண்டுகளில் சுய விருப்ப ஓய்வு பெறும் திட்டத்தின் கீழ் ஒன்றரை லட்சம் தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். தங்கக் கை குலுக்கல் திட்டத்தின் கீழ் 35,000 பேர் வீட்டுக்கு அனுப்பட்டுள்ளனர். இதுதவிர, நடப்பு ஆண்டில் மேலும் 45,000 பேர் தேசிய பஞ்சாலைக் கழக ஆலைகளிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட உள்ளனர்.

புதிய பொருளாதாரக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகு கதவடைப்பு - ஆலை மூடல்களாலேயே பெருமளவு மனித வேலை நாட்கள் இழப்பு ஏற்பட்டுள்ளது. வேலை நிறுத்தங்களால் ஏற்படும் இழப்பு அற்பமானதாகிவிட்டது. புரட்சி பேசும் தொழிற்சங்கங்களின் துரோகத்தனத்திற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?

**வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்பால் ஏற்பட்ட மனித வேலை நாட்கள் இழப்பு (இலட்சத்தில்)**

| ஆண்டு | வேலை நிறுத்தத்தால் | கதவடைப்பால் | மொத்தம் |
|---|---|---|---|
| 1990 | 106.4 | 134.5 | 240.9 |
| 1991 | 124.3 | 140.0 | 264.3 |
| 1992 | 151.3 | 161.3 | 312.6 |
| 1993 | 56.1 | 146.9 | 203.0 |
| 1994 | 20.4 | 88.2 | 108.6 |



படிப்பகம்

# இறால் பண்ணை எதிர்ப்பு நேரடி செய்தி தொகுப்பு

**மே,1 -க்கு முன் சீர்காழியில் இறால் பண்ணைகளுள்ள சுற்று கிராமங்களில் திரட்டிய கருத்தும் செய்தியும் யதார்த்த நிலையை உணர்த்துகின்றன.**

தமிழ்நாட்டில் பெருகிவரும் இறால் பண்ணைகளுக்கு எதிரான போராட்டங்கள் வளர்ந்து வருகின்றன. சீர்காழி வட்டத்தில் தென்னாம்பட்டினம், பெருந்தோட்டம், அல்லிமேடு, புதுத்துறை கிராமங்களில் மக்கள் தன்னெழுச்சியாகப் போராடி வருகிறார்கள். விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி, மக்கள் கலை இலக்கியக் கழகம் ஆகிய அமைப்புகளின் கூட்டமைப்பில் மே - 1ந் தேதி சீர்காழியில் இறால் பண்ணை அழிப்புப் போராட்ட இயக்கம் நடந்து வருகிறது. இதற்குப் போட்டியாக சிதம்பரம் வாண்டையார் குடும்பம், மணி சங்கரய்யர், இறால் பண்ணை முதலாளிகள் இணைந்து 'இறால் பண்ணை செழிப்புப் போராட்டம்' நடத்துவதாக அறிவித்துள்ளனர். தமிழகப் பத்திரிகைகள் எல்லாம், ஓட்டுக் கட்சிகள் எல்லாம் இறால் பண்ணை தொடர்பான பிரச்சினையை அலட்சியப்படுத்தி வருகின்றன. எனவே வாசகர்கள் யதார்த்த நிலைமையைப் புரிந்து கொள்வதற்கு உதவியாக சீர்காழி பகுதியில் நேரடியாக செய்தி சேகரித்து வெளியிட்டுள்ளோம்.

இங்கு வெளியாகியுள்ள பேட்டிகளில் பண்ணை முதலாளிகள் மற்றும் மிராசுதார்களின் பண்ணைக்கு ஆதரவான நிலை, ஓட்டுக்கட்சிகளின் துரோகம் அல்லது சந்தர்ப்பவாத நிலை, சிறு நடுத்தர விவசாயிகள் மற்றும் வியாபாரிகளின் நடுநிலை அல்லது ஊசலாட்டமான நிலை ஆகியவை தெளிவாகத் தெரிகின்றன. மிராசுதார்களில் சிலர், ஓட்டுக்கட்சிகளில் சிலர் நடுநிலையாகவும், ஆதரவாகவும் பேசியிருப்பதற்கு பண்ணைக்கு எதிரான மக்கள் போராட்டம், புரட்சிகர அமைப்புகளின் போராட்ட பிரச்சார வீச்சு ஆகியவை காரணமாக இருக்கின்றன. மீனவர்கள் ஓட்டு மொத்தமாக பண்ணைக்கு எதிரான போராட்ட உணர்வில் இருப்பதும் தெளிவாகத் தெரிகிறது. ஆனால் கூலி விவசாயிகள், இளைஞர்களது கருத்துக்களில் சில அவர்களது வர்க்க நலனுக்கு அப்பாற்பட்டு பண்ணைக்கு ஆதரவாகவோ, நடுநிலையாகவோ வெளிப்படுவதையும் பார்க்கலாம். இதற்கு சில அடிப்படைகளும் காரணங்களும் உண்டு.

காவிரியின் கடைமடைப் பகுதியாக உள்ள உப்பனாறு ஓடும் சீர்காழி பகுதி பல ஆண்டுகளாக நீரின்றி விவசாயமே செய்ய முடியாத நிலையில் உள்ளது. காவிரியில் நீர் வராததால் உப்பனாற்றில் முழுக்க கடல்நீரே உள் வந்து பல நிலங்களை உவராக்கியது. இதுவரை உள்ள எந்த ஆட்சியாளர்களும் காவிரி நீருக்கும் வழி செய்யவில்லை; நிலத்தடி நீரையோ, ஏரி நீரையோ எடுத்து விவசாயம் செய்வதற்குரிய பாசன முறைகளுக்கும் வழி செய்யவில்லை. வேலையிழந்து, வாழ்விழந்து கிடந்த இப்பகுதி கூலி விவசாயிகளுக்கு இறால் பண்ணைகள் வேலை கொடுத்திருந்தாலும் அது மிகச் சில நூறு பேருக்குத்தான். உள்ளூர் மக்களின் ஒத்துழைப்பின்றி இறால் பண்ணை இயங்கவே முடியாது என்பதைப் புரிந்துணர்ந்துள்ள

## பண்ணை முதலாளிகளின் பம்மாத்து வேலைகள்

விவசாய நிலங்கள் மட்டுமல்ல, மேய்ச்சல் நிலங்கள், புறம்போக்கு நிலங்கள், கோயில் நிலங்கள், வாய்க்கால்கள், வழிப் பாதைகள், குடியிருப்பு பகுதிகளையும் பெருமளவு வளைத்துப் போட்டுள்ளவை, எஸ் அண்டு எஸ், சிறீராம், ஸ்பென்சர், மேக்னா சீ புட்ஸ், பாஸ்க், பிஸ்மி போன்ற பெரிய பண்ணைகள்தான். இவை தரகு முதலாளிகள், நில - பண முதலைகள், அரசியல்வாதிகளுக்குச் சொந்தமாகவோ, அவர்களைப் பங்குதாரர்களாகக் கொண்ட நிறுவனமாகவோ உள்ளன.

2 முதல் 25 ஏக்கருக்குள் இருக்கும் ஏராளமான சிறு பண்ணைகள் தரிசு நிலங்களிலேயே பெரும்பாலும் அந்நிலச் சொந்தக்காரர்களான சிறு, நடுத்தர, பணக்கார விவசாயிகளால் வைக்கப்பட்டுள்ளன. வெளி மாவட்டங்களிலிருந்து மாநிலங்களிலிருந்து வந்த சிறு, நடுத்தர முதலீட்டாளர்கள் சிலர் விவசாய நிலங்களையும் வாங்கி சிறு பண்ணை அமைத்திருக்கிறார்கள். சிறுபண்ணையாளர்கள் சிலரும் ஆற்றையும், வாய்க்கால்களையும் மறித்துள்ளனர். திருமுல்லைவாசல் அருகே முத்துராஜா என்பவர் வாய்க்காலை மறித்ததற்காக கைது செய்யப்பட்டு பின் அ.தி.மு.க. எம்.எல்.ஏ உதவிடன் வெளிவந்து அதே இடத்தில் பண்ணை வைத்திருக்கிறார். இறால் பண்ணையில் உள்ள உடனடி, அதிக லாபத்தைக் கண்டு மயங்கி வந்து கடனுடனை அடைக்கலாம், கொஞ்சம் வசதியைப் பெருக்கிக் கொள்ளலாம், கொஞ்சம் சொத்து சேர்க்கலாம் என்ற ஆசையில், நம்பிக்கையில் இருக்கிறார்கள்.

நான்கு வருடத்திற்கு முன்பு இறால் பண்ணை பாதிப்பு பற்றி விழிப்புணர்வு இல்லாதபோது விவசாயிகளின் அறியாமையையும் பயன்படுத்திதான் நிலம் பிடுங்கப்பட்டுள்ளது. பண்ணைகளுக்கு நிலம் விற்ற விவசாயிகள் பலர் அனுபவத்தாலேயே பாதிப்புகளைக் கண்டபின் "அப்பொழுதே தெரிந்திருந்தால் நிலம் கொடுத்திருக்கவே மாட்டேன்" என்று கூறி பண்ணையை எதிர்க்கிறார்கள். நிலம் வாங்கிய கையோடு கட்டுமானப் பணியை முடித்து இயங்கத் தொடங்கியதால் தான் எஸ் அண்டு எஸ் மற்றும் சிறீராம் பண்ணைகள் தப்பித்துள்ளன. மேலும் ஊருக்குள் ரோடு, மின்விளக்கு, குடிநீர் குழாய் போட்டுத் தருவதாகவும், பள்ளிக்கூடக் கட்டிடங்களை புதுப்பிப்பதாகவும், கோயிலுக்கு கும்பாபிஷேகம் செய்து தருவதாகவும் இன்னும் இதுபோன்றும் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். இவற்றில் சிலவற்றை செய்தும் கொடுத்துள்ளனர்.

எஸ் அண்டு எஸ் கம்பெனி ராதா நல்லூர் கிராமத்தையே தத்து எடுத்துக் கொண்டு பணத்தை வாரியிறைத்து கிராம மக்களிடையே கணிசமான ஆதரவைப் பெற்றுள்ளது. விவசாயத்தில் வேலை செய்து கொண்டிருந்த பெண்களுக்கு இறால் பண்ணைகளில் வேலையில்லாமல் போனதால் அவர்களைத் திருப்திப்படுத்தும் முகமாக பாய்முடைய, தையல் கற்றுக் கொள்ள ஏற்பாடு செய்திருக்கிறார்கள். வேலூரில் இருக்கும் "விசுவாசம்" என்ற தன்னார்வக் குழுவின் கிளையை இது போன்ற சேவைக்கென்றே ராதாநல்லூரில் தொடங்க வைத்து 90% பண உதவி செய்து கொண்டிருக்கிறது. சிறீராம் கம்

www.padippakam.com

முதலாளிகள் அவர்களுக்குப் பல சலுகைகளைக் கொடுத்தும் அவர்களில் சிலரைக் கைக்கூலிகளாகவும் விலை பேசி வைத்துள்ளனர். இதுவல்லாமல் அடியாட்கள், போலீசு, ஓட்டுக்கட்சிக் காரர்கள் பலத்துடன் மக்களை ஒருவித பயத்திற்கும் உட்படுத்தியிருக்கிறார்கள்.

இந்த அடிப்படையிலேயே கூலி விவசாயிகளிடத்தில் ஆதரவான மற்றும் நடுநிலையான கருத்துக்கள் வெளிப்படுகின்றன. பாமரர்களான அவர்களிடம் உள்ள அறியாமை, வாழ்வில்லாமல் அவர்களிடமிருக்கும் விரக்தி, அவர்களது இல்லாமையை இறால் பண்ணை முதலாளிகள் பயன்படுத்திக் கொண்டுள்ளனர். இதை அம்பலப்படுத்தி ஓட்டுக்கட்சிகளும், தன்னார்வ குழுக்களும் செயல்படுவது கிடையாது; மாறாக தமது நலனில் சந்தர்ப்பவாதமாக - சமரசமாக நடந்து கொள்வது அல்லது மௌனம் சாதிப்பது அல்லது துரோகம் இழைப்பது போன்றவை தான் இவற்றின் நடைமுறை. இதுவும் கூலி விவசாயிகளை தவறான முடிவுகளுக்குத் தள்ளியதற்கு ஒரு முக்கிய காரணம்.

உண்மைகளை மக்களுக்கு உணர்த்தி விட்டால், எதிரிகளை கூர்மையாக இனங்காட்டிவிட்டால் மக்கள் தமது வர்க்க நலனில் நின்று போர் தொடுப்பதைத் தடுக்க முடியாது.

## இறால் பண்ணை முதலாளிகள், கையாட்கள்.

**தனி நிர்வாகி, சிறீராம் அமால்கம் மெரைன் ப்ராடக்ட் (தனியார் நிறுவனம்), நெய்தல் வாசல்.**

தரிசாக - திடலாகக் கிடந்த நிலத்தை கிராம பஞ்சாயத்துத் தலைவர்கள் மூலம் விலை நிர்ணயம் செய்துதான் வாங்கினோம்; விளை நிலங்களே இல்லை; இதனால் தமிழக அரசு போட்டுள்ள மசோதாவால் எங்களுக்கு எவ்விதப் பாதிப்பும் வராது.

இறால் குட்டைகளில் வெறும் சுண்ணாம்பும், யூரியா போன்ற விவசாய உரங்களையும் தான் போடுகிறோமே ஒழிய எவ்வித ரசாயனமும் கிடையாது;

பண்ணையை அழிக்க வருகிறவர்களை இக் கிராம மக்களே அனுமதிக்க மாட்டார்கள். லாப்டி அமைப்போ நிலத்தை திருப்பிக் கொடுக்கச் சொல்கிறது. சட்டரீதியாக இதற்கு உரிமை இல்லை; செல்லாது.

**போஸ், ''விசுவாசம்'' என்ற தன்னார்வ குழுவின் அலுவலர், வழுதலைக் குடி.**

இறால் பண்ணையால் சுற்றுச்சூழல் பாதிப்பு வரும் என்பது நிருபணமான ஒன்று கிடையாது. பண்ணையில் வேலை செய்து கைநிறைய சம்பளம் வாங்குறதனால் இவர்களின் (ராதா நல்லூர் மக்கள்) வாழ்க்கைத் தரமே மாறிவிட்டது. பாருங்க வெள்ளையும் சொல்லையுமா சட்டை போட்டு குளித்து, சீவி சுத்தமாக இருப்பதை. முன்னாடி எல்லாம் இப்படி கிடையாது. முன்பை விட குடிப்பதும் பெருகியிருக்குதுதான்; கையில காசு இருந்தா இதெல்லாம் சகஜம்தானே? கிராமத்தில் யாராவது இறந்தால் இறுதிச் சடங்குக்கு இனாமாக 300 ரூபாய் பணம் தருகிறோம். கஷ்ட நேரத்தில் கடன் கொடுக்கிறோம். நீங்கள் யாரை வேண்டுமானாலும் கேட்டு பாருங்க; பண்ணை வேண்டும் என்று தான் சொல்வார்கள்.



**சிறு இறால் பண்ணை முதலாளி, மாத்தாம்பட்டினம், சொந்த ஊர் கரூர், வக்கீல் தொழிலை விட்டு இத்தொழி**லுக்கு வந்தவர்.

தஞ்சாவூர்ல நிலப்பிரச்சினையை எடுத்த கம்யூனிஸ்டுகள் அது முடிஞ்சிட்டதால இப்ப இதை எடுக்கிறாங்க. இந்த கிராம மக்கள் எங்களுக்கும் பாதுகாப்பு தராங்க. விவசாயப் பாதிப்பை தடுக்க இந்தந்த இடத்தில்தான் பண்ணை வைக்கலாம்னு வேணா அரசு வழி செய்யலாம்.

பெனி தான் இருக்கும் நெய்தல் வாசல் கிராமத்தைத தத்தெடுத்துள்ளது. ப்ரானக்ஸ் என்ற நிறுவனம் (தொடங்கப்படவில்லை) வெறுமனே 100 பேரை வேலைக்கு எடுத்து சம்பளம் கொடுத்து கொண்டிருக்கிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

இதுவல்லாமல் எதிர்ப்பு உள்ள கிராமங்களில் கூட சிலரை விலைபேசி கைக்கூலிகளாக, கையாட்களாக வைத்திருக்கிறார்கள். விவசாயிகள், மீனவர்கள் முரண்பாட்டைப் பயன்படுத்தி பிரிப்பது, மோதலை உருவாக்க முயற்சிப்பது, சாதிய முரண்பாடுகளை பெரிதாக்க முயற்சிப்பது போன்ற சதிகளிலும் மறைமுகமாக ஈடுபடுகிறார்கள். இதனால் மீனவர்கள் பல கிராமங்களில் பண்ணையை ஆதரிப்பவர்களை ஊரிலிருந்து விலக்கி வைப்போம் என்று எச்சரித்து ஊர்க் கட்டுப்பாடு போட்டுள்ளனர். பெருந்தோட்டம் தாழ்த்தப்பட்ட கூலி விவசாயிகள் ஊர்க்கட்டுப்பாடு போட்டது மட்டுமல்லாமல் அவ்வாறு முதலாளிகளுக்கு சாதகமாகச் செயல்பட்ட சிலரை பஞ்சாயத்து மூலம் தண்டனை கொடுத்தும் உள்ளனர். மேலும் முதலாளிகள் வெளியூரிலிருந்து அடியாட்களைக் கொண்டு வந்து வைத்து ஆயுதப் பயிற்சி கொடுத்து மக்களைத் தாக்கி பீதியூட்டுவதை செய்து வருகிறார்கள். வேறு வழியில்லாமல் தற்காப்பிற்காக ஆயுதங்களை எடுக்கவேண்டிய நிலைக்கு பெருந்தோட்டம், தென்னாம்பட்டினம் கிராம மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

## ''லாப்டி''யின் துரோகம்

ராதாநல்லூரில் ஒரு வருடத்திற்கு முன் ''லாப்டி'' அல்லது ''கிராம சுயராஜ்ஜிய இயக்கம்'' என்ற ஜெகந்நாதன் என்பவரது தலைமையிலான அமைப்பு கிராம மக்களைத் திரட்டி பண்ணைக்கு எதிராகப் போராடியது. வீடு கட்டித்தருகிறோம் என்ற ஆசைகளைக் காட்டி மக்களைத் திரட்டிய இத்தன்னார்வக் குழு ஒரு கட்டத்தில் இறால் முதலாளிகளிடம் பண்ணையை எங்களிடம் ஒப்படையுங்கள் நாங்களே நடத்திக் கொள்கிறோம் என்று பேசியுள்ளது. இதனாலும் வீடு கட்டித்தராமல் ஏமாற்றியதாலும் வெறுப்புற்ற மக்கள் அவ்வமைப்பையே கிராமத்திலிருந்து விரட்டியடித்து விட்டு விரக்தியில் பண்ணை ஆதரவாளர்களாகியுள்ளனர்.

காந்தி வழி, அகிம்சை போன்றவற்றை உயர்த்திப் பிடிக்கும் இக்கிராம சுயராஜ்ஜிய இயக்கம் 91-ல் ஒரு பாதயாத்திரை நடத்தியபோது சீர்காழி பகுதியில் இறால் பண்ணைகளுக்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்துக் கொண்டிருந்ததால் பிரச்சினையில் தலையிட்டு தலைமை கொடுத்தது. பல கிராமங்களில் விவசாயிகள், மீனவர்கள் மத்தியில் செயல்பட்ட இவ்வமைப்பு குறிப்பிட்ட கட்டம் வரை போராட்டத்தை எடுத்துச் சென்றுவிட்டு பின் அஹிம்சை தத்துவம் பேசியோ, முதலாளிகளுடன் பேரம் - சமரசம் பேசியோ போராட்டத்தைக் கைகழுவி விடுகிறது.

தென்னாம்பட்டினத்தில் குடிசைகள் எரிந்து பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பல உதவிகள் - சலுகைகளைச் செய்து கொடுத்ததே ஒழிய அரசு மற்றும் ஆதிக்கச் சக்திகளுக்கு எதிரான போர்க் குணத்தை மக்களிடையே வளர்க்கவில்லை. ஏன் இறால் பண்ணை எதிர்ப்பைக் கூட மக்கள் விழிப்புணர்வு கொள்ளும் வண்ணம் பிரச்சாரம் செய்யவில்லை. இத்தகைய துரோக செயல்பாடுகள், அகிம்சை



படிப்பகம்

www.padippakam.com



**வெள்ளையத் தேவர், பண்ணைக்கு நிலம் மற்றும் ஆட்களை சேர்த்துத் தரும் தரகர், தருமகுளம்.**

பண்ணைக்குக் கொடுத்ததெல்லாம் விவசாயம் பண்ண முடியாத நிலந்தாங்க. ஸ்பென்சர் பண்ணை கேட்ட விலை படியாததால் வானகிரியில் எனது நிலத்தில் போட்டிக்கு 2 வருடம் விவசாயம் செய்தேன்; 30 வீதம் கண்டுமுதல் வரவேண்டியதற்குப் பதில் 12 வீதம் தான் வந்துன்னா பார்த்துக்குங்க. பண்ணை வந்ததால கூலி வேலை பறிபோனதுன்னு சொல்றதும் பொய்ங்க. கீழையூர் கிராமம் முழுவதும் இறால் பண்ணைகளில் வேலை செய்கிறார்கள். பண்ணைகளில் சுண்ணாம்பு, டீத்தூள் போன்றவைதான் பயன்படுத்துகிறார்களே ஒழிய ரசாயனம் கிடையாது; நிலத்தடி நீர், சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவது பற்றி அறிஞர்கள்தான் கூற வேண்டும். அப்படி பாதிப்பு இருக்குமாயின் முறையாக வழக்கு தொடரலாமே ஒழிய பண்ணையை அழிக்கப் போகிறேன்னு சொல்றது வன்முறைக்குத்தான் வழி வகுக்கும். இதனை போலீசுதான் பார்த்துக் கொள்ள வேண்டும்.

### மிராசுதார்கள்

**எம். முருகையன், முன்னாள் தலைமை ஆசிரியர், பெருந்தோட்டம்.**

நாங்கள் பண்ணையை ஆதரிக்கறவங்க பக்கமும் கிடையாது; எதிர்க்கிறவங்க பக்கமும் கிடையாது; நடுநிலைதான். இறால் பண்ணையால் பாதிப்பு இருக்கிறத ஒத்துக்கறேன்; போராடுபவர்கள் தீவிரவாத இயக்கம்; நாங்களோ மிதவாதிகள்; எப்படி ஆதரிக்க முடியும்?



**ஆர். தில்லை நாயகம், கிராம நல சங்கத் தலைவர், பெருந்தோட்டம்**

தண்ணீரில்லை. கூலியாள் பிரச்சினை போன்ற காரணங்களால் நிலத்தை பாஸ்க் பண்ணைக்குக் கொடுத்தேன்; தாழ்த்தப்பட்டவர்களும், மீனவர்களும் கூட நிலம் விற்றிருக்கிறார்கள்.

தாழ்த்தப்பட்டவர்களை விவசாயிகள் விடுதலை முன்னணி, சி.பி.ஐ. எம்.எல். லாப்டி இயக்கத்தினர் தூண்டிவிடுகிறார்கள்; இதனால் போராட்டத்தை நாங்கள் ஆதரிக்கவும், எதிர்க்கவும் இல்லை; நடுநிலைதான். தாழ்த்தப்பட்டவர்கள் பெரும்பான்மையாக இருப்பதால் மற்ற சாதிக்காரர்களை தங்களுக்கு ஆதரவு தரும்படி மிரட்டுகிறார்கள்; இதனால் எங்கள் பாதுகாப்புக்குத்தான் சங்கம் தொடங்கினோம்; பாதுகாப்பு கோரி போலீசுக்கு மனுவும் கொடுத்துள்ளோம்.

**கே.என்.ஆர்., பொறியியலாளர், தருமகுளம்**

விளைச்சலில்லாமல் வேலையில்லாமல் இருந்த இப்பகுதிக்கு பண்ணை வந்தது வரப்பிரசாதம் மாதிரி. இறால் பண்ணையால் பாதிப்பு வரலாம்; ஆனால் இன்று கிடையாது. அரசுக்கு சுற்றுப்புறச் சூழல் மீது அக்கறையுண்டு. உச்ச நீதிமன்றம் கோரியுள்ள இது தொடர்பான



வழியால்தான் முதலாளிகள் பலம் பெற்று அடியாட்களை வைத்துத் தாக்குவதும், மக்கள் பீதியடைந்து ஆதரவு, நடுநிலை என மாறி போயும் உள்ளார்கள். இவ்வமைப்பிற்கு ஆரம்பத்தில் எவ்வளவு மதிப்பு மக்களிடையே இருந்ததோ, அந்த அளவிற்கு இப்போது வெறுப்பு, அதிருப்தி உள்ளது. தென்னாம்பட்டினம், பெருந்தோட்டம் பகுதி கூலி விவசாயிகளோ இவர்களது கட்டுப்பாட்டையும் மீறி போர்க்குணத்துடன் போராடத் தயாராக உள்ளனர்கள்.

## ஆள்காட்டியாக வி.மி.குழு

சீர்காழி வட்டத்தில் சில கிராமங்களில் செயல்படும் சி.பி.ஐ. (எம்.எல்) என்று வேண்டுமென்றே பொதுவில் போட்டுக் கொள்ளும் விணோத் மிஸ்ரா, (வி.எம்) தலைமையிலான குழு, இறால் பண்ணை பிரச்சினையில் விவசாயிகள் விடுதலை முன்னணி தலையிட்டதும் பொறாமை கொண்டது. ஏனெனில், ''இறால் பண்ணைகளை உவர் நிலங்களில் வேண்டுமானால் வைத்துக் கொள்ளட்டும்; இறால் பண்ணையிலும் வேலை கொடு'' என்ற நிலைப்பாடில் செயல்பட்ட இவர்கள் மீது மக்கள் அதிருப்தி கொண்டிருந்தனர். ''இறால் பண்ணைகளை முற்றிலும் அழிக்க வேண்டும்'' என்று வி.வி.மு. எடுத்த இயக்கம் மக்களிடையே வரவேற்பைப் பெற்றது; வி.எம். குழுவினர் தனிமைப்படுத்தப்பட்டனர்.

''வி.வி.மு.க்காரர்கள் வெளியூர்க்காரர்கள்; ஏதாவது செய்து விட்டு ஓடிவிடுவார்கள்; நாம்தான் அடக்குமுறையை அனுபவிக்க வேண்டும்; சுவரில் எழுதிவிட்டால் மட்டும் பண்ணையை ஒழித்து விட முடியுமா?'' — என்றெல்லாம் எதிர்ப் பிரச்சாரம் செய்தது. வி.எம் குழு. இவை எடுபடாததால் தலைகீழாக மாறி மே-1, இறால் பண்ணை அழிப்புப் போராட்டத்தை நாங்கள்தான் நடத்துகிறோம் என்றும் நாங்களும் சேர்ந்து நடத்துகிறோம் என்றும் ஆளுக்கேற்றபடி பேசி வந்தார்கள். போட்டியாக பெருந்தோட்டத்தில் பண்ணையை எதிர்த்து பொதுக்கூட்டமும், மாவட்ட மாநாடு ஒன்றும் நடத்திப் பிரச்சாரமும் செய்தனர். இவற்றில் ''வி.வி.மு-க்காரர்கள் வெளியூரிலிருந்து வந்து பெருந்தோட்டத்தில் தங்கி வேலை செய்கிறார்கள்'' என்று பேசி ஆள்காட்டும் வேலை செய்தனர். இவர்களை அம்பலப்படுத்திய பிரசுரம் ஒன்றை இவர்களது மாவட்ட மாநாட்டில் விநியோகித்துக் கொண்டிருந்த வி.வி.மு. தோழர் பாலுவைத் தாக்கி, பொய் புகார் கொடுத்து போலீசிடம் ஒப்படைத்தனர். பாலு சிறையிடப்பட்டுள்ளார்.

ஏப்ரல் 18-ந் தேதி மீன் வளத்துறை இயக்குநர் முன்னிலையிலும் நாகையில் அமைச்சர்கள் எஸ்.டி.எஸ்., ஜெயக்குமார் முன்னிலையிலும் லாப்டி, உழைக்கும் மக்கள் இயக்கம், ஸ்நேகா, சி.பி.ஐ., சி.பி.எம். ஆகிய அமைப்புகளுடன் வி.எம் குழுவும் சேர்ந்து கொண்டு ''மே 1 - அழிப்புப் போராட்டத்தை நாங்கள் நடத்தவில்லையென்றும் அன்றைய போராட்டத்தில் கலந்து கொள்ள மாட்டோம்'' என்றும் கூறினர். போராட்டக்காரர்களைத் தனிமைப்படுத்தி ஒடுக்க அரசு கோரியபடி இணங்கினர். மே-1 போராட்டத்திற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்ற பெயரில் பலரைக் கைது செய்த போலீசு, சிவப்புத் துண்டு போட்டு மிடுக்குடன் திரியும் வி.எம். குழுவினரைத் தவறிக் கூட கைது செய்யவில்லை.

மே 1 வரை போராட்டக்காரர்களை இடம் மாற்றி மாற்றித் தங்க வைத்துக் கைதாகாமல் பெருந்தோட்டக் கூலி விவ



படிப்பகம்

www.padippakam.com

அறிக்கை வராதவரை, இதைப்பற்றி படிக காதவர்கள் வாயை மூடிண்டு இருக்கணும். அறிக்கை வரவேண்டும் என போராடலாமே ஒழிய வன்முறை கூடாது. அறிக்கை வரும்வரை அரசு, பண்ணை விரிவடையாமல் ஆணையிட வேண்டும்.

### சிறு - நடுத்தர விவசாயிகள் வியாபாரிகள்

**அன்பழகன், கூத்தியம் பேட்டை, சிறுவிவசாயி**

பத்து வருடத்திற்குள் எல்லாப் பகுதியிலும் நீர் உப்பாகும்; எனவே இறால் பண்ணையை எதிர்ப்பதுதான் சரி.

**பரமசிவம், தையல் கலைஞர், திருமுல்லைவாசல்**

இராதாநல்லூர் சாலையோரம் (எஸ் அண்டு எஸ் இறால் பண்ணை உள்ள பகுதி) முன்புபோல் இப்பொழுது குடிநீர் கிடைப்பதில்லை; உப்பாகவும் மாறியுள்ளது. சாலையெல்லாம் சொந்த உபயோகத்திற்காகத்தான் கம்பெனி போட்டுள்ளதே தவிர மக்களுக்கீாகப் போடவில்லை; பண்ணையை எதிர்க்கவும் இல்லை; ஆதரிக்கவும் இல்லை.

**ஏ.வி. அப்துல் ஜபார், வியாபாரி, காங்கிரசு பிரமுகர், திருமுல்லைவாசல்**

முன்ன சீர்காழி தாலுகா உருப்படாத பகுதி, இப்ப இறால் பண்ணைகள் வந்தபின் அப்படியில்ல; எஸ் அண்டு எஸ் -ல் 1000 பேர் 4 வருடமாக வேலை பார்க்கிறார்கள். டயர் வண்டிக்காரர்கள் கூட ஒரு நாளைக்கு 200 ரூபாய் சம்பாதிக்கிறார்கள். இதனால் மக்கள் கையில் பணம் புழங்குவதால் வியாபாரம் அதிகரித்துள்ளது. கம்பெனியில் வேலை செய்பவர்களுக்கு பிரசவத்திற்கு 200 ரூபாய், திருமணத்திற்கு 1000 ரூபாய், இலவச கண்சிகிச்சை முகாம், போன்றெல்லாம் உதவி செய்கிறார்கள். முகத்துவாரத்தில சேரும் மண்ணை கம்பெனியே அப்புறப் படுத்துவதாலும், ஆற்றில் இலவச படகு



சவாரி விட்டுள்ளதாலும் மீனவர்களுக்கு லாபம்தான். இறால் பண்ணையை அழிக்க பொதுமக்களே விடமாட்டார்கள்.

**சுப்பிரமணி, நடுத்தர விவசாயி, மேலையூர்**

எங்களது 37 ஏக்கர் நிலத்தில் 20 ஏக்கர் வானகிரியில் உள்ளது; அதில் இறால் குட்டை போடப் போகிறோம். விவசாயம் பண்ண தண்ணீரே இல்லை; மழையும், ஆத்துல தண்ணியும் ஒன்னா வருது; அப்பவும் விவசாயம் பண்ண முடியல; முறையான பாசன வசதியும் உள் வயல்களுக்குக் கிடையாது. அரசாங்கத்திடம் முறையிட்டு போராடியெல்லாம் பார்த்து ஓய்ஞ்சாச்சு. விவசாயத்தால் லட்ச ரூபாய் கடன்ல இருக்கேன். என் வயலை சுற்றி இறால் குட்டை போட்டுட்டாங்க. அதனால் நானும் போட்டுத்தான் கடனை அடைக்கணும். அரசு இறாலுக்கு மானியம் தருது; எல்.டி. வங்கி கடன் தருது.

### கூலி விவசாயிகள் / மீனவர்கள்

**மணியம்மாள், ரவி மற்றும் பலர், கூலி விவசாயிகள், ராதா நல்லூர்**

இறால் பண்ணையால பாதிப்பு இருக்குதாங்க; ஆனா அது எங்களுக்கு இப்ப பெரிசா தெரியலை. எங்க ஊர் ஆம்பிளங்க இப்பதான் வீட்டோட தங்கி வேலை பார்க்கிறாங்க. கம்பெனிகாரங்க கோடிக்கணக்கில லாபம் சம்பாரிச்சுட்டு போயிடுவாங்கன்னு தெரியுதுங்க. விவசாயம் நல்லா இருந்தா பண்ணை வைக்க விட்டிருப்போமாங்க? கம்பெனி இலவச திருமணம் - பிரசவம் செய்வதாகக் கூறுவது பொய்; சிலருக்கு முன்பணமாகக் கொடுத்து சம்பளத்தில பிடிச்சுக்குவாங்க. பண்ணை அழிப்பு போராட்டத்தை எதிர்க்கவும், ஆதரிக்கவும் மாட்டோம்.

**அறிவழகன், வீரன் தமிழ்தாசன், வரதராசன் - தாழ்த்தப்பட்டோர், 41, ராதா நல்லூர்**

120 ஏக்கர் விலை நிலத்தில் சாகுபடி

---

சாய மக்கள் பாதுகாத்து வருகிறார்கள். அவர்களிடம் பீதியைக் கிளப்பிக் கலைத்து விடும் வேலையையும் நேரடியாகவே போலீசுக்கு ஆள்காட்டும் வேலையையும் செய்து வருகிறார்கள். போராட்டக்காரர்கள் தங்கியுள்ள வீடுகளிலோ, அருகாமையிலோ செங்கொடியைக் கட்டி போலீசுக்கு அடையாளம் காட்டுகிறார்கள். இதற்காக வெளியூரிலிருந்தும் ஆட்கள் இறக்குமதி செய்யப்பட்டனர். வி.எம். குழுவினர் திருத்தல்வாதிகள் மட்டுமல்ல, தன்னார்வ குழுக்களுடன் உறவு கொண்டுள்ள, தன்னார்வக் குழுக்களாலேயே ஊட்டி வளர்க்கப்படும் அபாயகரமான சதிகாரர்கள் கூட்டம் என்பதைத் தெளிவாக நிரூபித்துள்ளனர்.

## ஓட்டுக்கட்சிகளின் சந்தர்ப்பவாதம் அதிகாரிகளின் அலட்சியம்

இப்பகுதியிலுள்ள ஓட்டுக் கட்சிகளில் சி.பி.ஐ., சி.பி.எம்., அ.தி.மு.க., காங்கிரசு, தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க. அனைத்துக் கட்சியின் உள்ளூர் தலைவர்கள் பலர் இறால் பண்ணையை எதிர்த்துப் பேசி வருகிறார்கள்; எதிர்ப்புப் போராட்டத்திற்கு நேரடியாகவும், தார்மீக ரீதியாகவும் ஆதரவு தெரிவிக்கிறார்கள்.

அதே சமயம் சிலர் பண்ணை முதலாளிகள் பக்கம் நிற்பதையும் பார்க்க முடிகிறது. திருமுல்லைவாசலில் தி.மு.க.வைச் சேர்ந்த சி. கலிய பெருமாள், அ.தி.மு.க.வைச் சேர்ந்த எஸ்.ஏ. வத்தீப் போன்றவர்கள் எஸ். அண்டு எஸ் பண்ணைக்கு நிலம் வாங்குவதில், வேலையாள் சேர்ப்பதில் தரகு வேலை செய்து கொண்டுள்ளனர். தென்னாம்பட்டினத்தில் பா.ம.க. ஒன்றிய அவைத் தலைவர் குணசேகர் பண்ணை முதலாளிகளுக்கு ஆதரவாக செழிப்புப் போராட்ட பிரச்சாரத்தில் முக்கிய நபராக உள்ளார். சீர்காழியில் ஆர்.எஸ்.பி. எண்டர்பிரைசஸ் என்ற பெயரில் பம்பு செட், மோட்டார் வியாபாரக் கடை வைத்துள்ள சி.பி.எம். நகரச் செயலாளர் பன்னீர் செல்வம் ''கட்சி ரீதியாக எதிர்க்கிறேன்; தொழில் ரீதியாகப் பார்த்தால் பண்ணைகள் வந்ததால் மோட்டார் வியாபாரம் பெருகி பலன் கிடைத்திருக்கிறது'' என்று சந்தர்ப்பவாதமாக பேசுகிறார்.

அரசு அதிகாரிகள் தரப்பிலோ பண்ணை முதலாளிகளுக்குச் சாதகமான மக்கள் விரோத நடமுறைகளே பார்க்க முடிகிறது. அரசு ஆவண ரகசியங்களை கிராம நில வரைபடத்தை முதலாளிகளுக்குக் கொடுத்து நிலங்களை ஆக்கிரமிக்க உதவியது, பொது வழி - கால்வாய்களை ஆக்கிரமித்ததைக் கண்டு கொள்ளாமல் விட்டது மட்டுமல்ல போராடும் மக்களை அடியாட்கள் வைத்துத் தாக்கும் முதலாளிகள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை அதிகார வர்க்கக் கும்பல். பெருந்தோட்ட தாழ்த்தப்பட்ட கூலி விவசாயிகளை முதலாளியின் அடியாட்கள் ஊர்புகுந்து தாக்கிய சம்பவத்திற்குப்பின் வந்த உதவி மாவட்ட ஆட்சியாளர் பாதிக்கப்பட்ட பகுதிகளை விடுத்து முதலாளிகளை மட்டும் சந்தித்துச் சென்றுள்ளார். பாதிக்கப்பட்ட மக்கள் முறையிட அலுவலகம் சென்றாலும் சந்திக்க மறுக்கிறார்.

தென்னாம்பட்டினத்தில் பெருந்தோட்டத்தில் போராடுகிற முன்னணியாளர்களையெல்லாம் கைது செய்து 15 நாள் காவலில் வைத்துள்ளார்கள். பெருந்தோட்டம், தென்னாம்பட்டினம் மக்களால் தடுக்கப்பட்ட பண்ணைகளை போலீசு பாதுகாப்புக் கொடுத்துக் கட்டுமானப்பணி நடத்த அனுமதித்துள்



படிப்பகம்

யில்லை, வரி குத்தகை என விவசாயிகளின் வறுமை கூடியது. அதிகாரிகள், அமைச்சர்கள் பார்த்தும் விடிவு ஏற்படலை. 75 சதவிகித ஆண்கள் வேலை



தேடி கர்நாடகம், ஆந்திரா என சென்றார்கள். 91-ல் இறால் பண்ணை வந்த பின் தான் வறுமை நீங்கியது. கம்பெனி ஊருக்கு பல உதவிகள் செய்திட்டிருக்கு. எங்களுக்கு இப்ப இறால் பண்ணைதான் வேண்டும். இப்ப பண்ணையை அழிக்கிறேன்னு வர்றவங்ககிட்ட முதல எங்களுக்கு மாற்று வழிய சொல்லிட்டு போங்கன்னு தடுத்துக் கேட்போம்.

**தருமன், விசுவநாதன், ராயர், நீலாவதி மற்றும் பலர், தாழ்த்தப்பட்ட கூலி விவசாயிகள், பெருந்தோட்டம்.**

தரிசு நிலத்தை பாஸ்க் பண்ணைக்கு விற்றோம்ங்கிறது மிராசுதார்கள் சொல்ற பொய்ங்க. 35 வீதம் கண்டு முதல் கண்ட நிலங்க. அறுவடை பண்ணிக்கிட்டிருக்கும் போதே நிலத்தை விற்றாங்க. விவசாய அறுவடை பண்ணி கூலி கிடைச்சா 3 மாதம் வச்சு சாப்பிடுவோம். பண்ணையில இறால் அறுவடையால் கிடைக்கும் கூலி 1 வாரத்துக்குக் கூட பத்தாதுங்க. பண்ணை வைத்ததால ஊர்ல எல்லாருக்கும் வேலை போய்ச்சுங்க. பக்கத்துல ஊர்ல போய் வேலை செய்றோம். இதனால அந்த ஊரு கூலிக்காரங்களுக்கும் எங்களுக்கு பிரச்சனை வருதுங்க. பண்ணை வந்தபின்பு, எங்க ஆடு மாட மேய்க்கவும் முடியல, காலைக்கடன் போகவும் முடியல. பண்ணை எம்.டி. கர்னல் வடிவேலு அடியாட்களோட வந்து அருவாளைக் காட்டி மிரட்டுறான். கலெக்டரை பார்க்கப் போனா லீவு போட்டுட்டு போயிடுறார். போலீசு நாங்க கொடுத்த புகாரை எடுக்கல; பண்ணை அடியாட்கள் கொடுத்த புகாரை வைத்து எங்கள கைது செய்யறாங்க. இங்க வாழவே முடியாம கேரளாவுக்கு



பிழைப்பு தேடி போறாங்க சிலரு. இனி நாங்க அரசாங்கம், இந்த லாப்டி எதையும் நம்பப் போறதில்ல, அவன் அருவா எடுத்தா நாங்களும் எடுக்கப் போறோம்.



**கருத்தக்கண்ணு மற்றும் சிலர், காரியதரிசி, மீனவர், புதுக்குப்பம்.**

சிறீராமும், பீரானக்கும் ஊரைச் சுற்றிள்ள விளை நிலங்களைத் தான் வளைச்சுப் போட்டுள்ளாங்க. சிறீராம் 2 வாய்க்காலை மறிச்சுள்ளது. ஏன் பூம்புகார்ல பண்ணைக்கு விற்ற நிலம் சும்மா கிடப்பதை பார்க்க சகிக்காமல் ஏழுமலைங்கிறவர் பயிர் போட்டிருக்கிறதை இப்ப பார்க்கலாம். இப்ப ஊர் குடி தண்ணீர் உப்பு அதிகமாயிடுச்சுங்க. பனைமரம் பட்டு போயிருக்கிறதப் பாருங்க; பண்ண கழிவு நீர், வடிகால் வாய்க்கால் வழியாக ஊருக்குள்ள வருதுங்க. கடல் தண்ணீர புழங்கினாலே தோல் அரிப்பெடுக்குதுங்க

ளது. அரசு. முதலாளிகள் ஏற்பாடு செய்துள்ள பண்ணை அமைக்கும் விழா மேடையில் உதவி மாவட்ட ஆட்சியாளர் கலந்து கொள்வதும் ஆதரித்துப் பேசுவதும் உள்ளது. போலீசோ, சாதி வெறியில் தாழ்த்தப்பட்டவர்கள் மீது இத்தருணத்தை பயன்படுத்திக் கொடூரமாக தாக்குதல் தொடுக்கிறது.

போராடும் தென்னாம்பட்டினம் கிராம மக்கள், குறிப்பாக பெண்கள், குழந்தைகள் பயபீதியில் எந்த அமைப்பும் கட்சியும் உதவாத நிராதரவான நிலையில் நடுங்கிக் கொண்டே உள்ளனர். பெருந்தோட்டம் கிராமத்திலோ தாழ்த்தப்பட்டவர்கள் அல்லாத விவசாயிகள், மிராசுதார்கள் தனி ஒரு சாதிசங்கம் (கிராம நல சங்கம்) புதிதாக உருவாக்கி சாதியக் கலவரத்திற்கும் வித்திட்டுள்ளனர். அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் மேல்சாதியினரிடையே உள்ள ஜனநாயக சக்திகளை வென்றெடுக்காத நிலை உள்ளதால் சாதிவெறியர்கள் பலம்பெறவும் போலீசு, பண்ணை முதலாளிகள் உதவியுடன் தாக்குதல் தொடுக்கவும் முற்படுகிற அவல நிலை நிலவுகிறது.

இந்நிலையில் மே 1-ந் தேதி சீர்காழியில் இறால் பண்ணை அழிப்புப் போராட்டம் என அறிவித்துள்ள விவசாயிகள் விடுதலை முன்னணி, போராடும் மக்களுக்கு நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகிறது. இவர்கள் தமிழகம் முழுவதும் செய்துள்ள பிரச்சாரத்தின் பயனாக கிடைத்த தார்மீக ஆதரவு பலம் போராடும் மக்களுக்கு ஊக்கமளித்திருக்கிறது. ஓட்டு அரசியல் கட்சிகள், முதலாளிகள், அவர்களின் கைக்கூலிகள், ஆட்சியாளர்களுக்குப் பீதியை உருவாக்கியுள்ளது. எல்லோரும் மே -1 போராட்டம் எப்படி இருக்கும் என்ற எதிர்பார்ப்பில் இருந்தனர்.

## செயற்கை இறால் வளர்ப்பு ஒரு புற்று நோய்

இறால் மீனில் (Shrimp) இருவகை உண்டு. ஒன்று ''டைகர்'' என்கிற கறுப்பு இறால்; மற்றொன்று ''இன்டிகாஸ்'' என்கிற வெள்ளை இறால். தமிழகத்திலுள்ள பண்ணைகளில் கறுப்பு இறால்களே பெரிதும் வளர்க்கப்படுகின்றன. ஏனெனில் இவ்வகைதான் அதிக குஞ்சு பொரிக்கக் கூடியதும் அதிக இழப்பு இல்லாமல் தற்காப்புடன் வளரக் கூடியதும் அதிக விலை போகக் கூடியதுமாகும்.

இறால் மீன்கள் கடலில் சேர்ந்தாலும் முட்டையிட்டு குஞ்சுகள் வளர்வது முகத்துவாரப் பகுதியில், சதுப்பு நிலக் காடுகளில் உள்ள ஆறுகளிலும் நீர்நிலைகளிலும்தான். நன்கு வளர்ந்த பின் மீண்டும் கடலுக்குள் இடம் பெயர்கிறது. கருவுற்றிருக்கும் தாய் இறால்களை முகத்துவாரப் பகுதி ஆறுகளில் மீனவர்கள் பிடித்துவிட்டால் அவற்றை பாதுகாத்துக் கொண்டு போய் கடலில் விடுவதை ஒரு புனித - மரபு செயலாக கடைப்பிடிப்பது சில பகுதிகளில் இன்னமும் நிகழ்கிறது. ஆனால் இந்தத் தாய் இறால்களை எங்கும் விட்டுவைக்காமல் இறால் பண்ணைகள் வேட்டையாடுகின்றன. (முகத்துவாரத்தில் உள்ள ஆறுகளில் இறால் குஞ்சுகளையும் பிடித்து விடுகிறார்கள்.) கடல் மற்றும் ஆறுகளில் இருந்து பிடித்துச் செல்லும் தாய் இறால்களை கண்களை அகற்றிவிட்டு (இறால் மீனுக்கு அதன் உயிரணு கண்களில் ஒன்று சேர்ந்து தங்கும். கண்களை அகற்றிவிட்டால் அது உடல் முழுக்கப்பரவி விரைவில் குஞ்சு

www.padippakam.com

இதுக்கெல்லாம் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கனும்னுதான் மனு போட்டுள்ளோம். மே 1 போராட்டத்தில் கலந்து கொள்வோம்.

**தேவராசன், பஞ்சாயத்தார் மற்றும் இளைஞர்கள் - முன்னாள் கூலி விவசாயிகள் இன்னாள் பண்ணை வேலையாட்கள், நெய்தல் வாசல்.**

எங்களுக்கு இறால் பண்ணைதான் வேண்டும். சிறீராம் 100 பேருக்கு வேலை கொடுத்திருக்கிறது. உப்பு நிலம், கடலுக்குள் போன நிலத்துக்கு எல்லாம் கம்பெனி காசு கொடுத்ததுங்க. (சிலர்) எங்களுக்கு வேலை வேணும். அதை இறால் பண்ணை கொடுத்தாலும் சரி, விவசாயம் கொடுத்தாலும் சரி.

**பன்னீர் செல்வம் மற்றும் பலர் மீனவர்கள், திருமுல்லைவாசல்**

எஸ் அண்டு எஸ் பண்ணை கழிவு நீரை உப்பனாத்துல விடுறதுனால மீன்கள் செத்து போகுது. எங்களது வலை நீரோட்டத்துக்கு தகுந்த மாதிரி போகும்; இதனால் பண்ணையின் நீர் எடுக்கும் குழாயில் சிக்கி 5000, 6000 ரூபாய் வலை பாழாய் போயிடுதுங்க. கரையோரம் வலையும் காயப் போட முடியல; குப்பத்தை விட்டு குப்பத்துக்கு நடந்து போகவும் முடியல; பண்ணையில வேலை செய்யும் வெளியூர் ஆளுங்க எங்க பொம்பளங்கள வம்பிழுத்து சண்டையும் நடந்துச்சுங்க. பண்ணை வந்த பின் மின்சார பிரச்னையால எங்க குப்பத்தில சாயந்திரம் விளக்கு எரியாது. புயல் வந்தபோது மணிசங்கர அய்யரு எங்களைப் பார்க்க வரலை; பண்ணைக்குத்தான் போனாரு. தேர்தல் வந்தா ஓட்டுப் போடமாட்டோம்.



**வீராச்சாமியின் மனைவி மற்றும் சிலர், தாழ்த்தப்பட்ட கூலி விவசாயிகள், தென்னாம்பட்டினம்.**

போன வருசம் விளைஞ்ச நிலத்துல தான் சொர்ணம் மச்சுவா கம்பெனி இறால் குட்டை போட்டுள்ளது. முன்ன குடிசை எரிஞ்சப்ப பாதிக்கப்பட்ட எங்களத்தாங்க கைது செய்தாங்க. அந்த பட்டியலை எடுத்து வந்து இப்ப பேராடக்கூடாதுன்னு (லாப்டி அமைப்பு சார்பாக பெருந்தோட்டத்தில் உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது) முன்னெச்சரிக்கையாக கைது செய்து திருச்சி சிறையில் 15 நாள் போட்டுட்டாங்க. இப்ப ஊர்ல ஆம்பிளைகளே இல்லைங்க. பண்ணைக்கு வேலைக்குப் போன (சிலர் பண்ணையிலும் எப்பொழுதாவது வேலை செய்வதுண்டு) எங்க ஆட்களை பண்ணைக்கு ஆதரவா இருக்கிறவங்க வம்பிழுத்துள்ளாங்க. என்ன நடக்குமோன்னு பயந்துக்கிட்டு இருக்கோமுங்க. நிறை மாத கர்ப்பிணி லோகம்மா தன் புருஷனை விடச் சொல்லி கெஞ்சுனாப்ப கூட போலீசு இரக்கங்காட்டாம அடிச்சு இழுத்து போயிடுச்சு. ராத்திரி வந்துதாங்க போலீசு தாக்குது.

## இளைஞர்கள் / மாணவர்கள்

**ரங்கநாதன், ரமேஷ், சுரேஷ் - பூம்புகார் கல்லூரி மாணவர்கள், தென்னாம்பட்டினம்.**

(ஊர் கைது சம்பவம் பற்றி) போலீசு எஸ்.பி. சுப்பிரமணியம் காசு வாங்கிகிட்டு பிரச்னை பன்றாரு. கைதானவர்களை விடுவிக்க எந்தக்கட்சியும், அமைப்பும் வந்து பார்க்கல; ஊருக்குள்ள உதவிக்கும் வரல. நாங்கதான் கிராமம் கிராமமாக வசூல் பண்ணி பிணையில எடுக்கணும்.

எங்க கல்லூரியில மாணவர்கள் இறால் பண்ணை பிரச்சினை தொடர்பாக எல்லாம் பேசுவதே இல்லை; நாங்களா சொன்னா கேட்டுட்டு உட்டுடுவாங்க.

**இளைஞர்கள், தருமகுளம்.**

சிறீராம் கம்பெனி பஞ்சாயத்து மூலமா நிலம் வாங்கல; தரகர் மூலமாத்தான் வாங்கினாங்க. கிராமத்துக்கு எந்த வசதியும் பெரிசா செய்து தரலைங்க; அதுக்குப் பதிலா பஞ்சாயத்துத் தலைவரை 'கவனி'க்கிறாங்க; அவர் பேச்சை

பொறிக்கத் தயாராகிவிடும்) குஞ்சு பொறிப்பகத் தொட்டிகளில் விடுகிறார்கள். ஒரு ஜோடி இறால்களிலிருந்து லட்சத்துக்கும் மேற்பட்ட குஞ்சுகள் பொறித்து அவற்றை பண்ணைகளிலுள்ள தொட்டிகளில் - குட்டைகளில் விட்டு வளர்க்கிறார்கள். பெரிய பண்ணைகள் சில, குஞ்சு பொறிப்பகங்களைச் சொந்தமாக வைத்துள்ளன.

நாட்டுக் கோழி, எந்திரக் கோழி என்ற இருவகை பற்றி அறிவோம். நாட்டுக் கோழி முட்டையிடும், அம்முட்டை குஞ்சு பொறிக்கும், அக்குஞ்சு வளர்ந்து முட்டையிடும் - இது சுழற்சி முறையிலான இனப் பெருக்கம். முட்டையையும் கோழியையும் உணவிற்காக அழித்தாலும் அச்சுழற்சி முறை இனப்பெருக்கத்தை தனிக் கவனம் கொடுத்து அனுமதிப்பதைப் பல வீடுகளில் பார்க்கலாம். ஆனால் வியாபாரம், லாபம் நோக்கில் அச்சுழற்சி முறையைத் தடுத்து முட்டை கோழி, கறிகோழி என எந்திரத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது; செயற்கை பராமரிப்புகளிலேயே வளர்க்கப்படுகிறது. இதன் தரம், சத்து பற்றி சொல்லத் தேவையில்லை. எண்ணிக்கை தேவையை காரணம் வைத்து இயற்கையான கோழி இனமே ஒதுக்கப்பட்டு அழிக்கப்படுகிறது என்பதுதான் கவனிக்க வேண்டிய ஒன்று.

இதே நிகழ்வுதான் இறால் வளர்ப்பிலும் நடக்கிறது. இறாலின் தலைப்பகுதியை குறைத்து (தேவையற்றது; விற்பனைக்குமுன் அகற்றி விடுவார்கள்), உடல் - வால் பகுதியைப் பெருக்க வைக்கும் (இதில்தான் 60 - 70% புரதசத்து உள்ளது) செயற்கை முறையையும் குஞ்சு பொறிக்கும் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்காக சில செயற்கை முறைகளையும் புகுத்தியே உற்பத்தி செய்கிறார்கள். இம்மீன்கள் மீண்டும் இனப்பெருக்கத்திற்குப் பயன்படாத ஒன்றாக இருப்பதால் தாய் இறால்களுக்காக இவர்கள் இயற்கை வளத்தில்தான் வகை வைக்கிறார்கள். இதனால் இறால் வகையின் இனப்பெருக்கச் சுழற்சியே தடுக்கப்பட்டு அழிந்து போவதுதான் நடக்கிறது. சீர்காழி பகுதி மீனவர்கள் இறால் மீன் வலையில் படுவதே இல்லை எனக் கூறுவதைக் கேட்கலாம்.

இறால் பண்ணைகளில் ஒரு ஹெக்டேருக்கு ஒரு குட்டை அமைத்து அதில் 10,000 முதல் 30,000 குஞ்சுகளை விட்டு வளர்க்கிறார்கள். குஞ்சுகள் விடும் எண்ணிக்கையைப் பொருத்து "செமி இன்டென்சிவ்", "இன்டென்சிவ்" முறை என்பார்கள். சாதாரணமாக விவசாய மண்ணில் உப்புத் தன்மை 6.5 முதல் 7.5 பி.ஹெச் (PH - உப்புத் தன்மைக்கான அளவீடு) இருக்கும். இறால் வளர்ப்புக்கோ 7.5 முதல் 8.5 பி.ஹெச் தேவை. இதற்காக பல உரங்களைப் போட்டு ஈடு செய்கிறார்கள் பண்ணை முதலாளிகள். ஒவ்வொரு இறால் அறுவடைக்குப் பின்னும் மண்ணை அந்த பதத்திற்கு கொண்டு வருவதற்காக மேலும் மேலும் அதிக உரமிடுகிறார்கள். இதனால் அம்மண்ணின் உப்புத்தன்மை அதிகமாகிக் கொண்டே சென்று இறால் வளர்ப்புக்குத் தேவையான அளவையும் மிஞ்சி விடும் பொழுது இறாலும் அங்கு வளர முடியாத நிலை ஏற்படுகிறது. அப்பொழுது அந்த நிலத்தை விட்டு பக்கத்து விளை நிலங்களுக்கு நகர வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது.

தற்போது சீர்காழியில் எஸ். அண்டு எஸ். சிறீராம் ஆகிய கம்பெனிகள் பண்ணையை விரிவாக்கும் திட்டத்தில் விளை நிலங்களை குறிவைப்பது இந்நோக்கில்தான். இப்படி கடலிலிருந்து ஊருக்குள் எவ்வளவு தொலைவு வரமுடியுமோ வந்து நிலங்கள் பயன்படாத நிலைவந்ததும் (இதற்கு 3 முதல் 10



படிப்பகம்

www.padippakam.com

கிராம மக்கள் கேட்பாங்க. இப்படிதான் பண்ணைக்கு ஆதரவு இருக்குங்க. நிலத்தை வாங்கும்போது எங்களுக்கே தெரியாத சர்வே என் எல்லாம் கொண்டு வந்தாங்க; இடைத்தரகராக இருந்தவங்க தாங்க காசு பார்த்தாங்க.



செல்வன், பாண்டித்துரை மற்றும் பலர் - பெருந்தோட்டம், அகரப் பெருந் தோட்ட இளைஞர்கள்.

ஊர்ல கிராம நல சங்கமுன்னு மேல் சாதிகாரங்க தனியாக தொடங்கி பிளவை அதிகரித்திருக்காங்க. அது தொடங்கும் போதே சி.பி.ஐ. கட்சியைச் சேர்ந்த ஊர்க் காரர் ஜி.ஆர். நாதன் இன்னும் சிலர் எதிர்ப்பு தெரிவிச்சாங்க; ஆனா கேட்கல. இதனால சிதறியிருக்கிற தாழ்த்தப்பட்ட வர்களை ஒன்று திரள மறைமுகமாகத் தூண்டுகிறார்கள். தாழ்த்தப்பட்டோர் ஒன்று திரண்டால் மேல்சாதிக்காரங்க தாங்க மாட்டாங்க. மேல்சாதிக்காரங் கள்ல ஜனநாயகப் பூர்வமாக சிந்திக்கிற இளைஞர்கள் இருக்காங்க, அவங்கள சந் தித்து நாங்க இதுவிசயமா பேசலை. பண் ணைக்கு எதிரான போராட்டத்திற்கு ஆத ரவு தாங்க. (சிலர்) ஆதரிக்கவும் இல்ல, எதிர்க்கவும் இல்ல.

## அரசியல் கட்சிகள் / அமைப்புகள்

**பவானி, லாப்டி ஊழியர், பெருந்தோட்டம்**

பருத்தி, உளுந்து பயிரிடும் 1060 வேலி நிலத்தை 5 கம்பெனி சேர்ந்து இறால் பண்ணைக்கு இப்ப வாங்கியி ருக்கு (என்று கூட்டிச்சென்று காண்பித் தார்). எந்த நிலத்தை பண்ணைக்காரங்க விளையலன்னு சொல்றாங்களோ... அதுல ஜெயராமன் என்பவரு விளை விச்சு காண்பிச்சுருக்காரு. காவல்துறை, கலெக்டரு எல்லாம் மக்கள் பக்கம் இல் லீங்க. இருந்திருந்தால் பாஸ்க் கம்பெனி அடியாள் வைத்து பயிற்சி கொடுத்து மிரட்டி வேலிபோட முடியுங்களா? இறால் அழிப்புப் போராட்டத்தில கலந் துக்குறது பத்தி தலைமைல கேட்டுதாங்க சொல்லணும். நாங்க காந்தி வழிங்க. மக்க ளையும் அப்படிதாங்க நடக்க சொல் வோம்; வன்முறை கூடாதுங்க.

**தங்க ராசேந்திரன், ம.தி.மு.க., சீர்காழி நகரத்தலைவர்**

மாநில ஆளுங்கட்சியும், மணிசங் கர் அய்யர் போன்றவர்களுந்தான் இறால் பண்ணைக்கு ஆதரவு. மற்ற கட்சி எதிர்ப் புதாங்க. எங்க கட்சி தலைமை எதுவும் இது தொடர்பாக அறிக்கை விடல. அதைப்பற்றி கட்சி கூட்டத்தில கேட் பேன். வாதாடுவேன். கட்சி இறால் பண் ணைக்குச் சாதகமாக முடிவெடுத்தால் கூட நான் பண்ணையை எதிர்ப்பேங்க.



**விசுவலிங்கம், நகரத் தலைவர், காங்கிரசு, சீர்காழி**

பண்ணைக்கு எதிராகப் போராடுப வர்கள் கிராம மக்கள் இல்லீங்க, வெளி யூர்ல இருந்து வந்துள்ள சில இயக்கத்து ஆளுங்க. இவர்களில் ஒரு பிரிவினர் தாமும் பண்ணை அமைப்பதில் விருப் பத்தோடு - உள்நோக்கோடுதான் போரா டுறாங்க. செறிப்புப் போராட்டம் நடத்து றவங்க, பண்ணை முதலாளிங்க. அதுக் கும் எங்க கட்சிக்கும் தொடர்பு கிடை யாது. மணிசங்கர் அய்யரு இறால் பண் ணைக்கு ஆதரவுதாங்க; மற்றபடி அவர் ஊருக்கு நல்லதுதான் செய்து வருகிறார். இறால் பண்ணையால விவசாயத்துக்கு ஆபத்துன்னு ஊர் முழுவதும் எதிர்த்தால் நானும் எதிர்க்கத்தானே செய்வேன். ஆனா அப்படி நிலைமை இல்ல. மே1, போராட்டத்திற்கு வெளி மாவட்டங்களி லிருந்து நிறைய ஆட்கள் வரலாம்; அவர்

வருடகாலம் எடுக்கும்) வேறு மாநிலத்திற்கோ, நாட்டிற்கோ கூடாரத்தை மாற்றுவார்கள். தைவான் (1981-89 வருடத்திற் குமேல் இறால் இங்கு வளர்க்க முடியவில்லை), தாய்லாந்து, ஈக்வடார் அனுபவங்கள் இதைத்தான் பறைசாற்றுகின்றன. ஏன் தற்போதே வங்காளதேசம், ஆந்திரா - நெல்லூர் பகுதிகள் உற்பத்தி குறைவு நிலையை எட்டிவிட்டன.

ஆனால் சீர்காழி பகுதியில் இறால் பண்ணையில் வேலை செய்பவர்கள் நிரந்தரமானது என அப்பாவித்தனமாக நம்பிக் கொண்டுள்ளனர். இதைவிட முக்கியமானது, இறாலும் வளர்க்கப் பயன்படாமல் போன அந்நிலத்தில் புல்பூண்டு முளைப்பதற்கு கூட பல பத்தாண்டுகள் எடுக்கலாம் என்பது தான். இறால் பண்ணை முதலாளிகளோ, விவசாயத்திற்கு போடும் யூரியா உரத்தைதான், வெறும் சுண்ணாம்பைதான் மண்ணை பதப்படுத்துவதற்காகப் போடுகிறோம்; இவை எப் படி நிலத்தைப் பாழ்படுத்தும் என்று கேட்பதோடு தமக்கு ஆதரவான மக்களையும் கேட்க வைத்துவிட்டார்கள். விவசா யத்திலும் இயற்கையான உரமிட்டு சாகுபடி செய்வதன் பய னும், செயற்கையான உரங்களை இட்டு பயிர் விளைவிப்ப தன் பாதிப்புகளையும் நாம் சொல்லத் தேவையில்லை; விவசா யிகளுக்கே நேரிடையாகத் தெரியும்.

இறால் குஞ்சுகள் ஒரு குறிப்பிட்ட உப்புத்தன்மை கொண்ட நீரில் (15 to 20 PPM) தான் வளரும். 27 முதல் 30 செண்டிகிரேடு வெப்பத்தில்தான் வளரும். கடல் நீரோ உப்புத் தன்மையும், வெப்பமும் அதிகம் கொண்டது. (இதனால் தான் இறால் குஞ்சுகள் வளருவதற்கு முகத்துவார பகுதி ஆறுக ளைத் தேர்ந்தெடுக்கின்றன). இதனால் கடல் உப்பு நீரோடு நிலத்துக்குள்ளிருந்து நன்னீரை எடுத்து கலந்துதான் குட்டைக ளில் நீர் விடுகிறார்கள். ராட்சச எந்திரக் குழாய்கள் மூலம் நிலத்தடி நீர் ஏராளமாக உறிஞ்சப்படும் பொழுது நிலத்தடி நீர்மட்டம் மற்றும் அழுத்தம் குறைவதும், அதற்கு ஈடாக கடல்நீர் உள்ளே வருவதும் நிகழ்கிறது. இதனால் பல கி.மீ. தூரம் வரை நிலத்தடி நீர் உப்பாக மாறிவிடுகிறது. சீர்காழியில் உப்பனாற்று தண்ணீர் மாசுபட்டு விட்டதால் நேரிடையாகக் கடலிலிருந்தே உப்பு நீரை எடுக்க எஸ் அண்டு எஸ், சிறீராம் கம்பெனிகள் குழாய் போடுகின்றன. எனவே இந்நீரோடு நன் னீரைக் கலப்பதற்காக அவர்கள் நிலத்தடி நீரை மேலும் பெரிய அளவிற்கு எடுக்கப் போகிறார்கள்.

இறால் குட்டையிலிருக்கும் நீரை வாரத்திற்கு ஒருமுறை சிறுபண்ணைகள் மாற்றுகின்றன. எஸ் அண்டு எஸ், சிறீராம் கம்பெனிகள் தினமும் மாற்றுகிறார்கள். லாபவெறியில் ஒரு குட்டைக்குள் அளவுக்கு மிஞ்சி குஞ்சுகளை விடுவதாலேயே இப்படி அடிக்கடி நீரை மாற்ற வேண்டியது நேரிடுகிறது. வெளியேற்றப்படும் இக்கழிவு நீரில் நச்சு ரசாயனங்களும், இறந்த இறால் குஞ்சுகளும் பிற மீன்களும் நுண்ணுயிரிகளும் இருக்கும்; கருநிற கசடாக இருக்கும் இது உப்பனாற்றிலேயே விடப்படுவதால் கடலோரப் பகுதியும் மாசுபடுகிறது. கடலோ ரப் பகுதியும் உப்பனாறும் மாசுபடுகிறதென்றால் கருநிறம் கூடிப் போவது நிகழ்கிறது. இது சூரிய ஒளி நீருக்குள் புகுவ தைத் தடுக்கிறது. இதனால் சூரிய ஒளியைச் சார்ந்து வாழும் கடல்வாழ் பசுமைநிற நுண்ணுயிரிகள் (PLANKTONS) அழிந்து இவற்றை உண்ணுகிற மீன்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. மேலும் நச்சு ரசாயனங்கள், செத்த மீன்கள் - உயிரினங்களைக் கடல் மீன்கள் உட்கொள்வதால் அவை குறிப்பிட்ட அளவு நச்சுத்தன்மை பெற்று அவற்றை உண்ணுகிற மனிதர்களுக்கும்



படிப்பகம்

www.padippakam.com

களை இந்த அரசுதான் சமாளித்து மக்களுக்குப் பாதுகாப்பு தரவேண்டும்.

**ஆர். எஸ். பன்னீர்செல்வம், மற்றும் சிலர் இ.பொ.க.(மா), சீர்காழி நகரச் செயலர்**

இறால் பண்ணையை தடை செய்ங்கிறதுதான் எங்க கோரிக்கை; அழிப்பது அல்ல. நாகப்பட்டினத்திலும், மங்கை மடத்திலும் ஆர்ப்பாட்டமும் உண்ணாவிரதமும் இது தொடர்பாக நடத்தியுள்ளோம். அடுத்து போரா ரட்டத்தைப் பற்றி இனிமேல்தான் முடிவு செய்யப் போறோம்,



**ந. அன்பழகன், இறால் வளர்ப்பு தொழில்நுட்ப நிபுணர். விருத்தாசலம்**

பண்ணையில் ஏற்படும் நீர்க்கசிவு (Seepage) மிகப்பெரிய அபாயம். சிதம்பரம் அருகில் கனரகப்பட்டுங்கிற ஊர்ல வள்ளி விலாஸ் அக்வா ஃபார்ம்ல வேலை செய்தேன். பண்ணைக்குப் பக்கத்தில இருந்த வயல்கள அரிசி மஞ்சள் நிறமா மாறிடுச்சு. ஆந்திரா - நெல்லூர் இறால் தொழில் நசிவதால் தமிழ்நாட்டு பக்கம் வராங்க. குட்டையில தண்ணீர் விட்டபின் நாலுபேருக்குத்தான் வேலை; கரைகட்ட புல்டோசர் எல்லாம் பயன்படுத்தினால் ஆளுக்கே வேலையில்ல. பண்ணையால வேலைவாய்ப்பெல்லாம் கிடையாதுங்க.

**மருதையன், மாநிலச் செயலாளர், மக்கள் கலை இலக்கியக் கழகம்,**

இறால் பண்ணைகள் அமைவதை நாங்கள் உள்ளூர் பிரச்சினையாகக் கருதவில்லை. புதிய பொருளாதாரக் கொள்கை, நாடு மறுகாலனியாவதின் ஓர் அங்கமாகவே பார்க்கிறோம். அதனால்தான் தமிழகம் தழுவிய இயக்கம் எடுக்கிறோம். தமிழ்நாடு அரசு போட்டுள்ள மசோதா பண்ணை முதலாளிகளுக்கு முழுக்கச் சாதகமானது; எதிர்க்கிறோம். இம்மசோதாபடி 2 வருடங்கள் தொடர்ந்து விளையாத நிலத்தில் கூட இனி இறால் வளர்க்க முடியும். கண்காணிக்கும் மாவட்டக் கமிட்டிகளில் உள்ளூர். மக்களின் பிரதிநிதித்துவமே இல்லை; ''பஞ்சாயத்து ராஜ்'' சட்டத்தின் பரிதாபத்திற்கு இம்மசோதா நல்ல உதாரணம். இறால் பண்ணையை எதிர்த்து மக்கள் நீதிமன்றத்திற்குச் செல்ல முடியாதபடியும் இம்மசோதா தடுத்துள்ளது. மே 1, இறால் அழிப்புப் பேராட்டம் முடிவல்ல; தொடக்கம்தான்; அதற்குப் பின்னும் போராட்டம் தொடரும்.



**டாக்டர் வந்தனா சிவா, தில்லியைச் சேர்ந்த சுற்றுச்சூழல் நிபுணர், (பேட்டி சென்னையில்)**

செயற்கை இறால் பண்ணைகள் ஒரு புற்று நோய் மாதிரி. நிலம், நிலத்தடி நீர், கடலை மாசுப்படுத்துகின்றன. எனவே இந்த தீவிர (INTENSIVE) இறால் வளர்ப்பு முறை தடை செய்யப்படவேண்டும். இதற்கு மாற்றாக இயற்கையாக ஆற்றிலும், சதுப்பு நிலக்காடுகளின் பரந்த நிலப்பரப்பிலும் வளர்க்கும் முறைதான் சரி; இதனால் பாதிப்பு இல்லை; மே.வங்கத்தில் இப்படிபட்ட இயற்கை இறால் வளர்ப்பு முறையே உள்ளது. ஒரிசா, ஆந்திரா. தமிழ்நாட்டில் மட்டும்தான் தீவிர இறால் வளர்ப்பு செயற்கை முறை உள்ளது. தமிழ்நாட்டின் மசோதாவில் மக்களின் பங்கேற்பு இல்லாததால் பயன் ஏதும் இல்லை. இறால் வளர்ப்பு உலக வங்கியால் ஊக்குவிக்கப்படுகிறது. கடற்கரையோரம் சாலைகளை போட்டு வசதி செய்து தருமாறு அரசை நிர்பந்தித்து வருகிறது.

சங்கிலித் தொடர்போல பாதிப்பு உருவாகிறது. சிதம்பரம், சீர்காழி பகுதி மீனவர்கள் அண்மைக்காலமாக இரவில் தூங்க முடியாதபடி தோல் அரிப்பெடுப்பதாகவும், முன்பைவிட தற்போது தலைமுடி அதிகம் கொட்டுவதாகவும் கூறுகிறார்கள்.

''நாங்கள் இறால் வளர்ப்பிற்காக எந்த ரசாயனங்களும் போடுவதில்லை; சாதாரண, இயற்கையான உணவுதான் போடுகிறோம்'' என்று புளுகுகிறார்கள், பண்ணை முதலாளிகள். மேலும் ''குட்டையில் இறாலைத் தவிர மற்ற உயிரினங்கள் சாவதற்காகக் கூட வெறும் டீத்தூளையும், இலுப்பைப் புண்ணாக்கையும் தான் போடுகிறோம்'' என்கிறார்கள். சரி, அவற்றை ஏன் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டும்? இறால் மீன்களின் உடலில் சிவப்பணுக்கள் மட்டுமே உள்ளன. மற்ற மீன்களின் உடலிலோ வெள்ளை மற்றும் சிவப்பணுக்கள் உள்ளன. டீத்தூளும், இலுப்பைப் புண்ணாக்கும் வெள்ளையணுக்களை அழிப்பதால் இறால் தவிர மற்றவை இறந்துவிடும். ஆனால் இறக்குமதி செய்யப்படும் டீ சீட் கேக் (Tea Seed Cake) ரசாயனக்கலவையும் கலந்து பக்குவப்படுத்தப்பட்டது. இறாலுக்குப் போடும் வெளிநாட்டு உணவிலும் பல ரசாயனங்கள் கலக்கப்பட்டுள்ளன. எந்த ரசாயனமும் இல்லை, கழிவுநீர் நச்சு இல்லையென்றால் ஏன் அந்நீரையே சுத்திகரித்து மீண்டும் அவர்களே பயன்படுத்தலாமே? அதை செய்யாமல் ஆற்றிலும், பாசன நிலத்திலும் விடுவானேன்?

அசோக மன்னன் குளம்வெட்டி, சத்திரம் கட்டி, மரம் நட்டு பெயரெடுத்தது போல் எஸ் அண்டு எஸ், சிறீராம் கம்பெனிகளும் ஊருக்குள் சில உதவிகளைச் செய்து கொடுத்து வள்ளல் பெயர் ஈட்டியிருக்கிறார்கள். இந்த வள்ளல்கள் செய்துள்ள பெரிய உபத்திரவம் என்ன தெரியுமா? பண்ணை அமைப்பதற்காகக் கடலோரம், ஆற்றோரம் இருந்த மரங்களை, செடிகளை எல்லாம் வெட்டிவிட்டார்கள். கடற்கரையோரம் குறிப்பிட்ட கி.மீட்டர் வரை பயிர் செய்வதும் தடுக்கப்பட்டுவிட்டது. இவை இதுவரை செய்துவந்த பயன் என்ன தெரியுமா? புயல் காற்றின் வேகத்தை தடுத்து ஊரை பாதுகாத்ததும், கடலலை, வெள்ளம், மழையின் மண்ணரிப்பை தடுத்ததும்தான். தஞ்சை, நாகை, புதுக்கோட்டை மாவட்டக் கடற்கரையோரப் பகுதிகள் காவிரிப்பூம்பட்டினத்தைப் போல மெல்ல கடலுக்குள் மறையும் அபாயம் இனி ஏற்படலாம். தற்போது இப்பகுதிவாழ் மக்கள் ''கடல் ஊருக்குள்ள வந்துக்குட்டிருக்குங்க'' என்று கூறுவதைக் கேட்கலாம். இனி புயல் பாதிப்புகளும் இப்பகுதி வாழ் மக்களுக்கு அதிகரிக்கும். மேலும் நிலத்தடி நீர் இறால் பண்ணைகளால் உப்பாவதால் முதலாளிகள் வெட்டாத ஊருக்குள் இருக்கும் மரங்களும் பட்டுப்போகின்றன. மேலம் வடிகால் வாய்க்காலை மறித்தும், நீர்வடியும் கடலோரப்பகுதிகளை மேடாக்கியும் இறால் பண்ணைகள் அமைந்திருப்பதால் வெள்ளக் காலங்களில் நீர் விரைவாக வெளியேறவும் வழியில்லாமல் போய் விட்டது.

சுருக்கமாகச் சொன்னால்... இறால் பண்ணையை உவர் நிலத்தில் வைக்கலாமா என்றோ, அதன் செயல்பாடுகளுக்கு ஒழுங்குமுறைகள் - கட்டுப்பாடுகள் விதித்து நடைமுறையைச் சோதித்து பாதிப்பின்றி இயங்க அனுமதிக்கலாமா என்ற கேள்விக்கோ இடமில்லை என்கிறார்கள் சுற்றுச்சூழல் நிபுணர்கள். செயற்கையான இறால் பண்ணைகள் இருப்பதே, அது எவ்வளவு எச்சரிக்கையோடு தொடங்கப்பட்டாலும் பாதிப்புதான் என்பது அவர்களின் திடமான கூற்று.



படிப்பகம்

www.padippakam.com

# கோவா மக்களின் போர்க்குணம் மண்டியிட்ட ஆலை முதலாளிகள்

கேரிம் - கோவாவின் தலைநகர் பனஜியின் அருகில் அமைந்திருக்கும் கிராமப்புற பகுதி; கோவாவின் தஞ்சை எனக் கூறுமளவு வளம் நிறைந்தது கேரிம். தஞ்சைக்குக் காவேரி போலவே கேரிமுக்கு காண்டிபர் நதி. தென்னை, வாழை, பலா, அன்னாசி, மிளகு, முந்திரி, ஏலக்காய் என கோவாவின் பணப்பயிர்கள் விளையும் கேந்திரமான பகுதியும் கூட கேரிம். இதோடு, கேரிம் இயற்கையாகவே அமைந்த மழை நீர்ப்பிடிப்பு பகுதியுமாகும். கோவாவின் ஏரிகளும் ஓடைகளும் கண்மாய்களும் கேரிம் நீர்ப்பிடிப்புப் பகுதியில் இருந்துதான் தண்ணீரைப் பெறுகின்றன. பசுமை பூத்துக் குலுங்கும் இந்த மண்ணையும் வற்றாத நீர் நிலைகளையும் பாதுகாக்க கடந்த பத்து வருடங்களாகப் போராடி வந்த கோவா மக்களுக்கு இப்பொழுது இறுதி வெற்றி கிடைத்திருக்கிறது.

அமெரிக்காவின் மிகப் பெரிய பன்னாட்டு நிறுவனமான டியு - பாண்டும், நமது நாட்டின் தாபர் நிறுவனமும் இணைந்து, தங்களது இரசாயனத் தொழிற்சாலையை இந்த கேரிம் பகுதியில் அமைப்பதற்குக் கடந்த பத்து வருடங்களாகவே முயன்று வந்தன. 600 கோடி ரூபாய் மூலதனத்தில் திறக்கத் திட்டமிடப்பட்ட இத்தொழிற்சாலையில், டயர் உற்பத்திக்குத் தேவைப்படும் ''நைலான் 6,6'' என்ற மூலப்பொருள் தயாரிக்கப்படும்.

நைலான் தயாரிப்புக்காக ஹெக்ஸா மீத்தலின் மற்றும் அடிபிக் அமிலம் என்ற இரு இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தவுள்ளது ஆலை நிர்வாகம். ''இவை இரண்டும் அமெரிக்க அரசின் சுகாதாரத் துறையினால் கேடு விளைவிக்கக் கூடியவை எனப் பட்டியல் இடப்பட்டுள்ளன'' என்கிறார், சுற்றுச்சூழல் விரிவுரையாளர் நந்தகுமார் காமத். மேலும் இவர், ''தாபர் டியுபாண்ட் நிறுவனம் நைலான் தயாரிப்பு முறையை பரம ரகசியமாக வைத்திருக்கிறது. நமக்குத் தெரிந்தது 5 சதவீதம்தான்'' என்றும் குற்றஞ் சாட்டுகிறார்.

''இந்த இரு இரசாயனப் பொருட்களின் கழிவுகளை காண்டிபர் நதியில் விடுவதால், அவை நீரிலுள்ள பிராணவாயுவை எடுத்துக் கொண்டு இரசாயனச் சிதைவு அடையும்; இதன் காரணமாக, இந்த நதியில் வாழும் மீன்களை உண்ணுபவர்களுக்கு புற்று நோய் வரும் வாய்ப்பும் உள்ளது;'' மேலும் ''ஆலைப் போக்குவரத்திற்காக மரங்கள் அடர்ந்த பகுதிகள் பொட்டலாக்கப்படுவதால், மழைக் காலங்களில் மண் அரிப்பிற்கான சாத்தியக் கூறுகளை அதிகமாக்கும்'' என்கிறார்கள் நிபுணர்கள்.

இக்குற்றச்சாட்டுக்களை அடியோடு மறுக்கும் ஆலை நிர்வாகிகள், ''ஆலையில் இருந்து வெளியேறும் கழிவுநீர் காண்டிபர் நதி நீரைவிடத் தூய்மையானதாக இருக்கும்; அப்படியானதொரு உயர் தொழில் நுட்ப சுத்திகரிப்பு நிலையத்தை நாங்கள் அமைக்கவுள்ளோம்'' எனப் பதில் அளித்துள்ளனர். ஆனால் டியுத்பாண்டின் அமெரிக்கத் தலைமையகமோ, ''கோவாவில் அமையவுள்ள ஆலையின் சுத்திகரிப்புத் திட்டம் மிகுந்த குறைபாடு உள்ளதாகக்'' கருத்து தெரிவித்துள்ளது.

மாநில அரசு அமைத்த கமிட்டிகளும் கூட தொழிற்சாலை அமைவதால் ஏற்படக்கூடிய இந்த அபாயங்களை உறுதிப்படுத்தியுள்ளன. ஆனாலும் மாநில காங்கிரசு அரசோ தொழிற்சாலை அமைவதைத் தடுக்கவில்லை. இதைச் சாதகமாக்கிக் கொண்ட தாபர் - டியுபாண்ட் நிறுவனம் அரசு அனுமதி தரும் முன்பே, கடந்த அக்டோபரில் கட்டிட வேலைகளைத் தொடங்கியது. இதனையடுத்து மக்களின் போராட்டங்கள் தீவிரமடைந்தன; இருபத்தி மூன்றே வயதான நிலேஷ் நாயக்கின் இரத்தத்தால் அச்செம்மண் பூமி மேலும் சிவந்தது.

சட்டபூர்வமான வழிகளிலேயே தொடர்ந்து போராடினாலும், குட்ட குட்ட குனிந்து போகும் ஏமாளிகளாக இல்லை அம்மக்கள். சென்ற அக்டோபரில் தொழிற்சாலையின் அதிகாரிகள் கட்டிட வேலையைத் தொடங்க வந்த பொழுது, அவர்கள் வந்த கார்களையும் வேன்களையும் வழிமறித்துக் கற்களைக் கொண்டு தாக்கி விரட்டியடித்தார்கள்; தொழிற்சாலையில் இருந்த வெடி மருந்துப் பொருட்களைக் கொண்டு, தொழிற்சாலை கட்டிடங்களுக்குத் தீ வைத்துக் கொளுத்தினார்கள்; சுற்றுச் சுவர் முழுவதும் இடித்துத் தகர்க்கப்பட்டது.

சனவரி மாதத் தொடக்கத்தில் போலீசின் கைது - அடக்குமுறையைக் கண்டித்து, ஆலைக்குச் செல்லும் வழியெங்கும் பள்ளங்களை வெட்டி சாலை போக்குவரத்தைத் தடை செய்தார்கள். இப்போராட்டத்தின் பொழுது, தத்தாராம் தேசாய் உள்ளிட்ட பல தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். கைதானவர்களின் கண்களைக் கட்டி 'நிர்வாணப்படுத்தி' அடித்து அவமானப்படுத்தியது போலீசு. சாலைகளில் வெட்டப்பட்ட பள்ளங்களில் மண்ணைக் கொண்டு நிரப்புமாறும் நிர்ப்பந்தித்தது. போராட்டக்காரர்களை ''தடா'' சட்டத்தின் கீழ் கைது செய்து பீதியூட்டியது டிசௌசா தலைமையில் இருந்த மாநில காங்கிரசு அரசு.

தலைவர்கள் அவமானப்படுத்தப்பட்டதற்கு பழிக்குப்பழி வாங்க துடித்தார்கள் மக்கள். சனவரி 23-ந் தேதியன்று 2000-க்கும் அதிகமானோர் கலந்து கொண்ட சாலை மறியல் போராட்டம் தொடங்கியது. இப்போராட்டத்தை முன்னின்று நடத்திச் சென்றனர் கேரிம் பகுதி பெண்கள். குழந்தைகள் கூட அச்சமின்றி முன்னணி வரிசையில் அணி வகுத்திருந்தனர். ஆயுதப் போலீசார் தங்கள் துப்பாக்கிகளைக் காட்டி மிரட்டியபொழுதும் கூட அவர்கள் பின் வாங்கவில்லை.

அப்பொழுது போராட்டத்தின் முன் வரிசைக்கு வந்தான் நிலேஷ் நாயக். நூற்றுக்கணக்கான போலீசார் ஏந்திய துப்பாக்கிகளையும் அவற்றின் முன்னே துருத்தி தெரியும் கூரான கத்தி முனைகளையும் கண்டு அஞ்சிவிடவில்லை, அவன். குழந்தைகளே அஞ்சாத பொழுது, இளைஞனான அவனுக்கு அச்சம் எப்படி வரும்? ''பெண்களை மிரட்டும் கோழைகளா'' எனக் காரி உமிழ்ந்தான் போலீசைப் பார்த்து. எதிர்த்து நிற்பவர்களை சகித்துக் கொள்ளும் நாகரிகம் கொண்டதா போலீசு? நிராயுதபாணியாகத் துணிவோடு எதிர்த்து நின்ற அவ்விளைஞனைச் சல்லடைக் கண்ணாக துளைத்துச் சுட்டுக் கொன்றது.

நிலேஷ் நாயக்கின் உடல் தான் மண்ணில் சரிந்தது; அவனின் போராட்ட உணர்வும் உறுதியும் திரண்டு நின்ற மக்களின்

ஆலையின் முன்னுள்ள நிலேஷ் நாயக்கின் சமாதி: அவனின் மரணம் மலையைவிடக் கனமானது





படிப்பகம்

www.padippakam.com

கோபக் கனலை கொழுந்துவிட்டு எரியச் செய்தன. மறு நிமிடமே போலீசாரின் அனைத்து ஆயுதங்களும் செயல் இழந்து போயின. நிலேஷ் சிந்திய இரத்தத்துக்குப் பதிலடியாக அன்று ஒவ்வொரு போலீசுகாரனும் இரத்தம் சிந்தினான். அவர்களது 'மதிப்புமிக்க' அணிகலன்களும், ஆடைகளும் கிழித்தெறியப்பட்டு மண்ணில் வீசியெறியப்பட்டன. அரை நிர்வாணமாக இருக்கிறோம் என்பதையும் பொருட்படுத்தாது, "உயிர் பிழைத்தால் போதும்" என பின்னங்கால் பிடரியில் பட ஓடிப் போனார்கள் அவர்கள்.

மறுநாள் கடையடைப்பு போராட்டத்திற்கான அழைப்பு விடப்பட்டது. தாபர் - டியுபாண்ட் நிறுவனத்திற்குச் சொந்தமான 3 கோடி ரூபாய் பெறுமான அலுவலகப் பொருட்கள் இரண்டு பணப் பெட்டிகளோடு சேர்த்து தீ வைத்துக் கொளுத்தப்பட்டன; தீயணைக்க வந்த வண்டியும் போலீசு ஜீப்களும் கூட அன்று தீக்கிரையாகின.

சனவரி 25-ம் தேதி நடந்த நிலேஷ் நாயக்கின் இறுதி ஊர்வலத்தில் கிட்டத்தட்ட 500-க்கும் அதிகமாக அப்பகுதி மக்கள் கலந்து கொண்டனர். நாயக்கின் சடலத்தை ஆலை வாசலின் முன்னேயே புதைத்து, சமாதி எழுப்பி, மலர்களால் அலங்கரித்தார்கள். "ஆலையை அனுமதியோம்" என ஒவ்வொரு வரும் சபதம் எடுத்துக் கொண்டார்கள். அதன் பின் கேரிம் கிராமப் பகுதியில் அந்நியர் யாரும் நுழைந்து விடாதபடி 24 மணி நேரமும் கண்காணிப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டன; வருடா வருடம் பிப்ரவரி மாதம் நடக்கும் கோவாவின் சமய விழாவினைக் கூட ஆலை எதிர்ப்பு பிரச்சாரத்திற்குப் பயன்படுத்திக் கொண்டார்கள் கேரிம் பகுதி மக்கள்.



போராட்டக் களத்தில் கேரிம் பகுதி மக்கள்

நிலேஷ் இறந்த பின் வந்த நாட்கள் கொந்தளிப்பானவை என அரசே ஏற்றுக் கொண்டது. நிர்வாகமும் கோவாவில் ஆலையைத் தொடங்கும் தனது திட்டத்தைக் கைகழுவி விட்டதாகத் தெரிகிறது. தெற்கு மாநிலங்களில் ஒன்றில் - ஆந்திராவிலோ அல்லது தமிழ்நாட்டிலோ - ஆலையை நிறுவத் திட்டங்கள் தீட்டப்படுவதாகத் தகவல்கள் வெளிவருகின்றன.

கோவாவை மது, மாது, போதைப் பொருட்கள் எளிதாகக் கிடைக்கும் களிவெறியாட்ட அரங்கமாகத் தான் உலகெங்கும் ஆட்சியாளர்கள் அறிமுகப்படுத்தி வருகிறார்கள். ஆனால், கோவாவிற்கு மற்றொரு பக்கமுண்டு. பராம்பரிய மீன் பிடிக்கும் உரிமைக்காகவும், பாரம்பரியமிக்க விழாக்களை அரசு வர்த்தகமயமாக்குவதை எதிர்த்தும், விபச்சாரத்தைப் பெருக்கும் ஐந்து நட்சத்திர விடுதிகள், மசாஜ் பார்லர்களை எதிர்த்தும், சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் கோல்ஃப் மைதானங்களை எதிர்த்தும் - இப்படித் தங்களின் உரிமைகளுக்காகவும் சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் கடந்த பதினைந்து ஆண்டுகளாக கோவா மக்கள் நடத்தி வரும் போராட்டங்கள் ஏராளம். நமது நாட்டின் நீரையும், நிலத்தையும், காற்றையும் நஞ்சாக்கும் ஏகாதிபத்தியங்களின் சதித் திட்டங்களை எதிர்த்து நடைபெறும் போராட்டங்களாகவே இவற்றை நாம் காண வேண்டும்.

● ரஹீம்

## டியு - பாண்டும் ஓட்டுக் கட்சிகளும்

டியு - பாண்ட் அமெரிக்காவின் மிகப் பெரிய இரசாயன பன்னாட்டு நிறுவனமாகும்; "உலகிலேயே சுற்றுச்சூழல் மீது அக்கறையுள்ள முதல்தரமான நிறுவனம்" என தம்பட்டமும் அடித்துக் கொள்ளும் டியு - பாண்ட். ஆனால், இந்தியாவில் தாபருடன் இணைந்து நிறுவப் போகும் தொழிலகத்தில் ஏற்படும் விபத்து / பாதிப்புகளுக்குத் தனது அமெரிக்கத் தலைமையகம் பொறுப்பேற்காது என்ற விதியை ஒப்பந்தத்தில் நயவஞ்சகமாகச் சேர்த்துள்ளது. இதில் இருந்தே டியு - பாண்டின் முகவிலாசத்தை அறிந்து கொள்ளலாம்.

தாபர் - டியுபாண்ட் நிறுவனம் கேரிம் பகுதியில் 88.67 ஹெக்டேர் நிலப்பரப்பை வெறும் 1 கோடி ரூபாய்க்குப் பெற்றுள்ளது. அதே சமயம் இந்நிலத்தைச் சுற்றி சுவர் எழுப்ப 1 1/2 கோடி ரூபாய்க்கு "டெண்டர்" விளம்பரம் ஆலை நிர்வாகத்தால் கொடுக்கப்பட்டது. இப்படி அடிமாட்டு விலைக்கு நிலத்தை விற்றிருப்பவை மாநில அரசின் பொருளாதார மற்றும் தொழிற் வளர்ச்சி கழகங்கள். மேலும் தனது நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ள தண்ணீரின் அளவை இரு மடங்காக்க அதிகாரிகளுக்கு 25,000 ரூபாய் வரை இலஞ்சமாகத் தரவும் முயன்றிருக்கிறது.

கடந்த காங்கிரசு ஆட்சியின் போது முதல்வராக இருந்த வில்ஃப்ரெட் டிசௌசாவிடம் தனக்கிருந்த மறைமுக செல்வாக்கைப் பயன்படுத்தி, அரசின் பொருளாதார வளர்ச்சி கழகத்திடமிருந்த ஆலையின் 26 சதவீத பங்குகளில், 21 சதவீதத்தை தாபர் நிறுவனமே கைப்பற்றிக் கொண்டது; டியு - பாண்ட் கோவாவில் நுழைவதற்கு அடிக்கல் நாட்டியவரே தற்போதைய காங்கிரசு அரசின் முதல்வர் பிரதாப்சிங் ரானேதான். இதோடு எம்.ஜி.பி கட்சியைச் சேர்ந்த எதிர்க்கட்சித் தலைவரான காசிநாத் ஜால்மி, டியு - பாண்டின் நேரடியான ஆதரவாளர். டியு - பாண்டை எதிர்க்கும் பா.ஜ.க., தேர்தலின் பொழுது இக்கட்சியோடுதான் 'புனித'க் கூட்டு அமைத்தது.

Published and owned by R.SHANMUGARAJ, 4, Samiyar Thottam, Alandur Road, Saidapet, Madras - 600 015.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63 Arcot Rd, Madras - 600 024. Editor:R.SHANMUGARAJ

படிப்பகம்

www.padippakam.com

★ இதுவரை சீர்காழி கண்டிராத போர்க்கோலம்
★ போராளிகளை போலீசிடமிருந்து பாதுகாத்த கிராம மக்கள்
★ காக்கிச் சட்டைகளின் கைதுவேட்டை
★ பச்சிளம் குழந்தையை அடித்து கழனியில் வீசியெறிந்த போலீசின் கொலைவெறி
★ துரோகிகளின் ஆள்காட்டி வேலை

## இறால் பண்ணை அழிப்புப் போராட்டம்

# சீர்காழி சிவந்தது

காவல் துறையின் அனைத்துத் தயார்ரிப்புகளுடன் சீர்காழி மே - முதல் தேதியை எதிர் நோக்கியிருந்தது. காலை 6 மணியிலிருந்தே 'மயான அமைதி'யைக் கொண்டு வருவதில் போலீசு வெற்றி பெற்றது. பெட்டிக் கடைகள், தேநீர்க் கடைகள் உட்பட அனைத்தும் மூடப்பட்டன.

காலை 9.00 மணியளவில் சீர்காழி நகரத்தின் புதிய பேருந்து நிலையம் சுத்தமாக வழித்தெடுக்கப்பட்டு வெற்று மைதானமானது. பேருந்து நிலையக் கடைகள் மூடப்பட்டு, பேருந்துகள் அனைத்தும் நிலையத்தை விட்டு வெளியேற்றப்பட்டன. நிலையத்தில் தங்கியிருந்த மக்களனைவரும் திடீரென்று வெளியேற்றப்பட்டனர். நகரத்திற்கு வந்து செல்லும் பேருந்துகள் நிலையத்தின் வெளியே அமைந்த சாலை வழியே மட்டும் நின்று செல்ல அனுமதிக்கப்பட்டன. காவல் நிலையம் தொடங்கி பேருந்து நிலையம் வரையிலான பகுதியை போலீசு சுற்றி வளைத்தது. சிறப்பு காவற்படை உட்பட நூற்றுக்கணக்கான போலீசு தயார் நிலையில் நின்றது.

இரண்டு நாட்கள் முன்னதாக ஜெயாவின் புதிய விசுவாச ஐ.ஜி.யான வைகுந்தின் உத்தரவிற்கேற்ப சீர்காழிக்கு விரைந்தார், நக்சலைட்டுகளை அடக்குவதில் 'திறமையான' தேவாரம், பூம்புகார் பயணிகள் மாளிகையில் அமர்ந்து கொண்டு சீர்காழியை கவனித்துக் கொண்டிருந்தார். திருச்சி சரகத்தின் டி.ஐ.ஜி. சுப்பையா, நாகை மாவட்ட எஸ்.பி; டி.எஸ்.பி, சப் கலெக்டர் உட்பட பலரும் சீர்காழியில் குவிந்திருந்தனர்.

சீர்காழி முழுவதும் இறால் பண்ணை முதலாளிகள், அவர்கள் ஏற்கனவே அறிவித்திருந்த 'இறால் பண்ணை செழிப்புப் போராட்ட'த்தின் சுவரெழுத்தைக் கடைசி இரண்டு நாட்களில் அதிக அளவில் செய்திருந்தனர். மேலும் 'மே-1 இறால் பண்ணை தொழிலாளர்கள் பேரணி' என்ற சுவரொட்டியை சீர்காழி முழுவதும் ஒட்டியிருந்தனர். ஆனால் பேரணி ஏதும் அன்று நடக்கவில்லை.

காலை 9.45 மணியளவில் தென் மாவட்டங்களைச் சேர்ந்த தோழர்கள், 3 பேருந்துகள் மூலமாக வந்திறங்கினர். தோழர் கதிரவன் - ம.க.இ.க. மாநில இணை செயலரின் - தலைமையில் அணிவகுத்தனர். போலீசு தடுப்பரணாய் நிற்க நிலையத்தைச் சுற்றி மக்கள் கூடினர். தோழர் கதிரவன் 15 நிமிடங்கள் பேசினார். "மே-1 இறால் பண்ணை அழிப்புப் போராட்டம் அறிவித்து, தமிழகம் முழவதும் சுவர் எழுத்துப் பிரச்சாரம், 70-க்கும் மேற்பட்ட இடங்களில் பொதுகூட்டம் நடத்தி இன்று சீர்காழியில் கூடியிருக்கிறோம். தமிழக மக்க்ள் நம் பக்கம் ஆதரவாக இருக்கின்றனர். இறால் பண்ணை முதலாளிகளுக்கு ஆதரவாக அரசு காவல் துறையை முடுக்கி விட்டு செயல்படுகிறது. நேற்று வரை. தமிழகம் முழுவதும் நூற்றுக் கணக்கான தோழர்களை கைது செய்து சிறையில் அடைத்திருக்கிறது. இருப்பினும் பல்வேறு தடைகளை மீறி இன்று நாம் கூடியிருக்கிறோம். ஊர்வலம் நடைபெறும். வங்கக் கடலில் நூற்றுக் கணக்கில் மிதந்து வரும் வெளிநாட்டுக் கப்பல்கள் மீன்களை மட்டுமல்ல; இந்நாட்டு மீனவர்களை வாழ்க்கையையும் சேர்த்து அரிக்கின்றனர்

பண்ணையை ஆதரித்து காளானாகப் பெருகிய சுவரெழுத்துகள் - சுவரொட்டிகள்.






படிப்பகம்

www.padippakam.com

மணி சங்கர் அய்யர் உலக வங்கியிடம் கடன் வாங்கி இறால் பண்ணைகள் அமைத்து, விவசாயிகளை நாடோடியாக மாற்றுகிறார். கேட்டால் அந்நியச் செலவாணி - டாலர் கிடைக்கிறதாம். டாலரை வைத்து தேச முன்னேற்றமாம். இந்த அடிமைத் தளையறுப்போம். காட் ஒப்பந்தம், உலக வர்த்தகக் கழகத்தை வேரறுப்போம். நமது கடலில் உலா வரும் அந்நியக் கப்பல்களை வெளியேற்றுவோம். இறால் பண்ணைகளை அழிப்போம். இது இரண்டாம் சுதந்திரப் போராட்டம்'' என்று முடித்து ஊர்வலம் தொடர அறைகூவினார்.




பேருந்து நிலையமும் போர்க் களமானது. எதிர்ப்பு முழக்கமிடும் தென் மாவட்டத் தோழர்கள்

செங்கொடிகள் ஓங்கி உயர போராட்ட பதாகையை இருவர் தூக்கிப் பிடிக்க, பெண்களும் குழந்தைகளும் முதலில் அணிவகுக்க, விண்ணதிரும் முழுக்கங்களுடன் ஊர்வலம் அங்குலம் அங்குலமாக முன்னேறியது. பதறிப்போன போலீசு, தோழர் கதிரவனிடம் ஊர்வலத்தைக் கைவிடும்படி நைச்சியமாய் பேசியது. ''நீங்கள் ஊர்வலத்திற்கு அனுமதி வாங்கவில்லை. சட்டம் - ஒழுங்கு பிரச்சினையை ஏற்படுத்தாதீர்கள், நாங்கள் இதை அனுமதிக்க முடியாது'', என்று கடமை உணர்வு கொண்ட ஒரு அதிகாரி கேட்க, ''இந்த நாட்டை பல்வேறு வழிகளில் விற்று வரும் துரோகிகளைக் கைது செய்ய உங்கள் சட்டம் - ஒழுங்கிற்கு வக்கு இல்லை. அர்சத் மேத்தாவை எட்டு மணி நேரம் ஏ.சி. அறையில் வைத்து பாதுகாப்பாக அனுப்புவீர்கள். இந்நாட்டு விவசாயிகளை நாடோடியாக மாற்றுகின்ற இறால் பண்ணைகளை அழிக்க வேண்டும். இந்நாட்டை காலனியாக்க விட மாட்டோம் என்றால் உடனே உங்கள் சட்டம் - ஒழுங்கு பாயும்'', என்றார் தோழர் கதிரவன். மூக்குடைபட்ட போலீசு அமைதியானது.

இடையில் அனைத்துப் பத்திரிகையாளர்களும் தோழர். கதிரவன், சீர்காழி வட்டார வி.வி.மு. செயலர் தோழர் அம்பிகாபதி இருவரிடமும் பேட்டி கண்டனர். மு.க. ஸ்டாலின், சசிகலா உட்பட அனைத்து ஓட்டுக் கட்சிகளின் தலைவர்களும் பினாமி பெயரில் இறால் பண்ணைகள் வைத்திருப்பதையும், 'பாஸ்க்' என்ற பண்ணையில் சக்திவேல் என்ற முன்னாள் ரா (RAW) அதிகாரி 250 அடியாட்களுக்குப் பயிற்சி அளித்து ஆயுதங்களோடு காத்திருப்பதையும், லாப்டி போன்ற தன்னார்வக் குழுவினர் எப்படி போராட்டத்தில் பின்வாங்கினர் என்பதையும் சுட்டிக் காட்டினார்கள், முன்னணியாளர்கள்.

இப்படி 1.30 மணி நேரம் போராட்டத்திற்குப் பிறகு, முழக்கத்தோடு ஊர்வலம் நகர்ந்த போது பெண்களையும், குழந்தைகளையும் பிடித்துத் தள்ளிய போலீசு அனைவரையும் வலுக்கட்டாயமாகப் பேருந்தில் ஏற்றிச் செல்ல, முழக்கங்களோடு பேருந்து சென்று மறைந்தது.

பின்னர் நாள் முழுவதும், ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு.,-வினர் சீர்காழி நகரெங்கும் ஊர்வலங்களை நடத்திக் கைதாயினர். ஊர்வலத்தினர் எங்கு இறங்கி, எப்படி ஊர்வலம் சென்றார்கள் என்பதறியாமல் போலீசு தத்தளித்தது. ரயில்கள் மூலமும், நகரத்தின் சுற்றுப் பாதைகளிலும் வந்திறங்கிய தோழர்களின் முழக்கத்தை நாள் முழுவதும் சீர்காழி நகரம் கேட்டவாறு இருந்தது.

இறுதியாக, வடமாவட்டங்களின் அணியினர் மாலை 5.00 மணி அளவில் பேருந்து நிலையத்திற்கு ஊர்வலமாக வந்து, சாலையில் அமர்ந்து மறியல் செய்து பின் கைதாயினர்.

நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள், குழந்தைகள் உட்பட மொத்தம் எழுநூறு பேர் கைதாயினர். பெருந்தோட்டம் அருகில் இறால் பண்ணையை நோக்கிச் செல்லும் வழியில் 22 தோழர்கள் கைது செய்யப்பட்டனர். ஏப்ரல் மாதத்தின் கடைசி நாட்களில் தமிழகம் முழுவதும் நூற்றுக்கணக்கானவர்களைக் கைது செய்து, பல்வேறு மத்திய சிறைகளில் அடைத்தது போலீசு. பொறுப்பிலுள்ள தோழர்கள் கிடைக்காத போது, அவர்களின் உறவினர்களையும், ஆதவாளர்களையும் வீடு புகுந்து தாக்கியும் இழுத்துச் சென்றது. இவ்வளவு தடைகளையும் மீறி, போலீசின் கண்ணில் மண்ணைத் தூவி சீர்காழி


புதிய ஜனநாயகம் வெளியீடு

**காட்-டாட்சி**

விலை ரூ. 30/-

நூலினை அஞ்சலில் பெற நூலின் விலையுடன் ரூ. 8-ஐச் சேர்த்து பண விடைத்தாள் மூலம் அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

கிடைக்குமிடம்

**கீழைக்காற்று**

10, ஔலியா சாகிப் தெரு,
எல்லீசு சாலை,
சென்னை-2.




படிப்பகம்

www.padippakam.com

யில் மே-1 அன்று இறங்கினார்கள், நூற்றுக்கணக்கான தோழர்கள். சில மாதங்களேயான கைக்குழந்தைகள், 15 வயதுக்குப்பட்ட சிறுவர் - சிறுமியர், முதியவர்கள், திரளான பெண்கள் என அனைத்துப் பிரிவினரையும் ஊர்வலத்தில் பார்க்க முடிந்தது. கொளுத்துகின்ற வெயிலில் குடிக்கத் தண்ணீரும் இல்லாமல் சிறிதும் தளர்வின்றி முழக்கமிட்டு போராடிய இந்தக் காட்சிகளை சீர்காழி நகர மக்கள் இதற்கு முன் கண்டிருக்க மாட்டார்கள்.

மே-1 அன்று கைது செய்யப்பட்ட தோழர்கள், அரைப் பட்டினியோடு 2-ந் தேதி பின்னிரவு 12 மணிக்கு திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

மே-4 ''பந்தை''யொட்டி ஆயிரக்கணக்கில் ஏனைய கட்சிக்காரர்கள் சிறையில் அடைக்கப்பட்டு, சிறை பிதுங்கி வழிந்தது. சிறையில் நமது தோழர்கள் பொதுக் கூட்டங்கள், கலை நிகழ்ச்சிகள் என பல்வேறு நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடத்தி வருகின்றனர். சிறையில் கைது செய்யப்பட்ட பிற ஓட்டுக் கட்சியினர் நமது நிகழ்ச்சிகளின் போது ரூ. 150 நன்கொடை அளித்துள்ளனர்.

**திருச்சி நகர டி.ஐ.ஜி. சுப்பையா பத்திரிக்கையாளர்களிடம் தெரிவித்த 'பொன்' மொழிகள்:**

''சீர்காழியில இருக்குறவனுக்கு - வருசத்துக்கு 4 மாதம் மட்டும் வேலை பார்த்தா போதும், அதுவும் பயிர் அறுக்கணும், நாத்து நடணும், களை பறிக்கணும் - வேற எந்த வேலையும் செய்யமாட்டாங்க - மிச்ச 8 மாதம் சோம்பேறியா சுத்தணும். இறால் பண்ணையில் 365 நாளும் வேலை கிடைக்குது, தினம் 50 ரூபாய் சம்பளம் உண்டு, ஆனா இங்க இருக்கிற சோம்பேறிப் பயல்களுக்கு இது ஒத்து வரல - அதனால எதுக்குறானுங்க.

இறால் பண்ணை இருக்கிற நிலமெல்லாம் 10 வருசமாய் பாசனமில்லாத பயிர் செய்யாத நிலந்தான். நிலத்தை சும்மாவிட்டாலும் விடுவேனே தவிர, இறால் வளர்க்க குடுக்க மாட்டேன்னு சொல்றது என்ன நாயம்? சரி, விவசாயத்தைக் கூட ரொம்ப கஷ்டப்பட்டுச் செய்றானுகளா? இல்லை. காவிரியில் தண்ணி வந்தா, இடுப்புக்குனியாம வரப்புல நின்னுகிட்டு தண்ணீயை காலால் நெம்பி விட்டு வயலுக்குப் பாய்ச்சுவானுங்க - இதான் இவங்க விவசாயம் செய்ற லட்சணம்.

அரசாங்கம் கூட டாக்டர் சுவாமிநாதன் தலைமையில ஒரு நிபுணர் குழு அமைச்சு, அவங்க இங்க வந்து ஆராய்ச்சி செய்ஞ்சு நிபுணர் குழு அறிக்கையைக் கொடுத்த பிறகுதான், இறால் பண்ணை மசோதாவைக் கொண்டு வந்தது. கூடவே இன்னைக்கு வரை விளைநிலம் எதுமே இறால் பண்ணைகளுக்கு வழங்கப்படல.

இந்த போராட்டத்தை நடத்றவனுங்க நக்ஸ்லைட்கள். இதுக்காக பரவலா பிரச்சாரம் செய்ஞ்சுருக்கானுங்க. பம்பாயில் மாதுங்கா, பெங்களூர், ஐதராபாத், கேரளா போன்ற மாநிலங்கள்ல ஆங்கிலத்தில் 'இறால் பண்ணை அழிப்புப் போராட்டம், தமிழ்நாடு''ன்னு சுவரெழுத்து எழுதிருக்கானுங்க. தமிழ்நாட்டில் கடற்கரைபகுதி உட்பட எங்கும், பெயிண்ட் வச்சு சுவரெழுத்து செய்ஞ்சுருக்கானுங்க.

பாருங்க, நக்ஸ்லைட்டா இருந்தாலும் பேரு மட்டும் அழகா மக்கள் கலை இலக்கியக் கழகம்னு வைச்சிருக்கான்க'' என்றார் டி.ஐ.ஜி. சுப்பையா. இனி இறால் பண்ணை முதலாளிகள் தங்கள் சங்கத்திற்கு இவரையே தலைவராகத் தேர்ந்தெடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**காக்கிச் சட்டைகளின் வேட்டைக் காடானது பெருந்தோட்டம் கிராமம்**

''இதற்கு முன் வெட்டு குத்து, அரிவாள் சண்டைகள் எத்தனையோ நடந்திருக்கின்றது; இறால் பண்ணையை எதிர்த்து கடந்த மாதங்களில் பல போராட்டங்களை நடந்தியிருக்கின்றோம். அப்போதெல்லாம் வராத போலீசு இப்போது நூற்றுக்கணக்கில் வருவது ஏன்? இதற்கு முன் இப்படிப்பட்ட அடக்குமுறையை நாங்கள் பார்த்ததுமில்லை, சந்தித்ததுமில்லை உங்களை அடக்குவதற்கு போலீசு இத்தனை முனைப்பு காட்டுவது ஏன்?'' - இது பெருந்தோட்ட கிராம மக்களின் கேள்வி.



முன்னேறிய ஊர்வலத்தைத் தடுத்து நிறுத்திய போலீசு.

மே-1 போராட்டம் சீர்காழியில் தற்காலிகமாய் முடிந்தவுடன் நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் பாஸ்கரன் கொடுத்துள்ள பத்திரிக்கைச் செய்தியில் ''சீர்காழியில் நடந்த ஊர்வத்திற்கு, வெளி மாவட்டங்களில் இருந்ததுதான் கலந்து கொண்டார்கள். மொத்தத்தில் கைதானவர்களில் 5 சதவீதம் பேரே நாகை மாவட்டத்தில் இருந்து கலந்து கொண்டுள்ளனர். உண்மையில், இறால் பண்ணைகளால் பாதிப்பு ஏற்பட்டிருந்தால் கிராம மக்கள் திரளாகக் கலந்து கொண்டிருப்பார்கள்...'' - முன்னர் கண்ட கிராம மக்களின் கேள்விக்கான பதில் இதுதான்.

பெருந்தோட்டம், திருவெண்காடு, கோனையாம் பட்டினம், தென்னாம் பட்டினம் ஆகிய கிராமங்களில் உள்ள விவசாயிகளும், சாவடிக் குப்பம், நாயக்கர் குப்பம், மடத்துக்குப்பம், கீழமூவர்கரை ஆகிய குப்பங்களில் உள்ள மீனவர்களும், கடந்த 3 மாதங்களாக நாம் நடத்தியுள்ள இறால் பண்ணை அழிப்பு போராட்டத்தின் பிரச்சாரத்திற்கு பல்



படிப்பகம்

www.padippakam.com

வேறு வகைகளிலும் ஆதரவு தந்துள்ளனர். பொதுக்கூட்டங்கள் நடத்த ஏற்பாடு செய்வது, நமது தோழர்களுக்கு தங்குமிடம், உணவு தந்து பராமரிப்பது என இறுதியில் மே-1 அன்று போராட்டத்திற்கு ஆயிரக்கணக்கில் கலந்து கொள்வதற்கு வருவதாகவும் இருந்தனர். பின்னர் நமக்கு நேரடியாக உதவி செய்வர்களெல்லாம் ஆள்காட்டிகள் மூலம் கைது செய்யப்பட்டனர்.

ஆம், அப்படிப்பட்ட அடக்குமுறையையும், போலீசின் வெறியாட்டத்தையும் அக்கிராமத்து மக்கள் இதுவரை சந்தித்ததில்லை. 29-ந் தேதி அங்கிருந்த நமது தோழர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டதும் - அங்கு என்ன நடந்தது என்பது இன்று வரை முழுமையாக வெளி உலகிற்குத் தெரியாமல் போனது.

பெருந்தோட்டம் கிராமத்தில் மொத்தம் 18 தெருக்கள் உள்ளன. தெருவுக்கு 5 பேரைக் கைது செய்ய வேண்டும் என்று இலக்கு வைத்து போலீசு விரட்டியதாக பெண்கள் இருவர் தெரிவித்தனர்.

கண்ணன், சவுந்தர்ராஜன் என்ற இளைஞர்கள் இருவரும், இரண்டு இரவுகள் தென்னை மரத்தில் கயிறு கட்டிக் கொண்டு தங்கியதாக தெரிவித்தனர். மேலும், ''மே 5-ந் தேதி வரை வெளியாட்கள் யாரையும் ஊருக்குள் நுழைய விடக்கூடாது. மீறி வந்தால், உங்களைத் தான் அடித்து நொறுக்குவோம்'' என்று மக்களை போலீசு அடிக்கடி மிரட்டிச் செல்வதாகவும் தெரிவித்தனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சின்னக்குஞ்சு, அகோரம், ராம்தாஸ் - மூவரும் சகோதரர்கள், ராஜா, ஜெயகுந்த், தொட்டிதம், பெருமாள், பன்னீர், நச்சி, சின்ன பிள்ளை, முத்துக்கிருஷ்ணன் உட்பட இருபது பேர் 28.4.95 அன்று ஆள்காட்டிகள் மூலமாக பெருந்தோட்டத்தில் கைது செய்யப்பட்ட கிராமவாசிகள்.

பட்டதை மக்கள் நன்கு அறிந்திருந்தனர் - நமக்கும் தெரிவித்திருந்தனர்.

மக்களை போலீசு மிரட்டிய போதெல்லாம் வி.எம்.குழுவினர், ''உரிய நபர்களை ஒப்படைத்து விட்டால் போலீசு ஏன் தொந்தரவு செய்யப் போகிறது?'' என்று அன்பாய் மக்களைக் கடிந்து கொண்டனர். நமது பிரச்சாரம் வீச்சாக நடந்த போதெல்லாம் ''ம.க.இ.க., வி.வி.மு. இவனுங்கெல்லாம் நக்சலைட்கள், பயங்கரவாதிகள்; உங்களை பிரச்சினையில் மாட்டவைத்து விட்டு ஓடிவிடுவார்கள், எப்போதும் நாங்கள் தான் உங்களருகில் இருப்போம்'' என்று மக்களிடம் பாசத்தைக் கொட்டினார்கள். நடந்தது என்ன? வி.எம்.குழுவின் சீர்காழி தாலுகாவின் செயலர் - குணசேகரன், மாவட்ட செயலாளர் டி.கே.எஸ்.

மே மாதம் மூன்றாம் தேதி அங்கு ஏற்கனவே வேலை செய்த தோழர் ஒருவர் அனைத்து ஆபத்துக்களையும் எதிர்கொண்டு சேகரித்த தகவல்களை கீழே தருகின்றோம். இவை மொத்த அடக்குமுறையின் சில நிமிடங்களை மட்டும் படம் பிடித்துக் காட்டுகிறது. அடக்குமுறையை மீறிக் கசிந்து வரும் இந்த செய்தித் துளிகள் உண்மையை ஓரளவேனும் உலகிற்குணர்த்தும்.

பேருந்தில் பார்த்த உடனே தோழரை அடையாளம் கண்ட ஊர்ப்பெரியவர், ''ராஜா ஊருக்கு வரவேண்டாம். வந்தால் ஆள்காட்டிகள் மூலம் கைது செய்யப்படுவீர்கள்'' என்றார். அவரை சமாதானப்படுத்தி, அவரறியாமல் சில கிலோ மீட்டர்கள் நடந்து சென்று கிராமத்தை அடைந்ததும், முதலில் தென்பட்ட பெரியவர் முனியசாமி ஏப்ரல் 28 முதல் மே 2 வரை நடந்த நிலவரத்தைக் கூறுனார். ''ஒரு மணி நேரத்திற்கு ஒரு தடவை 5 அல்லது 6 வேன்களில் போலீசு வந்து பீதியூட்டுவது, இரவில் அதிகமாக வருவது, நடுச்சாமத்தில் நடுவீட்டுக்குள் வந்து விரட்டுவது, வீடுகளின் மேல் கல்லெறிந்து பின்னர் விசாரிப்பது - இப்படி தொடர்ந்து நடைபெற்றது. சரிபாதி மக்கள் குறிப்பாக, ஆண்கள் ஊருக்குள் இல்லை. இருப்பவர்களும் இரவில் தங்குவதில்லை'' என்றார் பெரியவர் முனியசாமி. மேற்கொண்டு கிராமத்திற்குச் செல்ல வேண்டாம் என்று எச்சரித்துவிட்டு அவர் சென்றுவிட்டார்.



சிறுமியரும் கைக்குழந்தையும் கூட கைதாவதில் இருந்து தப்பவில்லை

### ஆள்காட்டிகளும், விட்டு-விலகிய வி.எம்.குழுவும் - லாப்டி இயக்கமும்

அகோரம் பி.காம் - ம.தி.மு.க.வைச் சேர்ந்தவர், லண்டன் பாலு, அணுகுண்டு வீரமுத்து - அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள், மணிமாறன் - வி.எம். குழு - இவரது தந்தை லாலா பாண்டியன், சேவு கணேசன், விஸ்வநாதன், அண்ணாதுரை - இவர்கள் அனைவரும் இறால் பண்ணைகளில் வேலை பார்ப்பதோடு, போலீசுக்கு ஆள்காட்டியாகவும் செயல்

ஜனார்த்தனன் - இருவரும் திருவெண்காடு காவல் நிலையத்தில் மே 3-ந் தேதி வரை பெருந்தோட்டம் கிராமத்தில் நுழையமாட்டோம் என கையெழுத்திட்டு பாதுகாப்பாக ஓடினர். அக்காவல் நிலைய ஆய்வாளர் நம்மிடம், ''பாரு, அவனுங்க பொழைக்கத் தெரிஞ்சவனுங்க, நீங்க மட்டும் ஏன் அடி வாங்கிச் சாவணும்'' என்றார்.

லாப்டியைச் (கிராம சுயராஜ்ஜிய இயக்கம்) சேர்ந்த பொறுப்பாளர்கள், மாதச் சம்பளம் வாங்கும் ஊழியர்கள் அனைவரும் ஒரு வாரம் முன்னதாக ஊரைவிட்டு காலி செய்தனர். போராட்டம் நடக்கும் போது ஊரில் இருக்கக்

தொடர்ச்சி 2-ம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com





# இதுதான் இன்றைய இந்தியா

ஸ்டார் டி.வி.யும் எம் டி.வி.யும் போதாதென்று நமது "மெட்ரோ சானலும்" பரப்பி வரும் சீரழிந்த ஏகாதிபத்திய இசை கலாச்சாரத்தின் விற்பன்னர்கள். ஆங்கிலத்தில் சுருக்கமாக இவர்களுக்கு "வீ.ஜெ" என்று பெயர். புரிந்து கொள்ளும்படிச் சொன்னால் தமிழ்த் திரையுலகை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் ரகுமான், பிரபுதேவாவின் குருமார்கள்; மைக்கேல் ஜாக்சன் வகையறாக்களின் கார்பன் பிரதிகள். இளைஞர்கள் சினிமா கதாநாயகர்களைப் பார்த்து உடை, முடியலங்காரங்களை மாற்றிக் கொண்ட காலமெல்லாம் மலையேறிவிட்டது. இன்று கதாநாயகர்களுக்கே இவர்கள்தான் கதாநாயகர்கள். இதோடு பன்னாட்டு நிறுவனங்களின் உள்நாட்டு தரகுக் கும்பலின் செல்லப் பிள்ளைகள்; காதல், காமம், தனிமையைப் பற்றி மட்டுமே பாடிவிட்டு, "போதை மருந்து வேண்டாம்" எனப் போதிப்பார்கள். இவர்களின் காட்டுக் கூச்சலுக்கு, வெறிபிடித்த இசைக்கு வானொலியிலும், வானொளியிலும் தனியாக நேரம் ஒதுக்கி உபசரிக்கிறது மைய அரசு.

இதோ அவுரத் (பெண்) என்ற உருது நாடகத்தின் காட்சிகள் இவை. பாதிக்கப்பட்டவர்களே அந்தந்த கதாபாத்திரங்களை ஏற்று நடிப்பதுதான் இந்த நாடகத்தின் சிறப்பு. ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த பூர்ணச்சந்திர ராவ் என்ற கலைஞனின் படைப்பு இது. மூன்றாண்டுகளுக்கு முன்பு ஆந்திர நெசவாளிகள் பட்டினியால் இறந்து போய் கொண்டிருந்த பொழுது அவர்களைக் கொண்டு "எங்களையும் வாழ விடு" என்ற தெருமுனை நாடகத்தை நடத்தினார், இவர். ஆதிவாசிகள், விவசாயிகள், ரிக்ஷா வண்டி இழுப்போர்... இப்படி சமூக அடித்தட்டு மக்களின் பிரச்சினைகள் தான் இவரது நாடகங்களின் கரு; அவர்கள்தான் நடிகர்கள்; அவர்கள் வாழும் பகுதிகள் தான் நாடக அரங்கம். பாராமுகமாய் அரசு இருக்கும்பொழுது அம்மக்களின் ஆதரவு மட்டும்தான் இதற்கான வேரும் விழுதும். அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்துவது, போராடுவதற்கான மனவுறுதியைக் கொடுப்பது - இவைதான் இந்த நாடகங்களின் நோக்கம்.

சீரழிவை விதைக்கும் கலைஞர்களுக்கும் அவர்கள் கூத்தடிக்கும் தொலைகாட்சி நிறுவனங்களுக்கும் சலுகைகளை வழங்கி ஊக்குவிக்கும் இக்கேடுகெட்ட அரசு மக்கள் கலைஞர்களை புறக்கணிப்பது மட்டுமல்ல சிலநேரம் ஒடுக்கவும் செய்கிறது. மக்களுக்காகக் குரல் எழுப்பும் கலைஞர்களை, எழுத்தாளர்களைக் கைது, சிறை என அடக்குமுறை ஏவுவது தான் இதுவரை நடந்துள்ளது. அரசு சீரழிவு - வணிகக் கலைஞர்களுடன் கரம் கோர்த்திருக்கும்போது, உழைக்கும் மக்கள் முற்போக்கு கலைஞர்களுடனல்லவா கை கோர்க்க வேண்டும்?





படிப்பகம்